சக்தி மலர்

க.95
3472

தி. ஜ. ர.

3472

எப்படி எழுதினேன்?

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

தமிழ் வளர்ச்சி என்கிருர்கள்; கலைமலர்ச்சி என்கிருர்கள். வெறும் கூச்சலால் தமிழ் வளருமா? கலை மலருமா? தமிழன் வாழவேண்டும்; வளர வேண்டும். கலையும் மொழியும், வாழ்வுச் செழிப்பிலே பூக்கும் மலர்கள்; அந்த வாழ்வையே பரிமளிக்கச் செய்யும் அணிகளுந்தான். கலையையும் மொழியையும் பற்றி, பற்பல ரசமான கருத்துக்களை ஆசிரியர் கூறுகிருர்.

3472

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

Presented by
SP. V.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

எப்படி எழுதினேன்

ஸ்ரீ வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்
Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

எப்படி
எழுதினேன்

3472

ஆசிரியர் :
தி. ஜ. ர.

சக்தி காரியாலயம்
வடக்கு வெளி வீதி :: மதுரை

முதற் பதிப்பு: பிப்ரவரி 1943

சகல உரிமைகளும்
சக்தி காரியாலயத்தாருக்கு

சக்தி பிரஸ் லிமிடெட், காரைக்குடி

பதிப்புரை

கலை, மொழி, இலக்கிய வளர்ச்சிகள் சம்பந்தமாக, அன்பர் தி. ஜ. ர. அவ்வப்போது எழுதிய சில கட்டுரைகள் இவை.

ஆசிரியருடைய கருத்துக்கள் அத்தனையையும் அப்படி யப்படியே எல்லாரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதில்லை. ஆனால், நாணயமும் அந்தரங்க சுத்தியும், தமிழ்க் கலை, இலக்கிய வளர்ச்சி ஆர்வமும் கொண்ட ஒருவருடைய கருத்துக்களுக்குச் செலுத்தவேண்டிய மதிப்பை மட்டில், அனைவரும் அவைகளுக்குச் செலுத்தினால் போதும். மொழியும் கலையும் வாழ்விலே வேரூன்றியவை, வாழ்வோடு வளர்பவை என்ற கருத்தைப் பலவிதங்களில் அவர் வற்புறுத்துகிறார்.

வளர்ச்சியும் வாழ்வும் விரும்பும் தமிழர் அனைவரும், தீவிரமாய்ச் சிந்திக்கவேண்டிய பிரச்னைகள் இந்த நூலில் நிறைந்திருக்கின்றன.

சக்தி காரியாலயத்தார்.

3472

நன்றி

இந்தக் கட்டுரைகளில் 2, 3, 4, 7, 8, 10, 11, 12, 14, 15, 17, 18 இவை 'ஹனுமா'னில் வெளியானவை. அவற்றின் உரிமையை அனுமதித்த 'ஹனுமான்' அதிபர் திரு. சுந்தரமையர் அவர்களுக்கும், 'கலைமக'ளில் வெளியான முதல் கட்டுரையை உபயோகித்துக் கொள்ள அனுமதித்த 'கலைமகள்' ஆசிரியருக்கும் எனது மனப்பூர்வமான நன்றி உரியதாகும். 6, 9, 16 கட்டுரைகள் 'ஊழிய'னிலும், 5, 13 கட்டுரைகள் 'சுதந்திரச் சங்'கிலும் வெளியானவை. அவற்றின் அதிபர்களுக்கும் எனது நன்றியைச் செலுத்துகிறேன்.

—தி. ஜ. ர.

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
1.	எப்படி எழுதினேன்?	1
2.	ரஸிகர் திருக்கூட்டம்	8
3.	புதுப் பதங்கள் உற்பத்தி	12
4.	ஸ்ரீமான் பொதுஜனம்	19
5.	என்ன எழுதுவது?	23
6.	கலையும் கலைஞனும்	27
7.	எளிய தமிழ்க் கூச்சல்	31
8.	சங்கீத சுகம்	36
9.	தமிழ் நாடகம்	40
10.	பாஷை மனப்பிராந்தி	44
11.	ஐயா, விமர்சகரே!	48
12.	இலக்கிய நடை	52
13.	சொல் வலிமை	56
14.	புஸ்தகப் பூந்தோட்டம்	60
15.	எண்ண ஜாலம்	65
16.	கலையும் புலமையும்	68
17.	வாழ்வும் மொழியும்	72
18.	கலை - பல துளி	79

எப்படி எழுதினேன்?

என் சிறந்த கதையை நான் எப்படி எழுதினேன் என்று சொல்வது மிகவும் சிரமமான காரியம். என் கதைகள் அத்தனையையும் எப்படி எழுதினேன் என்று சொல்வதென்றால், அது என்னால் முடியும். 'சிறந்த' என்ற அடைமொழியால்தான் உபத்திரவம். சிறப்பில்லாத கதை ஒன்றைக்கூட நான் எழுதியதாக எனக்குத் தோன்றவில்லை; சிறந்த கதை ஒன்றுகூட நான் எழுதியதில்லை என்று சொல்லும் (எண்ணமாட்டார்கள், முடியாது என்று எனக்கு நிச்சயம் உண்டு) நண்பர்களும் உண்டு. ஆகையால், என் சிறந்த கதையை நான் எப்படி பொறுக்குவது? அவர்கள்தான் எப்படிப் பொறுக்குவது? என் கதைகளில் பலவற்றை நான் எப்படி எழுதினேன் என்று சொல்வதே எனக்கு எளிதாயிருக்கும்.

அடுத்தபடி, இன்னும் ஒரு சங்கடம். சொந்த விஷயம் எதுவானாலும் சரிதான்; அதைப்பற்றிச் சொல்லும் போது, கேட்பவருக்குச் சலிப்புத் தட்டாதபடி பார்த்துக் கொள்வது அவ்வளவு சுலபமல்ல. சுருக்கமாகச் சொன்னால்தான், இந்த 'அபாய'த்துக்குத் தப்பித்துக்கொள்ள முடியும். தமிழ் நாட்டின் தலைசிறந்த—தமிழர்களின் பேரபிமானத்தைப் பெற்ற—இரண்டோர் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வேண்டுமானால், மிகச் சுருக்கமாக இவ்விஷயத்தைச் சொல்ல முடியும். என்றாலும், என்னைப் போலவே மூலைமுடுக்கில் அடங்கிக்கிடக்கும் வேறு பல சிறுகதாசிரியர்களாலும், அப்படிச் 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' சாத்தியமல்ல. "மார்க் ட்வைனைப் பிரித்து வைத்துக்கொண்டேன்; எழுதினேன் என் கதையை. ஓ' ஹென்ரியைப் புரட்டினேன்; ஓட்டினேன் பேனாவை" என்று அவர்கள்தான் தாங்கள் கதை எழுதிய

கதையை வெகு சுருக்கமாகச் சொல்ல முடியும். கதை எழுதுவதில் இந்தக் குறுக்கு வழியில் நடக்க, எங்களில் பலருக்குத் தெரியவில்லை; துணிவும் இல்லை. எங்கள் பதில் எப்படிச் சுருக்கமாய் இருக்க இயலும்?

என்னைப்போன்றோர் ஒரு கதையை எழுதுமுன், எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்திருக்கும்; எவ்வளவோ பாத்திரங்கள் உலகநாடகமேடையில் நடமாடியிருக்கும்; எண்ணற்ற எண்ணங்கள் மனஅரங்கத்தில் எழுந்து புரண்டு விழுந்திருக்கும். ஒரு கதை! ஒரே ஒரு கதை! ஷேக்ஸ்பியர் நாடகத்தில், "ஒரு குதிரை! ஒரு குதிரை! ஒரு குதிரைக்கு ஒரு ராஜ்யம்!" என்று மூன்றும் ரிச்சர்ட் மன்னன், போர்க்களத்தில் கத்தினனே; அதைப்போலவே நாங்களும் பேரம்கூவ முடியும். எங்கள் கதை ஒவ்வொன்றும் ஒரு 'ராஜ்ய'த்தை—எங்கள் அனுபவ உலகத்தையே —கொடுத்து வாங்கியதாகும். இந்த விலையை யெல்லாம் தந்து வாங்கிய பின்னும், எங்கள் கதை ஒரு நொண்டி மாடாகவே இருக்கலாம். ஆயினும், அது எங்கள் கதை; உலகச் சந்தையில் விலை கூறக் கூடிய கதை! சுழியும் குறியும் சுத்தமாயிருந்தாலும், திருட்டு மாட்டை அப்படிக் கூற முடியுமா?

கதைகளை யெல்லாம் பொதுப்படையாக இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்: ஒன்று, பிரத்தியட்ச வாழ்க்கைச் சித்திரம்; மற்றது, அமானுஷ்யக் கற்பனை. மேதைகள்தான் ரஸஹீனம் இல்லாத அமானுஷ்யக் கற்பனைகளைச் சிருஷ்டிக்க முடியும். என்னைப்போன்றவர்களுக்குப் பத்திரமான வழி, பிரத்தியட்ச வாழ்க்கைச் சித்திரங்களே. எங்களைச் சூழ்ந்த உலக அரங்கத்தை நாங்கள் போட்டோக்கள் எடுப்போம். எங்களுடைய வாழ்க்கை ஆதர்சங்களும் லட்சியங்களும் அந்தப் போட்டோக்களுக்கு மெருகு கொடுத்திருக்கும். எங்களுக்கும் பல கனவுகள் உண்டு. ஆனல், அவற்றிலே 'மண்' வாசனை வீசும்; சுகந்தமான வாசனைதான். அஜந்தா ஓவியங்களையே நினைத்துக்கொண்டிருப்பவர்கள், போட்டோப் படங்களில் கலைச் சுவை

யைக் காணமுடியாது என்று நினைப்பது சகஜம். மீனுக்கு ஒரே சொர்க்கந்தான் உண்டு — தண்ணீர். அதில் வியப்பென்ன? போட்டோப் படங்களிலும் ஒருவிதக் கலைச் சுவையை அனுபவிக்க முடியும் என்று நம்பும் கோஷ்டியைச் சேர்ந்தவன் நான். ஆகையால், என் கதைகள் அத்தனையும் பெரும்பாலும் முழுவதுமோ அல்லது பெரும் பகுதியோ பிரத்தியட்ச நிகழ்ச்சிகளாகும்.

சமீபத்திலே என் சொந்தக்காரர் ஒருவரது வீட்டில் ஒரு சம்பாஷணை நடந்தது.

"இன்ன பொருள் நமக்கு அகப்பட்டதே, அதை இவரிடம் (என்னிடம்) காட்டு" என்றார் தகப்பனார்.

"இவரிடமா! நான் மாட்டேன். இவர் அதையும் ஒரு கதை எழுதி விடுவார்" என்றார் குமாரர்.

என்னைக் கண்டால் என் சொந்தக்காரர்களுக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் அவ்வளவு பயம். ஏனென்றால், நான் எழுதும் கதைகள் அப்படிப்பட்டவை.

'சந்தனக்காவடி' என்ற என் சிறு கதைத் தொகுதியில் மொத்தம் பன்னிரண்டு கதைகள் இருக்கின்றனவே; இவைகள் ஒவ்வொன்றிலும் நான் நேரிலே கண்ட சம்பவங்களோ, பாத்திரங்களோ அப்படியே பிரவேசித்திருக்கின்றன என்பது உண்மை. கதை ஸ்வாரஸ்யத்துக்காக, அங்கங்கே சிற்சில சிறு மாறுதல்கள்மட்டில் செய்திருக்கிறேன். சில கதைகள் முழுமையும் அப்படியே நிகழ்ந்தவை என்றுகூடச் சொல்லலாம். அப்படிப்பட்ட கதைகள் சம்பந்தப்பட்டமட்டில் எப்படி எழுதினேன் என்ற கேள்விக்கு, வெகு சுலபமாக நான் விடை அளிக்க முடியும்; அதாவது, "நிகழ்ந்தது; எழுதினேன்" என்ற இரண்டே வார்த்தையில் அந்தப் பதில் முடிந்துவிடும். உதாரணமாக:

ஒரு கிராமத்திலே, ஒரு பூசாரி, சேற்றை எடுத்துக் காவடி கட்டி, அதைச் சந்தனமாய் மாற்றுவதாகப் பல வருஷங்கள் ஏமாற்றி வந்தான். ஒரு வருஷம் அதன் சூதை நானும் என் நண்பர்கள் சிலரும் கண்டுகொண்

டோம். உண்மையிலே நடந்த இந்த ஸம்பவந்தான் 'சந்தனக் காவடி' என்ற என் கதையாயிற்று.

நான் சம்பந்தப்பட்ட ஒரு பத்திரிகாலயத்தில் ஓர் ஆசிரியர் போனார்; மற்றொருவர் வந்தார். பிறகு அவரும் போய்விட்டார். இந்தக் காலத்தில் நடந்த சில தமாஷ்களை நடந்தது நடந்தவாறு எழுதி 'ஆசிரியர் மாற்றம்' என்று பெயர் கொடுத்தேன்.

பணக்காரக் குருட்டுப் பையன் ஒருவனுக்குப் பணத் திமிரால் ஒரு சிறுமி மணம் செய்விக்கப்பட்ட கோர ஸம்பவத்தை என் கண்ணால் கண்டேன். 'கல்யாணப் பெண்' என்ற சோகக் கதை அதன் பயனாகும்.

நான் காமிரா வாங்கிப் போட்டோக்கள் எடுத்த அனுபவங்களுக்குக் கொஞ்சம் கால், தலை வைத்துச் சிங்காரித்துக் 'கன்னியின் பிரார்த்தனை' என்றொரு கதையாக்கி விட்டேன்.

இந்தக் கதைகளில் 75 முதல் 99 சதவிகிதம் வரையில் நடந்த நிகழ்ச்சிகளே அடங்கி யிருக்கின்றன. 75 தொடங்கிக் கீழே 25 சதவிகிதம் மட்டிலுமே பிரத்தியட்ச நிகழ்ச்சிகள் அடங்கிய மற்றக் கதைகளில்தான், என் கற்பனா சக்தி கொஞ்சம் பிரயோகமாகி யிருக்கிறது. ஆனால், கவிஞர்கள் மாதிரி என் கற்பனை வேலை செய்வதில்லை; கணித சாஸ்திரிமாதிரிதான் வேலை செய்யும்! தார்க்கிக அமைப்பை என் கதைகளில் பெரும்பாலானவை பெற்றிருக்குமானால், ஆச்சரியமில்லை. வாழ்க்கை தர்க்க நியாயத்துக்குக் கட்டுப்படுவதில்லை. தர்க்க நியாயமோ எப்படியோ வாழ்க்கை முழுதும்—அது தன்னை மீறிச் செல்லும்போதுகூட அதைவிடாமல் பற்றி—வியாபித்து நிற்கிறது. இதுதான் ஆச்சரியம். ஆகவேதான், கணித சாஸ்திரி மாதிரி நான் எழுதிய கதைகள் இரண்டொன்றையே, அதிக உணர்ச்சி யுள்ளவை என்று நண்பர்கள் மதிக்கிறார்கள்போல் இருக்கிறது!

பல வருஷங்களுக்கு முன், முதல்முதலாக நான் சென்னைக்குச் சென்றபோது, ரிக்ஷாவில் சவாரி செய்ய

எனக்கு வெறுப்பு. மனிதனை மனிதன் இழுக்கவாவது! யானைக் கவுனியில், திருவல்லிக்கேணி பஸ்ஸுக்காகக் காத்து நின்றேன். மாலை நேரம். உடல் வற்றி, காலை முதல் பட்டினியாய்த் தோன்றிய ஒரு ரிக்ஷாக்காரன், "எங்கே சாமி போவணும்? ஏறு, சாமி. டிராம் சார்சு குடு, போதும். சென்டிரல் டேசனிலே கொண்டுபோய் உடறேன்" என்று, யாசகம் கேட்பவனைப்போல் கெஞ்சினான். அவனுடைய பாவனையும் வணங்கி ஒடுங்கிய அபிநயமும் கூனிக்குறுகிய தோற்றமும் என் உள்ளத்தைக் கிளறின. ஆனாலும், ரிக்ஷாவில் நான் எப்படி ஏறுவேன்? ஓரணாக் காசை இனாம் கொடுக்கலாமா என்று எண்ணினேன். அவன் எப்படியோ? மிகவும் மானியாய் இருந்து விட்டால்—? "உன்னிடம் பிச்சையா கேட்டேன்?" என்று சொல்லி மறுத்துச் சண்டைக்கு வந்துவிட்டானானால்—? இப்படியெல்லாம் யோசித்துக்கொண்டேயிருக்கையில், பஸ் வந்தது. ஏறிச் சென்று விட்டேன். ஆனால், அந்தக் காட்சி என் மனத்தை உறுத்திக்கொண்டேயிருந்தது. அன்று நிகழாத நிகழ்ச்சியை, நிகழ்ந்ததாக நான் கற்பனை செய்யத் தொடங்கினேன். யூக்லிட்டின் க்ஷேத்திரகணித ஆராய்ச்சிபோல, ஒரு கட்டிடம் கட்டினேன். உழைத்துக் கூலி பெற வந்த ரிக்ஷாக்காரனிடம் பிச்சை கொடுக்கச் சென்றதுபோலவும், மானியான அவன் பசியும் சேர்ந்ததால் தன்னை மறந்த நிலையில் என்னைத் தாக்கி விட்டது போலவும் முதல் நிகழ்ச்சியை உருவகம் செய்துகொண்டேன். பிறகு ஒன்றன் மேல் ஒன்றாகச் செங்கல்லை அடுக்கி எழுந்த கட்டிடம்போல, ஒரு கதை எழுந்தது. அதுதான் 'ரிக்ஷாக்கார வேலன்' என்ற —நண்பர்கள் பாராட்டிய—கதையாகும்.

'சங்குமோதிரம்' என்ற இன்னும் ஒரு கதைதான் என் நண்பர்கள் அனைவராலும் மிக அதிகமாய்ப் புகழப்பட்டது. அதை நான் எழுதியது சற்று விநோதமாகும். அந்தக் கதையைத் தொடங்குகையில், எந்தச் சங்கு மோதிரத்தைப்பற்றியும் நான் நினைக்கவேயில்லை. கதை

யின் நடுவே தானுய் வந்து தோன்றிய ஒரு ‘சம்பவம்’ சங்குமோதிரம். மோதிரம் மாத்திரமல்ல; கதையின் மிக முக்கியமான இரண்டு பாத்திரங்களும் அப்படியேதான். நான் எழுத விரும்பியது ஓர் அவரைப் பந்தலின் சரித்திரம். ‘அவரைப் பந்தல்’ என்ற தலைப்பைப் போட்டே என் கதையை நான் ஆரம்பித்தேன். பிள்ளையார் பிடிக்கக் குரங்கோ, குரங்கு பிடிக்கப் பிள்ளையாரோ வந்து தோன்றியமாதிரி ‘சங்குமோதிரம்’ உருவெடுத்தது.

எனக்கு ஐந்து அல்லது ஆறு வயது இருக்கும். நாங்கள் ஒரு சிறிய நகரத்தில் இருந்தோம். அந்த நகரத்தின் சந்தையில் அடிக்கடி வகுப்புக் கலவரங்கள் நிகழ்வது வழக்கம். எங்கள் வீட்டுக்கு எதிரே எங்களையே சேர்ந்த ஒரு பாழ் மனை இருந்தது. அதில் நாங்கள் அவரை, புடல் முதலிய கொடிகள் பயிரிட்டுப் பந்தலும் போட்டிருந்தோம். சந்தையிலே ஒரு நாள் காலையில் வழக்கம் போலவே கலகம் மூண்டது. ஒருவர் பின் ஒருவராகக் கிராமத்து மனிதர்கள் எங்கள் வீட்டு வாசல் வழியே ஓடினர்கள். போகும்போதே, ஆளுக்கு ஒன்ருக எங்கள் அவரைப்பந்தலின் கால்களையெல்லாம் அவர்கள் பிடுங்கிச் சென்று விட்டார்கள். நேற்று மாலை, பச்சைப் பசேலென்று கறிகாய்கள் கொத்துக் கொத்தாய்க் காய்த்துத் தொங்கிய அந்த அவரைப்பந்தல் இன்று இதோ நிலை குலைந்து, துரோபதை வஸ்திராபஹரணம் போல, அலங்கோலமாய்க் கிடக்கிறது! எத்தனையோ வருஷங்களாகியும் இந்தக் காட்சி என் மனத்தை விட்டு அகலவில்லை. மனிதனுடைய அரக்க உணர்ச்சிகள் தலை தூக்கும்போது, சிருஷ்டியின் சௌந்தரியம் எப்படி ஹதமாகிறது!

இந்த அவரைப்பந்தலின் சோகக் கதையை வர்ணிக்க வேண்டும் என்று ஒரு நாள் நான் ஆவல் கொண்டேன். அதற்குச் சந்தைக் கலகத்தைப்பற்றிக் கூறவேண்டும். அதிலே கதை ஸ்வாரஸ்யம் வேண்டும். கிராமத்துக் காதலர் இருவரைக் கதை ஸ்வாரஸ்யத்துக்காக, அந்தக் கதையில் புகுத்தினேன். பிறகு, அங்கக் காதலரைப் பின்தொடர்ந்து

விட்டேன், அவரைப்பந்தலைப் பின்னே நிறுத்திவிட்டு! அப்படி உருவாயிற்று, 'சங்கு மோதிரம்.'

என்னுடைய பிற கதைகள் ஒவ்வொன்றைப்பற்றியும் இதேமாதிரி வரலாற்றைத்தான் நான் சொல்ல வேண்டும். என் கதைகளுக்குப் பெரும்பாலும் மூலாதாரம் புற நிகழ்ச்சிகள்தான். சில சமயம் புற நிகழ்ச்சிகளால் தூண்டப்பட்ட அக நிகழ்ச்சிகள் என் கதைகளை வியாபித்து நிற்கின்றன. எல்லாம் மானுஷ்யமான கதைகள். வானத்தில் பறக்கமாட்டேன் என்று நான் சொல்லவில்லை. விமானம் வேண்டும், அல்லது இறக்கை முளைக்க வேண்டும்—அப்போதுதான் நான் வானத்தில் பறப்பேன். ஆதாரம் இல்லாமல் ஜாலம் செய்ய, நான் துணியமாட்டேன்; எனக்கு விருப்பமும் இல்லை. இறக்கை முளைக்காது என்பது நிச்சயம். விமானம் இப்போது கையில் இல்லை. கிடைத்ததும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். அதுவரையில் பூலோகக் கதைகளையே என்னிடம் எதிர்பாருங்கள்; 'வான'த்துக் கதைகளை எதிர்பார்த்துப் பயன் இல்லை. நமஸ்காரம்.

ரஸிகர் திருக்கூட்டம்

நாங்கள் எல்லாரும் ரஸிகர்கள். எதற்காக நாங்கள் ரஸிகர்களாய் இருக்கிறோம் என்றால், கனவான்களாய் இருப்பதற்காகத்தான். சித்திரம், இலக்கியம், சினிமா, நாடகம், சங்கீதம், நாட்டியம் இவை எங்களுக்குப் பிடித்தாலும் சரி பிடிக்கா விட்டாலும் சரி, இவற்றினால் எங்களுக்கு இன்பம் உண்டானாலும் சரி உண்டாகா விட்டாலும் சரி, நாங்கள் அவற்றை அனுபவிக்கும் ரஸிகர்களாகவே இருந்து வருகிறோம்; இன்னும் இருந்துவரவும் போகிறோம்.

ரஸிகனாய் இருப்பது கனவானின் லட்சணம். அந்த லட்சணத்தைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக, நாங்கள் எத்தனை யெத்தனை மகத்தான தியாகங்களைச் செய்திருக்கிறோம் என்பதும், எவ்வளவெவ்வளவு வீரமான போராட்டங்களைத் தனிமையிலும் கூட்டங்களிலும் பத்திரிகைகளிலும் நடத்தி யிருக்கிறோம் என்பதும் உங்களுக்குத் தெரியாது. "வீணை தனத்தின் கச்சேரியா? ஆஹாஹா! சரஸ்வதியின் அவதாரம்னு. அவரது சங்கீதாம்ருதத்தைப் பருகிய கல்லும் உருகுமே; புல்லும் பொசியுமே! அவருடைய கச்சேரிக்குப் போகாத ஜன்மமும் ஒரு ஜன்மமா!" என்று சொல்லி, எப்படியாவது பணம் தயாரித்துக்கொண்டு, அந்தக் கச்சேரிக்கு நாங்கள் போய்த்தான் தீருவோம். ஆனால், உண்மை என்ன தெரியுமோ? அந்த வரப்பிரஸாதியின் யாழினிமையை அனுபவிக்கும் காது மாத்திரம் எங்களுக்குக் கிடையாது. அது என்ன இரவலுக்குக் கிடைக்கக்கூடிய வஸ்துவா?

பிரபல நாட்டியக்காரியான இன்னார் நாட்டியமா? அடடா! அதற்கு நாங்கள் போகாமல் எப்படி இருக்க முடியும்? போகத்தான் போவோம். ஆனால், அந்த

மூன்று மணி நேரமும் ஜெயில் வாசந்தான். நடுவிலே எழுந்து வரலாமே; யார் கையைப் பிடிக்கிறார்கள்? இருந்தாலும் எங்களுக்குப் பயம். அரஸிகர் என்று யாராவது நினைத்துவிட்டால்? எங்கள் தலை போனாலும் அதற்கு இடங்கொடுக்க, நாங்கள் தயாரில்லை. சினிமா நடக்கும். காதலனும் காதலியும் வருவார்கள். 'சிருங்கார' ரஸபரிதமான நடவடிக்கைகள் நிகழும். எங்களுக்கு நிரம்ப ஸ்வாரஸ்யமாய் இருக்கும். ஆனால், ஆனால்...எங்களில் ஒரு முக்கிய ரஸிகன் "என்ன ஆபாசம்! சே! தூ!" என்று கூறி, கையை வீசிக்கொண்டு கிளம்பிவிடுவான். நாங்கள் இனிமேல் அங்கே ஒரு விநாடியாவது பின் தங்கலாமா? ஆனந்தம் பெரிதா? மானம் பெரிதா? நாங்களும் அந்த ஸினிமா சுகத்தை உதறித் தள்ளி வெளியே கிளம்பிவிடுவோம். இதெல்லாம் தியாகமில்லை என்றால், வேறே எதுதான் தியாகம் என்று உங்களை நான் கேட்கிறேன்.

எங்களது ரஸிகத் தன்மையால், கலைகளின் ரஸங்களை அனுபவிப்பது எங்களுக்கு அவ்வளவு முக்கியமல்ல; எங்கள் ரஸிகத் தன்மையைப் பிறருக்குத் தண்டோராப் போட்டு நிரூபணம் செய்வதுதான் எங்களுக்குப் பிரதானமாகும். நாடகம் பார்ப்பது எங்களுக்குப் பெரிதல்ல; பார்த்த நாடகத்தைப்பற்றி நண்பர்களின் கோஷ்டியில் பிரசங்கம் செய்வதுதான் பெரிது. சங்கீதம் கேட்பது எங்களுக்கு அவசியமல்ல; கேட்ட சங்கீத வித்துவான்களின் ஜாபிதாவை அன்பர்கள் முன் அடுக்குவதே எங்களுக்கு அவசியமாகும்.

இப்பொழுது ஸினிமா ஒன்று கூடவந்து சேர்ந்திருக்கிறது. இதில் 'டெக்னிக்' (கலாசூட்சும முறை) என்ற ஓர் அம்சம் எங்களை நிரம்ப உபத்திரவம் செய்துகொண்டிருக்கிறது. மேலும், 'ஒலிப்பதிவு,' 'படிப்பிடிப்பு,' 'காமிராக் கோணம்', 'ப்ளே-பாக்,' 'டிஸால்வ்,' 'டிரிக், ஷாட்,' 'பான்ஷாட்,' 'க்ளோஸ்-அப்,' 'ஓவர்-லாப்பிங்,' 'ஸிங்க்ரனைஸேஷன்,' 'பேட்-இன்,' 'பேட்-அவுட்,' 'கட்,' 'இன்ஸெர்ட்' இப்படி நூற்றுக் கணக்கான வார்த்தை

களைச் சொல்லி, சில சினிமாத் தொழில் 'புலிகள்' எங்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த வார்த்தைகளின் அர்த்தங்களையும், சினிமாக் கலா சூட்சும முறைகளையும் அறிந்து கொள்வதற்காக, நாங்கள் பல ஸினிமாப் புஸ்தகங்களைப் புரட்டி வருகிறோம். கூடிய சீக்கிரம், அது சம்பந்தமாக யாருடனும் விவாதம் செய்ய, நாங்கள் தயாராகி விடுவோம் என்பதில் தடையில்லை.

இதெல்லாவற்றையும்விட ரஸிகத்தனம் சம்பந்தமான போராட்டங்கள்தான் மிக முக்கியம்.

"ஸார், இந்தச் சித்திரம் நிரம்ப அற்புதம்" என்பேன் நான். நான் அப்படிச் சொல்லும்போது, உண்மையில் எனக்கு அது அற்புதமாய்ப் பட்டிருக்காது; பிறருக்கு அது அற்புதமாய்ப் படக்கூடியதோ என்ற சந்தேகம்தான் ஏற்பட்டிருக்கும்.

அது அற்புதமோ இல்லையோ, நான் சொல்லவாவது! இதுதான் மற்றொரு ரஸிகரின் கோபம். "இது என்ன படம், ஸார், மண்ணாங்கட்டி! இந்தக் கோட்டிலே ஒரு நயம் இருக்கிறதா? முகத்திலே ஒரு களை, உணர்ச்சி, ஜீவன் இருக்கிறதா? யூஸ்-லெஸ்" என்பார் அவர்.

"ஆமாம், ஸார். படத்தின் கருத்து, எவ்வளவு குஷி; எவ்வளவு நூதனம்! கோடுகள் கொஞ்சம் மோசம்தான்" என்று நான் கொஞ்சம் சமரசமாய்ச் சொல்வேன்.

ஆனால், அவர் அதற்குத் தயாரில்லை. "கோடுகள் என்ன மோசம், சொல்லுங்களேன்? அதில் ஒரு நயம் இல்லைதான். ஆனால், ஓர் உறுதியும் நிர்ணயமும் இருக்கிறது. கோடு பாதகமில்லை; கருத்துத்தான் மகா மோசம்" என்று அவர் என்னையே திருப்பிக்கொள்வார்.

இதேமாதிரி கால்மணி நேரம் எனக்கும் அவருக்கும் விவாதம் நடக்கும். அவர் என்ன சொன்னார், நான் என்ன சொன்னேன் என்பதே தெரியாது. இரண்டு நிமிஷத்துக்கு முன் அவர் சொன்னதை நானும் நான் சொன்னதை அவருமாக, திருப்பித் திருப்பி, மாறிமாறி

விவகாரம் செய்துகொண்டே யிருப்போமே யொழிய, முடிக்கமாட்டோம். விவகாரம்தான் எங்களுக்கு முக்கியமே யொழிய, அபிப்பிராயம் அல்ல.

எங்களது ரகஸ்யம் இதுவாதலால், எங்களுக்கு நிலைத்த அபிப்பிராயம் கிடையாது. போன வாரம் ஒரு பிரபல வித்வானுக்கு 'ஸைபர்' மார்க் கொடுப்போம்; இந்த வாரம் நூறு மார்க் கொடுப்போம். ஏனென்றால், அவர் இந்த வாரம்தான் எங்களுக்கு ஸ்நேகமாகி யிருப்பார். நடிகர்கள், வித்வான்கள், கலைஞர்களை ஸ்நேஹம் பிடிப்பதில் எங்களுக்கு மிகமிகப் பிரியம், அதிலிருந்தே எங்களது ரஸிகத்தன்மையை நீங்கள் ஊகித்து அறிந்துகொள்ளலாம். எதற்காக எங்களுக்கு அவர்களுடைய ஸ்நேகம் என்றால், அது ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

புதுப் பதங்கள் உற்பத்தி

பாரததேவி ஒரு தமிழரின் கனவிலே ஒருநாள் பிரத்யட்சமானாளாம்.

“தேசம் எத்தனையோ துறைகளிலே பிற்போக்காய் இருக்கிறதே! ராஜீயம், கலை, இலக்கியம், பொருள், சாஸ்திரம் முதலிய சகல துறைகளிலும் எப்போது நமக்கு விமோசனம் ஏற்படப்போகிறது? யார் நம்மை உய்விக்கப் போகிறார்கள்?” என்ற கவலை நிறைந்தவர் அந்தப் பக்தர்.

தேவி அந்தப் பக்தருக்கு அபயப்பிரதானம் கொடுத்தாள். “பக்தா! கவலைப்படாதே. கலையா, இலக்கியமா, ஸயின்ஸா, ராஜீயமா, சமயமா — எல்லாவற்றையும் நான் ஒரு பெரிய மனிதரிடம் ஒப்படைத்து விட்டேன். நீ இனிமேல் சுகமாக உறங்குவாயாக. தேசக் கவலை இனி வேறு யாருக்கும் வேண்டாம்” என்று உறுதி கூறினாள்.

“அவர் யார், அம்மணி” என்று கேட்டார் பக்தர்.

“அவரா? அவர்தான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்” என்று சொல்லி, தேவி அந்தர்த் தியானமாகி விட்டாளாம்.

பக்தரின் இந்தக் கனவு—அல்லது கற்பனை—அர்த்தமற்றதல்ல. ராஜாஜீ தமிழ்நாட்டின் பாக்கியம் என்று பரிபூரணமாய் நம்பும் தொண்டர்களில் நானும் ஒருவன்.

பிரதம மந்திரி உத்தியோகம் பண்ண வேணுமா? பிறமாகாணங்க ளெல்லாம் பொறாமைப்படும்படி அதை நிர்வகித்தார் ராஜாஜீ. சத்யாக்கிரகமா? வேதாரண்யம் யாத்திரைக்குத் தலைமை தாங்கினார். இலக்கியமா? அற்புதமான குட்டிக் கதைகள் எழுதுகிறார். சமயமா? கண்ணன் காட்டும் வழியை விளக்குகிறார். ஸயின்ஸா? அதைத் ‘தமிழில் எழுத முடியுமா?’ என்ற புத்தகத்தின் மூலம் முடியும் என்று எழுதிக் காட்டிவிட்டார்.

சகல துறைகளிலும் தமிழும் தமிழரும் உடனே முன்னேறிவிட வேண்டும் என்று பரம ஆத்திரம் நிறைந்தவர் ராஜாஜீ. அந்த ஆத்திரத்தில் பறந்த பொறிகளில் ஒன்று 'தமிழில் முடியுமா?' என்ற நூல்.

சொல்லாக்கல் மகாநாடொன்று சில வருஷங்களுக்கு முன் கூடி, ஸயின்ஸ், கலைகளை யெல்லாம் தமிழிலேயே விளக்கச் சாதனமாகப் பல 'அருமை'யான சொற்களைச் சிருஷ்டித்து, தமிழன்னையின் பாத பீடங்களில் சமர்ப்பித்தது நண்பர்களுக்கு ஞாபகமிருக்கும். அந்தச் சொற்களை எந்தப் பத்திரிகைகளாவது, ஆசிரியர்களாவது உபயோகப்படுத்தினால்தானே; பேசாமலிருந்து விட்டார்கள். நாட்டிலே ஞானம் பெருகுவதற்காகத் தங்கள் சந்தாதாரர்களையும் வாசகர்களையும் இழக்க எந்தப் பத்திரிகைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் சம்மதமில்லை. பார்த்தார் ராஜாஜீ. எழுதிவிட்டார் இந்தப் புத்தகத்தை. ராஜாஜீயின் புத்தகத்தின்மூலம், ஸயின்ஸைத் தமிழில் எழுத முடியும் என்பது நிச்சயமாய் நிரூபணமாகி விட்டது. ஆனால், ஸயின்ஸைத் தமிழில் படித்துப் புரிந்துகொள்ள முடியும் என்பது மாத்திரம்தான் அந்தப் புத்தகத்தால் நிச்சயப்படவில்லை.

மொத்தத்தில் எனக்கு இந்தச் சொல்லாக்கல் 'பிஸினஸே' பிடிக்கவில்லை. தமிழில் புதிய புதிய வார்த்தைகள் தோன்றக்கூடாது என்பதல்ல என் கட்சி. ஜீவனுள்ள செடியிலே மலர்கள் பூப்பதுபோல, தமிழிலே புதுப் புது வார்த்தைகள் புஷ்பிக்கவேண்டும். தமிழை ஜீவபாஷையாக்க, ஒட்டு வேலைகள் பெரிதும் பயன்படமாட்டா.

'பாஷை உடல்; விஷயம் உயிர்'-இது ராஜாஜீயே ஒரு முறை சொன்ன மணிவாசகம் ஆகும். ஞானதேவியின் வாகனம் பாஷை; சிந்தனையின் சாதனம் பாஷை; மனத்தின் நந்தவனம் பாஷை. மனித நாகரிகம் முழுவதற்கும் அஸ்திவாரம்-மூலகாரணம் பாஷைதான். பாஷை சொற்களின் திரளல்ல; இலக்கண விதிகளல்ல. பாஷை, உயிரோடு உயிராய், உணர்வோடு உறவாய், வாழ்வோடு வாழ்வாய்ப் பின்னிக் கிடக்கிறது. மனிதன் வளர வளர,

பாஷையும் வளரவேண்டும். அந்த ஜீவசக்தி அதற்கிருக்க வேண்டும். பாஷையைப் பட்ட மரமாக்கினலும் சரி, சூளையில் தயாரித்த செங்கல் ஆக்கினலும் சரி, மனிதனின் வளர்ச்சிக்கு அது முட்டுக்கட்டையாகவே முடியும்.

பாஷை ஒரு சாதனம் என்பதை நினையாத சிலர், தமிழைக் கோயிலுள்ள மூல விக்கிரகமாக்கிவிட முயல்கிறார்கள். சிலப்பதிகாரத்தி லிருக்கிறதாம் தமிழ்; தொல்காப்பியத்தில் இருக்கிறதாம் தமிழ்; குறளில் இருக்கிறதாம் தமிழ்; கம்ப ராமாயணத்தில் இருக்கிறதாம் தமிழ். உங்களிடமும் என்னிடமும் அது இல்லையாம்! இப்படி அவர்கள் சொல்லவில்லை என்பது வாஸ்தவம். ஆனல், எண்ணுகிறார்கள்; அப்படி நடக்கிறார்கள்; தர்க்கம் செய்கிறார்கள். ஆனல், நான் சொல்லுகிறேன்: தமிழன் பேசுவது தமிழ்; எழுதுவது தமிழ்; நினைப்பது தமிழ். தமிழிலே கவிகள் நாயகனை கம்பனுக்கு எவ்வளவு பாத்தியம் உண்டோ, அவ்வளவு பாத்தியம் கொல்லுலையில் வேலை செய்யும் கருமானுக்கும் உண்டு; அங்காடிக்காரச் சொர்ணத்துக்கும் உண்டு; உங்களுக்கும் எனக்கும் உண்டு. தமிழ், தமிழர் அத்தனை பேருக்கும் பொது உடைமை. யார் என்ன செய்தால் என்ன; எந்தப் பண்டிதன் என்ன சொன்னல் என்ன? அந்தப் பாத்தியத்தை நம்மிடமிருந்து பிரிக்க—அபகரிக்க—ஒருவராலும் முடியாது; ஒருநாளும் முடியாது.

பாஷை என்ற சாதனத்தை முற்றத்திலே வைத்துப் பொட்டிட்டுப் பூச்சூட்டிச் சுற்றிசுற்றி வலம்வந்து கும்மியடிப்பதால், அது வளர்ந்து விடாது; நாமும் உயர்ந்து விடோம். சிந்தாமணியிலிருந்து, வளையாபதியிலிருந்து, மணிமேகலையிலிருந்து, சிலப்பதிகாரத்திலிருந்து, தொல்காப்பியத்திலிருந்து, பத்துப்பாட்டிலிருந்து, குறளிலிருந்து மட்டிலுமே பொறுக்கியெடுத்த தூய தமிழ்ச் சொற்களே அடங்கிய அகராதியாய்த்தான் இருக்கட்டுமே; அதை நாம் வாங்கி வைத்துக்கொண்டு உருப்போட்டால், நமக்கு ஞானம் உண்டாகிவிடுமா? ஞானம் வார்த்தைகளிலே

இல்லை. அந்த வார்த்தைகளைத் தொடுத்துச் சித்திரம் செய்யும் மனவிரிவிலே இருக்கிறது.

ஒரு நண்பரின் கடிகாரம் பழுதாகிவிட்டது. அதைக் குலுக்கினர்; ஆட்டினர்; அசைத்தார்; முடுக்கினர். அது ஓடவில்லை. "ஷாப்புக்குத்தான் போகவேண்டும்; அங்கே தான் பெரிய பெரிய (அதாவது நுட்ப நுட்பமான) ஆயுதங்கள் இருக்கும். அவற்றல் அதை ஹிம்சித்தால்தான் அது ஓடும்" என்று அவர் நினைத்தார். மற்றொரு நண்பர் வந்தார் அவருக்குக் கடிகார அமைப்பு நுணுக்கங்கள் தெரியும். அவர் ஒரு சிறு கத்தியை எடுத்தார். கடிகாரத்தைக் கழற்றினர். சில ஆணிகளைத் திருகினர். மூச்சை இழுத்து, சில முறை ஊதினர். சிறிது மண்ணெண்ணெயை ஊற்றினர். மறுபடியும் ஆணிகளை வைத்துத் திருகி மூடிவிட்டார். கடிகாரம் ஓடத் தொடங்கிவிட்டது! கடிகாரச் சொந்தக்காரரிடம் கத்தியில்லையா? ஊதுவதற்கு மூச்சுக் காற்றுத்தான் இல்லையா? ஏன் தமது கடிகாரத்தை அவரால் செப்பம் செய்ய முடியவில்லை? இன்னொருவர் ஏன் தேவையானர்? சீர்படுத்தும் திறமை கருவியில் இல்லை; அதை உபயோகப்படுத்தும் ஞானத்தில்தான் இருக்கிறது. கருவிகளை ஆக்கிக்கொள்வதும் ஞானந்தான். பாஷை ஒரு கருவியேயாகும். ஆனல், உன்னதமான, சகல ஞானத்துக்கும் ஆதார பூதமும் களஞ்சியமும் போன்ற கருவி.

பாஷையின் முக்கிய அலுவல், ஒருவர் கருத்துக்களை மற்றவருக்குப் பரிமாறுவது. அந்த முக்கிய அலுவலையே சிதைப்பதன் மூலம் பாஷையை வளர்க்க முடியுமா? பிற நாட்டுச் சொற்கள் உள்ளே வந்து புகாதபடி அணைபோட வேண்டும் என்று எண்ணுவதுதான் தமிழை வளர்க்கும் வழியா? சரித்திரப் போக்கினலும், சமூக நிலையினலும் திசைச்சொற்கள் எந்தப் பாஷையிலும் வந்து குவியத்தான் குவியும். அவற்றை ஜீரணித்துக் கொள்ளவேண்டும்.

இங்கிலீஷ் வார்த்தைகள் அத்தனையும் அநேகமாய் இரவல் வார்த்தைகள்தான். ஆனல், உலகின் உன்னத பாஷைகளில் ஒன்றாக அது விளங்கவில்லையா? தமிழையே

தான் எடுத்துக் கொள்வோமே; எத்தனை சமஸ்கிருதப் பதங்கள், அவை சமஸ்கிருதம் என்பதுகூட நமக்குத் தெரியாதவாறு, தமிழோடு தமிழாய், தமிழின் செல்வமாய் மாறிக் கிடக்கின்றன!

'ஹிந்து'ப் பத்திரிகையில் ஒரு சமயம் ஸ்ரீ வ. ரா. எழுதிய ஒரு மதிப்புரையில் கண்ட சம்பவம் ஒன்றை இங்கே குறிப்பிடுகிறேன். காலஞ்சென்ற ஸ்ரீ கே. எஸ். சீனிவாஸம்பிள்ளை என்றால், தஞ்சாவூரில் சகல பண்டிதர்களுக்கும் மிகுந்த மதிப்பு. அவர் ஒரு சிறந்த அறிஞர். அவரைப் பற்றியது இந்தக் கதை.

ஒரு தமிழ்ச் சங்கக் கூட்டம் நடந்துகொண்டிருக்கிறது. ஸ்ரீ கே. சுப்பிரமணியபிள்ளை அக்கிராசன பீடத்தில் அமர்ந்திருக்கிறார். ஸ்ரீ எம். எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை, பண்டைத் தமிழின் பெருமையை விளக்கிக்கொண்டு, தமிழிலே சர்வமும் இருக்கிற தென்று இடிமுழக்கம் செய்கிறார்.

இச்சமயம், யாரும் எதிர்பாராத வண்ணம் ஸ்ரீ கே. எஸ். சீனிவாசம் பிள்ளை உள்ளே வந்து தோன்றினர். பரிசுத்தமான வெண்மைக் கதருடுத்த அந்த ரூபத்தைக் கண்டதும், சபையோர் அத்தனை பேரும் மந்திரத்தால் ஏவப்பட்டவர் போல எழுந்து நின்று மரியாதை செய்தார்கள்.

நெஞ்சிலே துயரம் அடைத்துக்கொண்டவர் போல, வேதனை கலந்த குரலுடன், அந்தப் பெரியார் கேட்டதாவது:— "நண்பர்களே! இந்தச் சங்கம் செய்யும் வேலை என்ன? சமஸ்கிருதத்துக்குச் சரம சுலோகம் பாடி, தமிழின் மென்னியையும் முறித்துக் கொண்டிருப்பதுதானே இது செய்யும் வேலை! ஸ்ரீமான் பூர்ணலிங்கம் பிள்ளை அவர்களே! ரோஜாவுக்குத் தமிழிலே என்ன பதம்? ரோஜாவுக்குத் தமிழ்ச் சொல்லே இல்லாததால், நமக்கு ரோஜாப்பூவே வேண்டாமா? வழக்கறிஞர் என்று எதற்காகச் சொல்லுகிறீர்கள்? வக்கீல் என்று சொல்லுங்களேன். நீதிமன்றம் என்று ஏன் கதறுகிறீர்கள்? கோர்ட்

என்று கூறுங்களேன். இந்தச் சங்கம் தமிழை வளர்க்கவில்லை. தமிழைக் கொல்லுகிறீர்கள் நீங்கள்."

அறிஞர் ஸ்ரீ. சீனிவாஸம் பிள்ளை இப்போது உயிருடன் இருந்தால், இந்தச் சொல்லாக்கல் மகாநாட்டின் பிரசவமான நகல் அகராதியையும் அதன் சுவீகாரக் குழந்தைகளையும் கண்டு என்ன வேதனைப்படுவாரோ, அதை ஈசனே அறிவார்.

ஒரு பாஷையில், ஸ்வபாவமாகத் திசைச் சொற்கள் வந்துகுவிவதும், தேவையான புதிய சொற்கள் ஜனிப்பதும் எப்போது? அந்த ஜனங்களின் மனதிலே புதிய புதிய கருத்துக்களும் உணர்ச்சிகளும் வந்து தோன்றும் போதுதான். எத்தனை சொல்லாக்கல் மகாநாடுகளாலும் முடியக்கூடாத காரியத்தை ஓர் அரசியல் இயக்கம் வெகுதூரம் சாதித்துவிட்டது என்பதை நாம் உணரவேண்டும். தமிழனின் வாழ்வு பல துறைகளிலும் செயல் நிறைந்ததாக வேண்டும்; அவனது ஞானம் பெருகவேண்டும்—அப்போதுதான் தமிழ் வளரும்.

"இது என்ன விடுகதையாய் இருக்கிறதே: பாஷை வளராமல், ஞானம் எப்படிப் பெருகிப் பரவும்?" என்று நண்பர்கள் கேட்கலாம்.

ஒரு விடுகதையு மில்லை. பிரத்யட்ச சரித்திர உதாரணம் ஒன்றை இங்கே கூறுகிறேன். அதிலிருந்து நான் சொல்வது விளங்கும்.

சொல்லாக்கல் மகாநாட்டுக்கு விஜயம் செய்த ஓர் அறிஞரே அதை எனக்குச் சொன்னார்.

ஜப்பானில் ஸயின்ஸ்கள் இரண்டொரு தலைமுறைகளுக்குள் அற்புதமாய் முன்னேறியதெப்படி என்று அவர் எனக்குத் தெரிவித்தார்.

ஒன்றிரு தலைமுறைக்கு முன் ஜப்பானியர் ஒரு காரியம் செய்தார்களாம். அதாவது, சகல ஸயின்ஸ்களையும் ஜப்பானிய பாஷையிலேயே சொல்லிக் கொடுக்க வேண்டும். ஆனால், மொழி பெயர்ப்புச் சாத்தியமில்லாத வார்த்தைகளையெல்லாம் அப்படியப்படியே இங்கிலீஷில் போட்டுவிட

வேண்டும். இப்படியே இரண்டு தலைமுறைகளாய்ச் செய்து கொண்டு வந்ததில், பல இங்கிலீஷ் சொற்கள், ஜப்பானிய ருடைய செவிக்கும் நாவுக்கும் ஏற்றவாறு திரிந்து ஜப்பானுய் மாறிவிட்டன. பல புதிய வார்த்தைகளும் தாமே சிருஷ்டி யாயின.

மனிதன் வாழும் முயற்சியிலே வார்த்தைகள் பிறக்க வேண்டும்; நாற்காலிக் கனவிலே அல்ல.

ஸ்ரீமான் பொதுஜனம்

ஸ்ரீமான் பொதுஜனம் அசடா, சமர்த்தா? இது ஒரு தர்மசங்கடமான கேள்வி. ஸ்ரீமான் பொதுஜனத்தை அசடென்று சொல்ல நான் தயாரில்லை; சமர்த்தென்று மதிக்க, வெகுபேர் தயாரில்லை. அரசியல் வாதிகளைக் கேளுங்கள்; ஆசிரியர்களை வினவுங்கள்; சினிமாப் பட நிபுணர்களை உசாவுங்கள்; எங்கள் ஊர்க் காளி கோவில் பூசாரியை விசாரியுங்கள். ஸ்ரீமான் பொதுஜனம் அசடோ இல்லையோ; சமர்த்தில்லை என்று அவர்கள் எல்லாரும் நிச்சயமாய் மதிப்பது தெரியும். நானும்தான் கேட்கிறேன்: ஸ்ரீமான் பொதுஜனம் சமர்த்தாய் இருந்தால், மேற்படி கனவான்களின் திருவிளையாடல்களுக்கெல்லாம் தான் எப்படி இடமிருக்க முடியும்? 'முன்னே பார்த்தால் சாயபு குதிரை; பின்னே பார்த்தால் முன்சீப் குதிரை' என்பது போலத்தான், ஸ்ரீமான் பொதுஜனத்தின் சாமர்த்திய அசாமர்த்தியங்களைப் பற்றியும் நாம் சாட்சியம் கூறமுடியும்.

ராமன் அவதரித்த நாட்டில் அடிமைத்தனம் எப்படி வந்து புகுந்து கொண்டது? சங்கரன் உதித்த நாட்டில் அக்ஞானம் எப்படிச் சூழ்ந்து கொண்டது? ராமானுஜன் ஜனித்த நாட்டில் பக்தி எப்படிக் குறைந்தது? புத்தன் தோன்றிய நாட்டில் துவேஷம் எப்படிப் பரவியது? இத்தனை கோட்டைகளையும் விட்டவர் ஸ்ரீமான் பொதுஜனந்தானே? இல்லை, வேறு யார் யாரோ காரணம் அதற்கெல்லாம் என்று சொல்லிப் பயனில்லை. எந்தக் காலத்திலும் எந்தத் தேசத்திலும் ஸ்ரீமான் பொதுஜனம்தான் சர்வாதிகாரி. 'துன்மந்திரி'களின் பேச்சை, ஸ்ரீமான் பொதுஜனம் கேட்டால், அது யார் குற்றம்?

ஸ்ரீமான் பொதுஜனம் சமர்த்தா யிருந்தால், கிருஸ்து ஏன் சிலுவையில் அறையப்படுகிறார்? பரிசேயரும் சது

சேயருமான மதகுருக்களே அவரைச் சிலுவையில் அறைந் தார்கள் என்பது உண்மை. ஸ்ரீமான் பொதுஜனம் சரியா யிருந்தால், அந்தச் சதுசேயர், பரிசேயர்களுக்கு அவ் வளவு அதிகாரம் எங்கிருந்து ஏற்பட்டிருக்கும்? கலைகள் பெருகுகின்றன ; நாகரிகம் பரவுகிறது ; கல்வி படர்கிறது. இத்தனைக்கும் நடுவிலே, ஆயிரக்கணக்கான வருஷங்க ளாய், ஸ்ரீமான் பொதுஜனம் ஒரே ஸ்திதியில்தான் இருக்கி ருர். ஒரு ஜன சமுதாயத்தின் கல்வி, கேள்விச் செல்வங் களின் வலிவு மெலிவுகளால், ஸ்ரீமான் பொதுஜனம் மட்டில் மாருமல் ஒரே நிலையில் இருந்து வருவதுதான் ஆச்சர்யம்.

ஆனல், ஸ்ரீமான் பொதுஜனத்தை அசடென்ருவது நிச்சயமாய்ச் சொல்ல முடிகிறதா? அதுவும் முடியவில்லை. இருளும் ஒளியும் ஒன்று சேராதென்பார்கள் ; ஞானமும் மாயையும் ஒருங்குகூடா தென்பார்கள். ஸ்ரீமான் பொது ஜனத்தினிடம் மட்டில் இந்த அதிசய ஸங்கமம் நடை பெறுகிறது. கலைஞர்கள், கல்விமான்கள், ராஜீயவாதிகள், மதபோதகர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பல கோஷ்டிகள், ஸ்ரீமான் பொதுஜனத்தின் கண்களில் மண் ணைத் தூவ ஓயாது சூழ்ச்சி செய்துகொண் டிருந்தும், அதற்கெல்லாம் திரும்பத் திரும்பத் தப்பித்துக் கொண்டே வருகிருரே, அந்த ஸ்ரீமான் பொதுஜனத்தை எப்படி அச டென்றுதான் திட்டமாய்ச் சொல்ல முடியும்? எத்த னையோ துர்ப்பிரசாரங்களுக்கு நடுவே, தர்ம இயக்கங்களை வளர்த்து விடுகிருர் ஸ்ரீமான் பொதுஜனம். அது அந்த இயக்கங்களின் சக்தியா யிருக்கலாம். ஆயினும், இரும் பைத்தான் காந்த மிழுக்கும் ; மரக்கட்டையை இழுக் காது. ஸ்ரீமான் பொதுஜனம் மரக்கட்டை யல்ல.

இந்தப் பொதுஜனம் யார்? எங்கே யிருக்கிருர்? நான் அல்ல என்று நான் நினைக்கிறேன் ; நீங்கள் அல்ல என்று நீங்கள் நினைக்கிறீர்கள். வாஸ்தவம். ஆனல், நம் ஒவ்வொருவருடைய அந்தர்யாமியாகவும் இருக்கிருர் இந் தப் பொதுஜனம். சத்தியத்திலும், தர்மத்திலும், இன்பத்

திலும், இசையிலும் ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பாக அமைந்துள்ள ஸ்வபாவ இச்சைதான் ஸ்ரீமான் பொது ஜனம். நம் கல்வி, கேள்வி, பதவி, அந்தஸ்துப் போர்வைகளை யெல்லாம் பீறிக்கொண்டு சில சமயம் வெளிவந்து விடுகிறார் இந்தப் பொதுஜனம்.

"மற்றதெல்லாம் போகட்டும்; உங்கள் படத்தில் இருக்கிற சில விரசமான காட்சிகளை நீங்கள் கத்தரித்து விடவேண்டும். அவை படத்தை அடியோடு கெடுத்து விடுகின்றன" என்று ஒரு சினிமா டைரக்டரிடம் சொன்னேன். "ஸார், உங்களுக்குப் பிடிக்காததைப்பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை. பொதுஜனங்களுக்கு இவைதான் பிடிக்கும்" என்று அவர் பதிலளித்துவிட்டார். என்னையும் தம்மையும் பொதுஜனங்களிலிருந்து அவர் விலக்கியது எனக்குப் பிடிக்கவில்லை. அவர் எப்படியோ அதை நான் அறியேன். என் சம்பந்தப்பட்ட மட்டில் நான் பொதுஜனமே யாவேன்; சிங்கம், புலி, காடியல்ல.

'கன்னாப் பின்னா' என்று கண்டபடி யெல்லாம் எழுதாதீர்கள் என்றால், "ஜனங்கள் ரசிப்பதற்கு எழுதுகிறோம், ஸார்" என்று சமாதானம் சொல்லும் எழுத்தாளர்களும் உண்டு. ஆபாசப் பாட்டுக்கள், கதைகள், சித்திரங்களை யெல்லாம் சிருஷ்டிக்கும் ஒவ்வொருவரும் அது அதை ஸ்ரீமான் பொதுஜனத்தின் மனதைக் கௌவுவதற்கே படைப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீமான் பொதுஜனத்தின் கண்களிலும் காதுகளிலும் நல்ல வஸ்துக்கள் படலாகாது என்று திட அபிப்பிராயங் கொண்ட அவர்கள், ஓரளவு ஸ்ரீமான் பொதுஜனத்தின் —அதாவது உங்களையும் என்னையும் சேர்த்துத்தான்— மனதைக் கெடுத்துவிடுவது வாஸ்தவம். ஸ்ரீமான் பொதுஜனத்துக்கு, அனுபவிக்கப் பல கலைப் பொருள்களும் தேவை. நல்ல சித்திரங்களும், இசைகளும், கதையும், நடிப்பும் அகப்படாத வரையில்தான், வேறு திக்கில்லாமல் இந்தப் போலிக் கலைஞர்களை அவர் ஆதரிக்கிறார்.

ஸ்ரீமான் பொதுஜன நிலையை மீறிய மேதைகளாக எல்லாரும் தங்களை நினைத்துக் கொள்வதாலேயே, இந்த விபத்து நேர்கிறது. தரையில் நின்றுகொண்டே மாடிப் படியில் நிற்பதாய்க் கனவு காண்பவனுக்குப் படுகுழியே தரையாய்த் தோன்றி விடுகிறது. பெரும்பாலான கலைஞரும் ராஜீயவாதிகளும் ஆசிரியர்களும் ஒரு புறம் தங்களுடைய விருப்பு வெறுப்புக்களில்—உணர்ச்சி இச்சைகளில் ஸ்ரீமான் பொதுஜனத்தின் நிலையில்தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் ஏதோ சில மேதாவிகள்தான் உண்டு. பொதுஜன நிலையைக் கடந்துயர்ந்த உத்தமர்களான அவர்கள்தான், ஸ்ரீமான் பொதுஜனங்களைக் குனிந்து பார்க்க வேண்டும். மற்றவர்களுக்கு அந்தச் சிரமமே கிடையாது; தங்களுடைய பிரதிபிம்பமே பொதுஜனம் என்று அவர்கள் அறிந்தால் போதும்.

என்ன எழுதுவது?

நம் நாட்டிலே என்ன இருக்கிறது, எதைப்பற்றி எழுதுவது என்றெல்லாம் கேட்போர் சிலருண்டு. எழுதுவதற்கா விஷயங்கள் இல்லை? எத்தனையோ இருக்கின்றன. ஒவ்வொருவர் மனத்திலும் எவ்வளவோ சங்கதிகள் குமுறிக்கொண்டு கிடக்கின்றன. அவைகளுக்கெல்லாம் மாத்திரம் எழுத்து மூலமான ரூபம் கொடுத்து வெளியே பரப்ப முடியுமானால், என்ன அற்புத விளைவுகள் நேரிடுமோ? அதை யார் சொல்ல முடியும்!

இந்தியா—நமது புராதனமான புண்ணிய பூமிதான்—இப்போது அடைந்திருக்கும் நிலைமையை நினைத்தால், சிறிது சிறிது தியானம் செய்தாலும் போதுமே, பளிச்சுப் பளிச்சென்று எவ்வளவோ மின்னல் எண்ணங்கள் தோன்றும். நாம் நினைப்பதுதான் கிடையாது. ஒரு பாட்டியைப் போய்க் கேளுங்கள். 'கதை சொல்' என்றால், உள்ளத்திலே பெருங் கிளர்ச்சியுடன், 'நான் வாழ்ந்த கதையைச் சொல்லவா, வளர்ந்த கதையைச் சொல்லவா, வாழ்க்கைப்பட்ட கதையைத்தான் சொல்லவா?' என்று கேட்டு விடுகிறாள்.

இந்தியா வாழ்ந்த காலமுண்டு; வளர்ந்த காலமுண்டு; உலகத்துக்கொரு புதுமையாக ஜொலித்த காலமுமுண்டு. அந்தக் கதை யெல்லாம் எதற்கு என்பார்கள். ஒரு தேசம் முதுமை யடைவதில்லை. இந்தியா மாத்திரம் நித்திய யௌவனத்தை இழந்து விடுமா என்ன? ராமாயண காலத்தில், பாரத காலத்தில், பகவான் புத்தன் காலத்தில், அசோகன் காலத்தில், பின்னும் பலபல சரித்திர புருஷர்கள் காலத்தில் எல்லாம், வெள்ளலைக் கைகளைக் கொட்டி முழக்கிய கடல், இந்தியாவுக்கு மூன்று திசையிலும் இன்றும் முழங்கிக்கொண்டுதான் இருக்கிறது. வான

ளாவிய சிகரத்தையுடைய இமயமலையும் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. தென்கோடியில் 'நித்தம் தவம்செய் குமரி' யே இன்றும் எல்லையாக இருந்துகொண்டிருக்கிறது. இந்தியாவின் இயற்கை வளம் மாறவில்லை. மனிதன் மாத்திரம்தான் தலை கீழாக மாறிவிட்டான்!

இன்றைய இந்து சமுதாய வாழ்க்கையைப்பற்றி என்ன சொல்லுவது? என்ன சரித்திரம் எழுதுவது? பஞ்சை மனிதர்களுக்குச் சரித்திரம் வேறேயா என்று ஒரு சரித்திரக்காரன் கேட்டால், வாய்மூடி மௌனியாய்க் கிடக்க வேண்டியதுதான். பாட்டு, கூத்து, கேளிக்கை, —நாடகம் இவைகளைப்பற்றியெல்லாம் அவன் சிந்திக்க அவகாசம் ஏது? 'புல்லினில் வைரப்படை' தோன்றச் செய்யவேண்டும். அதற்குப் பாட்டு உண்டா? கூத்து உண்டா? கேளிக்கை உண்டா? அந்தப் பாட்டு முதலியவைகளை இரண்டு கையும் கூப்பி வரவேற்போம். செத்த பிணத்தைச் சுடுகாடு சேர்ப்பது போன்ற கேளிக்கைகள் நமக்கு வேண்டாம். இதை வெளிப்படச் சொன்னால், சீறி விழுவார்கள்; கலைகளுக்கு விரோதி என்று பட்டம் கட்டி விடுவார்கள்.

கலைகளுக்கு மனிதனா, மனிதனுக்குக் கலைகளா? சுவருக்குச் சித்திரமா, சித்திரத்துக்குச் சுவரா? உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் இடத்தில் சரச லீலைகள் நடத்துவது போலத்தான், சீரழிந்த சமுதாயத்தில் கலைக்காகவே கலையென்று சொல்லுவதும். 'கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கைகொட்டிச் சிரியாரோ?' கவலையற்ற வாழ்வு வாழும் மனிதர் சிரித்து விளையாடிச் சொகுசாய்க் காலம் கழிக்கலாம். உடைபட்டுச் சிதைந்து கிடக்கும் சமுதாயம் உயிர் பெறுவதற்கு வழி தேட வேண்டும்; வண்ணாத்திப் பூச்சிபோல் பறந்து மடிய வழி தேடலாகாது. மனிதனின் மனதை அலைத்துத் திரித்து அல்லற்படச் செய்யும் கலைகளே நாட்டில் மிகுந்துவிட்டன. அவைகளுக்குச் சிங்கார ரஸம் ததும்புபவை என்று நாமம் வேறு சூட்டிவிடுகிறார்கள்! இந்தக் கலைகளைவிட

அபினைக் கொடுத்து ஜனங்களைத் தூங்க வைப்பது மேல் என்று ஓர் அறிஞர் சொல்லுகிறார். விசுவாமித்திரரின் தவத்தைக் கெடுத்த'மேனகை போல, ஜனங்கள் மனங்குவிய முடியாமல், செயலற்று மயங்கிச் சிதையும்படி செய்யும் இந்தக் கலைகளின் ரகசியத்தை வெளியிட்டுச் சொன்னால், சோபாவில் படுத்திருப்பவர்களின் விரோதம் வந்துவிடும்.

ஒன்றரை வயதில் கொட்டுமேளத்தோடு கலியாணம். மூன்று வயதில் கணவனின் பரலோகப் பிராப்தி ; வைதவ்ய சித்தி. இப்படிக் குடும்பத்துக்கு ஒரு பிரதிநிதி. அதற்குப் பிராம்மண சமூகம் என்று பெயர். இந்த அழகைப் பிற சமூகங்கள் வேறு பின்பற்றி விடுகின்றன ! இந்த நிலைமையால், நேரிடும் விபரீதங்கள் எத்தனை எத்தனையோ. அவையெல்லாம் மிக ரகசியம். அவற்றை யெல்லாம் தீரமாய் வெளியிடலாமா? ரணத்தைக் கீறி ஆற்றவேண்டும் என்பார்கள். மருந்து கொடுத்தே சொஸ்தப்படுத்திவிட வேண்டும் என்று ஆசைப்படுவோரை என்ன செய்ய முடியும்? 'நல்லதொர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ ?' அவள் விதவை. அது மனிதர்களின் முடிவு. இயற்கை என்ன செய்கிறது? அவள் விதவையானால், ஏன் வளர்கிறாள்? அவளுக்கு மனம் எதற்கு? உணர்ச்சி எதற்கு? இயற்கை முட்டாள்தனமானது என்று சொல்லலாமா ? எப்படியிருந்தாலென்ன ; மனிதன் இயற்கைக்குப் பணிந்துதான் போகவேண்டும். எதிர்ப்பது எதிராறு நீஞ்சுவதுபோல. நீஞ்சினால் கைதான் சளைக்கும். இதோ கண் முன்னே அந்தக் கதியைத்தான் நாம் அடைந்து விட்டோமே. ஆனாலும், அதைப் பற்றிப் பேசலாகாது ; பொத்திப் பொத்தி வைக்க வேண்டும் !

மகா கீர்த்திவாய்ந்த நாடகாசிரியரான ஷேக்ஸ்பியர் ஒரு நாடகம் எழுதினார். ஹாம்லெட் என்பது அதன் பெயர். ஹாம்லெட் ஓர் அரச குமாரன். தந்தையைக் கொன்று, தாயைக் கெடுத்து, ராஜ்யத்தை அபகரித்த ஒரு கிராதகன் மீது அவனுக்குச் சந்தேகம். யோசனை, யோசனை, மாளாத யோசனை—ஹாம்லெட் யோசித்துக்

கொண்டே யிருக்கிறான். கடைசியில் சோகமான முடிவு. பல பேர் மரணம்; தானும் அழிகிறான். நாட்டிலே இந்த மாதிரி ஹாம்லெட்டுகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். மெத்தையிற் படுத்துப் புராளுவோருக்கு இவர்களைப் பற்றித் தெரியாது. சொன்னால் புரளி செய்வார்கள். வாழ்க்கை குலைந்த இந்த வாலிபரின் எண்ணங்கள் என்ன கோரமானவை என்பதை வெளியே சொல்லலாமா? எடுத்துக் காட்டலாமா? வாய்க்காலுக்கு அணைபோட்டு, பெரிய ஆற்றைக் கிளப்பிவிடும் வித்தைபோல, அந்தக் கோர எண்ணங்களை அடைத்து வைத்திருக்கிறோம். அவைகளைப் பற்றிப் பேசக்கூட நமக்குப் பயமா யிருக்கிறது. பேசினால் சாஸ்திரம், சமூகம், சட்டமெல்லாம் சரமாரியாக நம்மேல் பாய்ந்துவிடும்.

தன்னைத் தானே மறக்கும் மறதியென்ற வேதாந்தம் தற்கொலைக்குச் சமானம். என்றாலும், அந்த வேதாந்தத்தில் மூழ்கித் தப்பித்துக்கொள்ளவே, நாம் எல்லாரும் ஆசைப்படுகிறோம். ஆனால், நாம் பகலையும் இரவையும் மறந்தால், சூரியன் உதிப்பதையும் அஸ்தமிப்பதையும் நிறுத்திவிடுவானா? குளிர்வதும் சுடுவதும் நின்றுவிடுமா? இருளும் ஒளியும் அகன்றுவிடுமா?

கிறிஸ்து பெருமான் ஓர் உதாரணம் சொன்னார். மணவாளன் வரும் நேரம் தெரியாதிருந்த ஒரு கோஷ்டி கன்னிப் பெண்கள் உறங்கி விழுந்துகொண் டிருந்தார்கள். இன்னொரு கோஷ்டிக்கும் அவர் வரும் நேரம் தெரியாது. என்றாலும், அவர்கள் தீபங்களுடன் சதா விழித்துக்கொண் டிருந்தார்கள். மணவாளன் வந்து போய்விட்டார். விழித்திருந்தவருக்குப் பாக்கியம். உறங்கினவருக்கு உறக்கமே மிச்சம். ஒரு புதிய மாறுதல் இந்தியாவுக்கு உண்டாகப் போவது என்னவோ நிச்சயம். எப்பொழுது என்று சொல்ல முடியாது. இப்போது உறங்குபவர் அப்போது நடமாடிக் கொண்டிருக்கும் வெற்றுடம்பா யிருப்பார்கள். அதை மாத்திரம் எச்சரிக்கை செய்யலா மல்லவா?

கலையும் கலைஞனும்

அழகைக் கண்டு காட்டுபவன் கலைஞன்; அதைக் கண்ட இடத்திலெல்லாம் 'கொலை' செய்பவன்தான் ரஸிகன். அனுபவிப்பதென்றால் என்ன? சமாப்தி செய்வதுதானே? கலைஞன் அழகைப் படைப்பான், காண்பான், தொழு வான். அந்த ஒவ்வொரு காரியத்திலும் அவன் ஆனந்தம் அடைகிறான். ரஸிகனுக்கும் அழகைக் காணத் தெரியும். ஆனால், அதிலே அவனுக்கு இன்பம் உண்டாவதில்லை. கண்ட அழகை விழுங்கினால்தான் அவனது ஆசை தீரும். அழகான புஷ்பத்தைக் கண்டால், அதைக் கொய்து, உடையிலே சொருகி, மேஜையிலே பரப்பி, கசக்கி, வாட்டினாலொழிய, ரஸிகன் திருப்தியடையான்.

ஆயினும், ரஸிகன்தான் உண்மை மனுஷ்யன்; இயற்கையைவிட்டு மீறாமல் இருப்பவன். குழந்தைகளின் மனோபாவத்தி னின்றும் இதை அறியலாம். அழகான பொம்மையை அதனிடம் கொடுங்கள். கடித்து, உடைத்து, நொறுக்கிவிட்டுத்தான் ஓயும். வீட்டிலே குழந்தையின் மனதைக் கவராத பொருள்கள் வெகு பத்திரமாய் இருக்கும்; கவரும் பொருள்களோ நாசம் தான். ரஸிகனின் பெருமையும் இதுதான். நாளைக்கே ஒரு யாத்திரைக் கூட்டம் ஆக்ராவிலுள்ள தாஜ்மஹாலை உடைப்பதற்காகப் புறப்பட்டால், அதை நான் ரஸிகர் கூட்டம் என்று கட்டாயம் ஒப்புக்கொள்வேன். ஆனால், எந்த ரஸிகர் கூட்டத்துக்கும் அவ்வளவு துணிச்சல் கிடையாது என்ற தைர்யம் எனக்குப் பூர்ணமாய் உண்டு.

ஒரு ஜனங்களிடம் கலைஞனின் தன்மை எவ்வளவுக் கெவ்வளவு அதிகரிக்கிறதோ அத்தனைக் கத்தனைதான் நாகரிக வளர்ச்சி ஏற்படும். குண அழகு, உருவ அழகு, எண்ண அழகு இத்தனை விதங்களும் கலையிலே உண்டு. குண சௌந்தர்யவான்கள் வாழ்க்கைக் கலைஞர்கள்.

தாகூர் ஒரு கலைஞர் என்றால், மகாத்மா காந்திக்கும் கலையுலகிலே சம்பந்தமுண்டு. தாகூர் கவிதை எழுதுவார் காந்தியோ கவிதா சொரூபமாகவே விளங்குகிறார்; காந்தியின் ஜீவியமே ஒரு காவியமாகும். வாழ்வைப் பொருளுடையதாக, பரிமளிக்கச் செய்பவன் கலைஞன். கவிதை, இலக்கியம், ஓவியம், வேதாந்தம், மதம் இவை யாவற்றின் பின்னேயுமுள்ள மூல மனோபாவம் ஒரே ஒன்றுதான். அழகை—சத்தியத்தை—எங்கும் காண்பது, படைப்பது, வணங்குவதுதான் அது.

அழகுதான் எப்படிப்பட்டது? அழகைக் காண அநேக சமயத்தில் நம்மை நாமே தயார் செய்து கொள்ள வேண்டியதாய் இருக்கிறது. மூக்கும் முழியும் நன்றாயிருந்த ஒரு பெண் ஏதோ சாகஸமும் அழும்பும் செய்து கொண்டிருந்தது. "ஏ அவலட்சணமே!" என்று அந்தப் பெண்ணை விளித்துக் கோபித்துக் கொண்டாள் அதன் தாயார். லட்சணம்—அதாவது அழகு—மூக்கிலும் முழியிலும் மாத்திரம் இல்லை என்று ஏற்படவில்லையா? ரூப சௌந்தர்யத்தை நாம் தனித்துப் பார்ப்பதில்லை. குண சௌந்தர்யமும் சேரவேண்டும் என்கிறோம். உண்மைக் கலைஞன், குண சௌந்தர்யத்திலேதான் கவனம் செலுத்துகிறான்.

நொண்டியை, ஊமையை ஓர் இலக்கிய கர்த்தா அல்லது ஓவியன் சிருஷ்டிக்கிறான். அந்த நொண்டி அல்லது ஊமையிடம் நமது உள்ளத்தையே பறிகொடுத்து விடும்படியும் செய்துவிடுகிறான். சௌந்தர்யத்தின் சிகரத்தை அந்த நொண்டி அல்லது ஊமையிடம் நாம் காணும்படி செய்துவிடுகிறான். பிரளயகால ருத்ரனின் கோர தாண்டவத்திலே, கலிபுருஷனின் கட்டுக்கடங்கா வாள் வீச்சிலே, வெறிகொண்ட நரசிம்மனின் பயங்கர சொரூபத்திலே, ஓவியனும் சிற்பியும் கவிஞனும் நமது மயிர் கூச்சிடும் எழில் ஒன்றைக் காட்டிவிடுகிறான். அது எப்படி முடிகிறது? சிருஷ்டி ரகஸ்யத்திலே, நம்மையு மறியாப் பரவச நிலையிலே லயிக்கும்படி செய்துவிடுகிறான் கலை

ஞன். உண்மையான சௌந்தர்யத்தை அப்போதுதான் நாம் தர்சிக்கிறோம்.

கலைஞன் நமக்கு அழகைக் கண்டு காட்டுவது மாத்திரம் அல்ல; நம்மை அநேக சமயங்களில் அதைக் காணத் தயாரும் செய்துவிடுகிறான். குதிரையின் கண்களிலே ஒரு மறைப்புப் போட்டு ஓட்டுகிறார்கள் பாருங்கள்; அதே மாதிரி கலைஞனும் நம் கண்களை நேர்வழியில் திருப்புகிறான். மறைக்க வேண்டியதை மறைத்து, விளக்க வேண்டியதை விளக்கி, திருத்தவேண்டியதைத் திருத்தி, மெருகு கொடுப்பது கலைஞனின் நுட்பமாகும். பிரத்யட்ச நிலைமைகளையெல்லாம் அப்படியப்படியே 'போட்டோ'ப் பிடிப்பது அவன் காரியமல்ல. அமானுஷ்யம், அசாத்தியம் என்ற சொற்களெல்லாம் கலைஞனின் அகராதியிலே கிடையாது. அவனுக்கு எல்லாம் சாத்தியமேயாகும்.

நாடகத்திலே பாடலாமா கூடாதா? நிஜ ராஜா அப்படித்தான் அழுதிருப்பானா? இந்த மாதிரி கேள்விகளெல்லாம் உண்மைக் கலைஞனுக்குக் கிடையாது. பலன், பலன்! என்ன பலனை அவன் விளைவிக்க விரும்புகிறானோ அதற்கு இது உதவுமா, உதவாதா என்பதுதான் அவனது கேள்வி. குவீன் கிரிஸ்டினா என்று ஓர் ஆங்கில ஸினிமா வந்தது. அதிலே கிரெட்டா கார்போ ராணியாக நடித்தாள். பிரம்மாண்டமான ஜனக் கூட்டம் ஒன்று கூடி யிருக்கிறது. ராணி அந்தப் பிரமாண்டமான கூட்டத்துக்கு நடுவே, தனது மகுடத்தைத் துறந்து, ஜனக் கும்பலை விலக்கிக்கொண்டு, கம்பீரமாக நடக்கிறாள். ஜனங்கள் அன்புக் கண்ணீர் சொரிகிறார்கள். இந்தக் காட்சியைக் கண்டவர் மனமெல்லாம்தான் உருகியது. ஆனால், பிரத்யட்ச வாழ்க்கையிலே, இந்தக் காட்சி இப்படி நடப்பது சாத்தியமே இல்லை. ஸ்ரீராமபிரான் கானகம் சென்ற நாள் தொடங்கி, மனிதகுலத்தின் துன்பத்தைக் களைந்தெறியப் புறப்பட்ட புத்தன் நடுவாக, எட்டாம் எட்வர்டு முடிதுறந்து வெளியேறியது வரையில், ஜனக்கூட்டத்துக்குத் தெரியாமலே ரகஸ்யமாகத்தான்

மன்னர்கள் வெளியேறிச் சென்றிருக்கிறார்கள். பிரத்யட்சத்தில் இது நடக்குமா நடக்காதா என்ற கவலை கலைஞனுக்குக் கிடையாது. ஆனால், கலையைக் காண்போரின் மனத்திலே அது உண்மையேபோல இருக்க வேண்டும் என்ற ஒன்றுதான் அவன் சிரத்தையெல்லாம் கூடி.

கலை ஒரு தனி சிருஷ்டி; தனி உலகம். இன்பக் கனவு உலகம் ஒன்றுக்கு நம்மைக் கொண்டு செல்வது கலை. அது நம் இதயத்தைக் கௌவி, உணர்ச்சிகளை உருக்கி, தூய்மை செய்யும் அக்கினி. பிரத்யட்ச உலகிலே நாம் அடையாத—அடைய முடியாத—ஆத்மானுபவத்தை அடையச் செய்து புனிதமாக்கும் உன்னத சாதனம் கலை; மனிதனது சௌந்தர்ய உணர்ச்சியினின்றும் பிறந்து, சௌந்தர்யானுபவ இச்சையைப் பூர்த்தி செய்வது. அது எல்லாருக்கும் விளங்குவது; ஒருவருக்கும் விளங்காதது. அநுபவிக்கத்தக்கது; ஆராய்ச்சிக்கு மாய்வது. காரண காரிய விவேகமெனும் வாள் கொண்டு, கலையெனும் மலர்ச் செண்டைச் சேதிப்பவன் கலையை ஒரு நாளும் அறிய முடியாது. அது குழந்தையைப்போன்றது. கலை மானிடனின் அற்ப ஞான வரம்பை மீறி, மகா தத்துவங்களைக் காட்டாமல் காட்டுவது. ஆத்ம மார்க்கத்திலே அந்தகனுக்கும் வழி காட்டுவது கலையே. மனிதனது சகல பெருமைக்கும் ஆதார பூதமானது, விலங்கு வாழ்வினின்றும் மனிதனை வேறு பிரித்து நிற்பது கலைதான். மனித வாழ்வில் கலைக்குக் கடன்படாத அம்சம் என்ன இருக்கிறது? கலை, மண்ணை விண்ணாக்கும் ரசவாதம். அது ஆனந்த வாரிதி. அதில் மூழ்கித் திளைத்தவன் கரை காண முடியாது. எதற்காகக் கரை காண வேண்டும்?

'தமிழை ஜனநாயகப் படுத்தவேண்டும்' என்ற தலைப்புடன் சென்னையின் ஆங்கிலத் தினசரி ஒன்றில் கொஞ்ச காலத்துக்கு முன் ஒரு கட்டுரை படித்தேன், அதை எழுதியவரும் ஓர் ஐரோப்பியர்தான்.

ஜனநாயகம் என்ற உடனே எனக்கு ஷாவின் சில வார்த்தைகள் ஞாபகம் வருகின்றன. "ஜனநாயகம் ஒரு முடிவைச் செய்யலாம். ஆனால், அதை நிறைவேற்ற ஜனநாயகத்திடம் ஒப்படைக்கலாகாது. ஒப்படைத்தால் ரயில் பிரயாணிகளே ரயிலை ஓட்டும்படி விட்டுவிட்டால் என்ன கதி நேருமோ அந்தக் கதிதான் நேரும்" என்றார் பெர்னார்ட் ஷா. 'அவர் பெரிய ஞானி; அவருக்குத் தாடி மீசை கூட உண்டு. ஆகையால், அவர் சொல்வதில் அர்த்தமில்லாமல் இராது' என்று நான் சொல்லவில்லை. ஆனால், பெர்னார்ட் ஷாவின் இந்த வார்த்தைகள் யாரும் சுலபமாக மறுக்கக்கூடியவை அல்ல.

இலக்கியத்தை 'ஜன நாயகம்' செய்வதென்றால், என்ன அர்த்தம்? அரசியல் ஜனநாயகத்துக்கே நிபந்தனைகள் உண்டு என்றால், 'இலக்கிய ஜனநாயகத்'துக்கு ஒரு நிபந்தனையும் இராதா? இலக்கியம் என்பதுதான் என்ன, எதற்காக?

விஞ்ஞான சாஸ்திரம் இருக்கிறது; அதனால் ரயில், தந்தி, ஆகாய விமானம் எல்லாம் செய்வது சாத்தியமாயிற்று. வைத்திய சாஸ்திரம் இருக்கிறது; வியாதிகளை அகற்றுகிறது. கணித சாஸ்திரம் இருக்கிறது; அது சகல சாஸ்திரங்களுக்கும் இணையற்ற உதவி புரிகிறது. இம் மாதிரியே பற்பலசாஸ்திரங்களும் மனிதனுக்குப் பல்வேறு உதவிகளைப் புரிகின்றன. இலக்கியம் என்பது என்ன? அதனால் மனிதனுக்கு என்ன உதவி? 'கலை கலைக்காகவே' என்று கட்சி பேசுவோர் இந்தக் கேள்விகளைக் கேட்டவுட

னேயே பரிகாசம் செய்துவிடக்கூடும். பரிகாசம் பதிலாகாது. இலக்கியத்தால் மனிதனுக்குப் பயனுண்டா இல்லையா என்பதை ஆராய்ந்து, இல்லை என்றே முடிவு ஏற்பட்டால், உடனே இலக்கிய ஒழிப்பு இயக்கம் ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்பது இதற்கு அர்த்தமல்ல. ஆண்டவனின் படைப்பிலே தோன்றி வளர்பவற்றிற் கெல்லாம் காரணமும் பயனுமுண்டு. அது ஓர் எல்லையற்ற சங்கிலித் தொடர். அநாதியானது; அந்தமுமில்லாதது. அந்தக் காரணகாரியங்களை நாம் ஆராய்வதில் தவறில்லை; ஓரளவு பலனுமுண்டு.

இலக்கியம் என்பது மனிதனுடைய பாஷைக்கும் மனத்துக்கும் இடையே நடைபெறும் 'யோக'மாகும். இலக்கியத்தால் பாஷை வளர்கிறது; மனிதனது மனமும் மலர்ந்து விரிகிறது. மனிதனது பாஷையும் மனமும் இன்றுள்ள வளர்ச்சி பெற்றிராவிட்டால், எந்தச் சாஸ்திரம் தான் இன்றைய வளர்ச்சியை அடைந்திருக்க இயலும்? மனித நாகரிகத்துக்கும் அதன் பயன்களுக்குமெல்லாம் ஆதார பூதமாய் நிற்பது பாஷை வளர்ச்சிதான். அந்தப் பாஷையின் உயிர்நாடி இலக்கியமாகும். ஒரு மனிதனுடைய மனோ நிகழ்ச்சிகளை உலகெங்கும் பரவி நிலைத் தோங்கச் செய்யும் சாதனம் இலக்கியம். ஒரு மனிதனின் மனக் கனவுகளை ரூபங்கொண்டு இயங்கும்படி செய்வது இலக்கியம். 'மேஜை நாற்காலியால், பயனுண்டு; உளி, சுத்தியலால் நமக்கென்ன பயன்?' என்று கேட்பாருண்டோ? மனதைக் கூர்படுத்தி, உள்ளத்தை மலரச் செய்யும் கருவி இலக்கியம். இலக்கியத்தின் பலனை அளவிட்டுச் சொல்ல முடியாது.

இந்த இலக்கியத்தில் ஜனநாயகம் வேண்டும் என்கிறார்களே, அவர்கள் யார்? என்னதான் வேண்டும் என்கிறார்கள்? தமிழ் இலக்கியத்தில் ஜனநாயகம் வேண்டும் என்பவர்களில் மிக மோசமான ஓர் உதாரணம் நான் மேலே குறிப்பிட்ட கட்டுரையாளரே. அவர் ஓர் ஐரோப்பியர். என்னதான் இருந்தாலும், தமிழ் இலக்கியத்தின் தற்போ

தைய உண்மையான ஸ்திதியை அவர் அறிந்திருக்கவே முடியாது. அப்படி யிருக்க, அதில் ஜனநாயகம் வேண்டும் என்று அவர் கூறுவது விந்தையா யில்லையா? அவரைச் சொல்லிப் பயனில்லை. நம்மவரிலும் அவர் கட்சியைச் சேர்ந்தோர் ஏராளமாயிருக்கிறார்கள். பெரும்பாலும் அவர்கள் யாவரும் ஆங்கில மோகம் பிடித்தவர்கள். "தமிழா! அது எனக்குப் புரியாது, ஸார். நீங்களே அதைக் கொஞ்சம் படித்துச் சொல்லுங்களேன்" என்று வெட்கமில்லாது சொல்லும் தமிழர் எத்தனையோ பேரை நாம் பார்த்ததில்லையா? இங்கிலீஷாயிருந்தால் அவர்களுக்கு மிகச் சுலபமாய்ப் புரியுமாம். (புரியா விட்டால் அகராதியைப் பார்த்துக் கொள்ளுவார்கள்.) தமிழா யிருந்தால் புரியாது? புரிந்துகொள்ள முயற்சியும் செய்யமாட்டார்கள். இவர்கள்தான் பெரும்பாலும் 'எளிய தமிழ்!' 'எளிய தமிழ்!' என்று கூக்குரல் போடுகிறார்கள்.

இந்த 'எளிய தமிழ்'க் கூச்சல் மகா மோசமாய்ப் போய் விட்டது; அளவு கடந்து போய்விட்டது. எளிய தமிழ்தான் எங்கும் வந்து விட்டதே, இப்பொழுதாவது அந்தக் கூச்சல் ஓயலாமே? இன்னும் அது ஓயவில்லை. பத்து வருஷத்துக்கு முன்னே இந்தக் கூச்சலைப் போட்டுக் கொண்டிருந்த அதே கோஷ்டியார் இன்னும் அதை விடாமல் போட்டுக் கொண்டிருக்கிறார்களே யல்லாமல், தமிழை ஆதரிப்பதாகக் காணவில்லை.

எளிய தமிழ் வேண்டாமென்று நான் சொல்லவில்லை. எளிய தமிழ், பாமர மக்களும் புரியக்கூடிய தமிழ், நடைமுறையில் புழங்கும் உயிருள்ள தமிழ் வேண்டியதுதான். அதற்காக, ஒரு வரம்பும் வேண்டாம் என்றா அர்த்தம்? புதிய புதிய கருத்துக்களை வெளியிடும் பதத்தொடர்கள் வேண்டாம் என்றா கருத்து? கருத்துக்களை வெளியிடும் கலையிலே ஓர் ஒழுங்கை உண்டாக்கும் இலக்கண வரம்புகளை யெல்லாம் நிலைகுலைக்க வேண்டும் என்றா பொருள்?

எளிய தமிழே 'இலக்கியத்தில் ஜனநாயக'மாக இருக்கலாம். ஆனால், அதை வேண்டு மென்போரில் பலர், 'இலக்

கியத்தில் அராஜகம்' அன்றே வேண்டு மென்கிறார்கள் ! 'கடினமான பதச் சேர்க்கைகளே கூடாது; கடினமான கருத்துக்களே, அழகான நடையே கூடாது; இலக்கண வரம்புகளே கூடாது' என்பதே இலக்கியத்தில் ஜனநாயக மானால், அதைவிடப் பழம் பண்டிதர்களுடைய கம்ப ராமா யணம், பெரிய புராணம், சிலப்பதிகாரங்களில் புகுந்து விடுவதே மேல் என்றுதான் தோன்றுகிறது.

பழம் பண்டிதர்கள் கம்ப ராமாயணத்துக்குப் பிறகு உலகம் நடக்கவில்லை என்பவர்க ளானால், இந்த எளிய தமிழ் வாதிகள், மிட்டாய்க் கடைக் கப்புறம் நாகரிகம் வளரவில்லை என்றல்லவோ கட்சி பிடிக்கிறார்கள்?

பழம் பண்டிதர்களைப்பற்றிப் பொதுவாகப் பிரஸ்தா பிக்கும்போது, நான் ஒரு வார்த்தை சொல்வது அவசிய மாகும். பழம் பண்டிதர்கள் எல்லோரையும் வளர்ச்சி யற்றவரென்று சொல்லிவிட முடியாது. உதாரணமாக, மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்களை எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் புராதனத் தமிழ் நூல்களில் பேராராய்ச்சியுடைய கல்விக் களஞ்சியம். அவர்கள் எழுதியுள்ள பல அரிய கட்டுரைகள் மிக எளிய நடையில் அமைந்திருக்கின்றன. அவை பண்டிதரும் பாமர ரும் ரஸிக்கத் தக்கவையாய் இருக்கின்றன. எனவே, எல் லாப் பண்டிதர்களையும், எளிய நடை விரோதிகளெனக் கூறமுடியாது. காலப் போக்கை யனுசரித்துப் பண்டிதர் கள்கூட மாறி வருகிறார்கள். ஆனால், இந்த 'எளிய நடை'க் கூச்சல்காரர்கள் மட்டில் ஓயமாட்டார்கள் போல் இருக்கிறது !

"எளிய நடை! எளிய நடை! சகல விஷயமும் எளிய நடையிலேயே இருக்கவேண்டும்" என்றே இவர்கள் கூச்சலிடுகிறார்கள்.

நடையில் ஓர் இயல்பும், ஜீவனும், தெளிவும் வேண்டு மென்றால் சாத்தியம். எதை யெடுத்தாலும் எளிய நடை யென்பது எப்படி முடியும்? கவிதைக் கனவுகளையும், ஓசை யோடு பொருளை யிழைக்கும் மதுர வர்ணனைகளையும், சிடுக்

குகள் நிறைந்த கலா நுட்பக் கட்டுரைகளையும் எளிய நடையில் எழுதுவதென்றால், எப்படி முடியும் ? எளிய நடையில் இருப்ப தெல்லாந்தான் இலக்கியம் ஆகிவிடுமா? 'பூனை வந்தது; வாலை ஆட்டிற்று; ஓடிப்போயிற்று' என்பது மிக எளிய நடைதான். எளிய நடைக்காரர்களுக்கு இதுவே பெரிய இலக்கியமாகும் போலும்.

பிரசாரத்துக்காக எழுதுகிறோம்; விஷய விளக்கத் துக்காக எழுதுகிறோம்; பொழுது போக்கி இன்ப மூட்டவும் எழுதுகிறோம். எல்லாவற்றையும் ஒரே எளிய நடையில் எழுதுவதென்பது நடக்கிற காரியமல்ல. நமக்கெல்லாம் மோகம் பிடித்திருக்கிற ஆங்கிலத்தைத்தான் எடுத்துக் கொள்ளுங்கள். எத்தனை எத்தனையோ நடைகள் இன்றும் ஆங்கிலத்தில் இல்லையா ? கடின நடையில் எழுதும் ஆங்கில ஆசிரியர்களும், கீர்த்தியும் பெருமையும் பெறவில்லையா ? ஆசிரியர்களுக்கு, நடையிலே, அவரவரிடம் சுபாவமான ஒரு தனித் தன்மை வேண்டும். அதற்காக, செத்துச் சீவனற்றுக் கிடக்கும் பழைய வார்த்தைகளை அகராதியினின்றும் பொறுக்கி யெடுத்து உபயோகிக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. மறுபடியும் உயிர் கொடுக்கும் சக்தி நமக்கிருந்தால், அந்தக் காரியத்தைக் கூட நாம் செய்யலாம். நமக்குப் புதுப் புது வார்த்தைகள், அமைப்புகள், பதத் தொடர்கள் வேண்டும். புதுப் புதுக் கருத்துக்கள் வேண்டும். ஏற்ற வார்த்தைகளில் அந்தக் கருத்துக்களை நாம் வெளியிடவும் வேண்டும். நல்ல கருத்துக்கள், அவற்றுக்குப் பொருத்தமான வார்த்தைகள் - இவைதான் நமக்கு வேண்டுமே யன்றி, அர்த்தமில்லாமல் 'இலக்கியத்தில் ஜனநாயகம்' வேண்டுமென்றோ, 'எளிய தமிழ், எளிய தமிழ்' என்றோ போடும் வெறும் கூச்சல்கள் வேண்டிய தில்லை.

நாங்கள் அப்போது தொடங்கக் கோடித்துக்கொண்டிருந்த ஒரு வாரப் பத்திரிகைக்கு நிரந்தரமான முகப்புப் படம் ஒன்று வேண்டியிருந்தது. எங்கிருந்தோ ஒரு வங்காள ஓவியர் வந்து சேர்ந்தார். எங்களுக்கு அவர் படம் வரைய உட்கார்ந்தார். நீல வர்ணத்தை எடுத்தார்; குழைத்தார். 'புருஷ்'ஷால் காலை முதல் மாலை வரையில் என்னவோ தீற்றிக்கொண்டிருந்தார். காகிதமெல்லாம் ஒரே நீலம். இடையிடையே வெள்ளைக் கோடுகள், வளைந்து நெளிந்து படுத்திருந்தன. எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும், அது ஏதோ ஓர் உன்னத சித்திரமாய்த்தான் இருக்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்தோம். ஏனென்றால், அந்த ஓவியர் ஒரு தங்கக் கம்பி. பழகிய சில மணி நேரத்துக்குள்ளேயே அவரிடம் எங்களுக்கு அத்தியந்தப் பிரேமை ஏற்பட்டுவிட்டது. அப்பேர்ப்பட்ட குணவான் எழுதிய படத்தில் எப்படிக் குறை இருக்க முடியும்?

சித்திரத்தின் ஆழ்ந்த கருத்துக்களையெல்லாம் அவரே விளக்கினார். படம் 'பூச்சாண்டி' மாதிரிதான் இருந்தது. அதனால் என்ன? ஆழமான அந்தரார்த்தங்களும், கைதேர்ந்த கலா நுணுக்கங்களும், சூட்சும தர்சனங்களும் அதில் அடங்கியிருந்ததை, அவருடைய வியாக்கியானத்தின்மேல் நாங்கள் புரிந்துகொண்டோம். பிறகு, படத்தின் சுவையை நாங்களும் அநுபவித்தோம் — அல்லது அநுபவிக்க முயற்சித்தோம்—அல்லது அப்படிப் பாவனையாவது செய்தோம். படத்தைக் கடைசியில் முதலாளி பார்வையிட்டார். "எப்படி, சித்திரம்?" முதலாளி திக்பிரமை கொண்டவர்போல மௌனம் சாதித்தார். "கலைச் சுவை ததும்புகிறது இதில்" என்று நாங்கள் அவருக்கு உறுதி கூறினோம். அவர் மசியவில்லை. இறுதியிலே அவர், "கலை

வேண்டாம், ஸ்வாமி. படம் போதும்" என்று கத்தத் தொடங்கிவிட்டார். கலைக்காகப் படமா, படத்துக்காகக் கலையா? இந்தப் பிரச்னையை நாங்கள் யோசித்தோம். முதலாளியின் கட்சிதான் ஜயித்தது. கலை பெரிதா, படம் பெரிதா?

அந்தக் கேள்வியை இன்னும் நீட்டிக்கொண்டே போகலாம். இலக்கணம் பெரிதா, இலக்கியம் பெரிதா? தர்மம் பெரிதா, வாழ்வு பெரிதா? சாஸ்திரம் பெரிதா, சங்கீதம் பெரிதா? இதிலே ஏற்பட்டிருக்கும் மயக்கமே பெரும் தடுமாற்றத்தை நம்மிடம் உண்டாக்கி யிருக்கிறது. ஒவ்வொரு கலை, சாஸ்திரங்களிலுமே இந்தக் குளறுபடி நிலவி யிருக்கிறது. 'தொன்னைக்கு நெய் ஆதாரம்' என்ற சித்தாந்தம், மற்றெல்லாக் கலைகளிலும்போலவே, நமது சங்கீதத்துறையிலும் இன்று எப்படியோ புகுந்திருக்கிறது.

சங்கீதம் என்பது செய்யுள் அல்ல; ராஜீய சமூக சமயப் பிரசங்கமல்ல; தமிழ் அகராதியுமல்ல. சங்கீதம், நாதத்தில் இனிமை காணும் கலை; நாதத்தில் இனிமை காட்டும் கலை. வாய் பேசத் தெரியாது; பாஷை புரியாது. ஆனால், உருப்புரியாமல், அளந்த, ஆற்றலான வெறுங் குரலை மட்டில் தன்னை மறந்து ஆனந்தமாய் இழுக்கும் இரண்டு அல்லது மூன்று வயதுக் குழந்தைகள் எத்தனை யையோ நாம் காண்கிறோம். இதேமாதிரி அருமையான சங்கீதத்தை, ஆவலோடு பருகும் சின்னஞ் சிறு குழந்தை களையும் நாம் பார்க்கிறோம். நாதத்தை இசைப்படுத்தி வெளிப்படுத்த அந்தக் குழந்தைகள் சுபாவமாக முயற்சிக் கின்றன; இசை நயத்தோடு கூடிய நாதத்தைக் கேட் பதில் இயற்கையாகவே அந்தக் குழந்தைகள் ஈடுபட்டு விடுகின்றன. இந்தக் குழந்தைகளிடம் காணப்படும் இயல்புதான் சங்கீதத்தின் மூலகாரணமாகும். இசை நயத்தால் இன்ப மெருகு ஏற்றிவிடப்பட்ட நாதத்தை வெளியிடவும் அனுபவிக்கவும் மனிதரிடம் இயற்கை யாகவே உண்டான முயற்சிகளின் விளைவும் விகாசமும் தான் சங்கீதக் கலை.

கண்ணன் குழலூதினன். கோபியர் மதிமயங்கினர்; ஆயர் மனஞ் சுழன்றனர்; ஆவும் புள்ளும் தலை கறங்கின. நாத சுகத்தின் மோகன சக்தி, அப்படிப்பட்டது. பாம்பாட்டியின் மகுடி ஓசை இன்றும் சர்ப்பங்களை ஆட்டி வைக்கவில்லையா? உன்னதமும் சுத்தமுமான சங்கீதத்துக்கு ஒரு முக்கியமான சோதனை உண்டு. சங்கீத சாஸ்திர சாகரங்களிலே நீந்திய வித்வான்களை யன்றி, என் போன்ற பாமரருக்கும்—என், குழந்தைகளுக்குங்கூட—அது ரஞ்சிதமா யிருப்பது நிச்சயம். சங்கீத சாஸ்திரம் வளர்ச்சி பெறுவது, அதனை யறியாத என்னை ரமிக்கச் செய்வதற்காகத்தான் என்றுகூட, நான் பாத்தியம் கொண்டாடுவேன்.

நாதத்தினல் இன்ப மூட்டும் கலை சங்கீதம் என்ருல், குளுமையான ஓசை அல்லது குரல்தான் அதன் ஜீவாதாரம் என்று சொல்லவா வேண்டும்? இந்த அஸ்திவாரத்திலே தவறு செய்யும் எத்தனையோ பாடகரை நாம் தமிழ் நாட்டிலோ காண்கிருேம். கர்ண கடூரமான குரலை வைத்துக்கொண்டு, எத்தனை அற்புதமாய்ப் பாடித்தான் பயன் என்ன? தங்களுடைய அரிய சங்கீத விற்பத்தி யெல்லாம் நிரக்கவில்லையே என்று வேறு அவர்கள் வருந்துவதுதான் இன்னும் விநோதம். "அரியக்குடியை விடப் பெரிய வித்வான் ஒருவர் இருக்கிருர். அவரும் பூச்சியையங்காரின் சிஷ்யர்தான். உங்களை அவரிடம் அழைத்துச் செல்லுகிறேன், வாருங்கள். அவர் மகா வித்வான், மகா வித்வான்" என்று சொல்லி, என்னை ஒரு வித்வான் வீட்டுக்குப் பாகவத நண்பர் ஒருவர் ஒரு முறை அழைத்துச் சென்ருர். அவர் அபாரமாய்த்தான் பாடினர். 'ப—த—நிப—தப—டப' என்று அவர் அமக்களமாய் ஏதோ ஸ்வரம் பாடி, பக்க வாத்தியக்காரர்களை யெல்லாம் திணற வைத்தார். ஆனல், ஸப்த ஸ்வரமும் ஒரே ஸ்வரமாய்த்தான் இருந்தது. தாளப் பிரமாணம் மகா கச்சிதமா யிருந்திருக்கும் என்பதில் தடை யில்லை. எனினும், என் வீட்டுக் குழந்தை 'டங்கா—டமாரம்' படிக்கும்போது குரலை மாற்றுமே,

அதுகூட இல்லை அவருடைய ஸ்வர தாண்டவத்திலே. சில வித்வான்கள் ஸ்வரப் பிரஸ்தாரம் செய்யும்போது, ஒரு வித வெறி, நம்மை யறியாத ஓர் ஆனந்த ஜன்னி நம்மிடம் ஏற்பட்டு விடுகிறது. அதை அங்கே நான் அடைய முடிய வில்லை. இயற்கையாலோ ஸாதகத்தினாலோ நல்ல குரலைப் படைத்திராதவர், சங்கீத ஆசையைக் கைவிடுவதுதான் அழகாகும்.

மிக ஆரம்ப தசையி லுள்ளதை யன்றி வேறு எந்தக் கலையுமே, ஓரளவு சம்பிரதாயங்களைச் சார்ந்தெழுந்த கட்டிடந்தான். அவற்றின் வளர்ச்சி யடைந்த சொரூபத்தின் கலா நுணுக்கங்களை ரஸித்து அனுபவிக்க, ஓரளவு முன் பரிச்சயம் தேவை என்பதையும் மறுக்க முடியாது. ஆனால், ஒவ்வொரு கலையிலும், கலைஞனைவிட, அனுபவித்து அனுபவித்துப் பண்பட்ட புலனும் செம்மைப்பட்ட இருதயமும் படைத்த ரஸிகனின் உணர்ச்சி யின்பத்தின் அளவைப் பொறுத்ததே யாகும் அதன் அழகும் மதிப்பும். நல்ல சங்கீதத்துக்கும் இதுதான் பரீட்சையாகும்; முன் பரிச்சய முடைய ரஸிகன்தான் ஜட்ஜி. சங்கீத சாஸ்திரத்தி லல்ல, சங்கீதம் கேட்டுக் கேட்டு முன் பரிச்சய மடைந்தவனே அந்த ரஸிகன்.

தமிழிலே இயல், இசை, நாடகம் என முப்பிரிவு இருந்ததாகப் பண்டிதர்கள் சொல்கிறார்கள். ஆனால், நடைமுறையில், நல்ல நாடகங்களைக் காணோம். தமிழ் அரங்க மேடைகள், பெரும்பாலும் வெறி கொண்டவர்களுடையது போன்ற அலங்கோலக் கூத்தே நிறைந்தவையாயிருக்கின்றன. நாடகக் கலையின் உண்மையான அறிகுறிகளான நாடகங்களைக் காணோம்; பொருத்தமாகவும், நித்திய வாழ்வைப் பிரதிபலித்து உயரிய கிளர்ச்சிகளைக் கிளரும் விதமாகவும் நடிக்கும் நடிகர்களையும் காணோம். நாடகக் கலையை - உண்மையான நாடகக் கலையை - தமிழ் நாட்டில் புத்துயிர் பெறச் செய்தல் மிகவும் தேவையாகும்.

நாடகம் என்பது என்ன? அது எதற்காக? கண் முன் நிகழும் வாழ்வின் அபிநயந்தான் நாடகம். பொதுவாக, மனிதர்களுக்குக் கதைகளில் ஓர் ஆர்வம் இருக்கிறது. கதைகள் வாழ்வின் புகைப் படமாக இருந்தால், வாழ்வின் முழுமையை அவை நமக்கு காட்டி விடுகின்றன. வாழ்வின் பல அரிய நுண் பொருள்களை, நாம் கதைகளினால் புரிந்து கொள்ளுகிறோம். வாழ்விலே தோன்றும் பல சிக்கல்கள், உயரிய கதைகளிலே, நமது மனக் கண் முன் கொணர்ந்து வைக்கப்படுகின்றன. அவை எப்படித் தீர்த்துவைக்கப்படுகின்றன; அல்லது தீர்க்க முடியாமல் போகின்றன? எவ்வாறு இயற்கையான நிகழ்ச்சிகளால் அவை பாதிக்கப்படுகின்றன? இவற்றை உண்மைக் கதைகள் நமக்குக் காட்டுகின்றன.

நாடகங்களோ கதைகளின் நடிப்புத்தான். கதைகள் சில சமயம் நமது மேலான ஆர்வத்தை எழுப்புகின்றன; உயர்ந்த எண்ணங்களை நமக்கு உண்டாக்குகின்றன. திக்கற்ற ஒருவன் அல்லது ஒருத்தி தோன்றி, துன்பத்தில் அகப்படும் பொழுது, நாம் கண்ணீர் விடுகிறோம். உயர்ந்த

தத்துவங்களை வெறுமையாகக் கூறினால், நம் மனத்தில் அவை பதிவதில்லை; நம் உள்ளத்தை அவை கவர்வதில்லை. ஆனால், வாழ்வை நிகழ்ச்சி நேரிலே கொண்டுவந்து விடுகிறது. மேலான தத்துவங்களின் பிரயோகம் நேரே காட்டப்படுகிறது. கதைகளின் அலுவல் இது. சேனையையும் பிற சாதனங்களையும் இழந்து தனியே நின்ற ராவணனைப் பார்த்து, தர்மாத்மாவான ராமன், இன்று 'போய் நாளை வா' என்று உரைத்தான் என்றால், நாம் உள்ளம் குழைந்து விடுகிறோம். 'இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்' என்று வெறும் சொற்கள் கொண்டுரைத்தால், நாம் இவ்வளவு உள்ளம் குழைவோமா? கருணையின் பிரயோகத்தை நேரே காணும்பொழுது, அதன் பெருமை நம் மனத்தையும் உள்ளத்தையும் ஒருங்கே பற்றியிழுத்து விடுகிறது. நாம் தருக்கம் செய்ய மாட்டோம்; 'அது உயர்ந்தது' என்ற உணர்வு எப்படியோ தோன்றி விடுகிறது.

கதையைக் கண் முன்னே நடித்துக் காட்டுதலே நாடகம். நிகழ்ச்சியை மனக்கண் முன்னே காட்டுவது கதை. கதையின் சுவையை நன்றாய் அனுபவிக்க, நமது பாவனை பெரிதும் தேவையாக இருக்கிறது. நாடகமோ, அந்தச் சிரமத்தை குறைத்து விடுகிறது. நேரே, நித்திய வாழ்விலேபோல, நிகழ்ச்சிகளை நம் சொந்தக் கண்களால் காண்கிறோம். பேச்சு, நமது செவியில் நேரே விழுகிறது. வாழ்வின் இன்ப துன்பங்கள் நேரே தோன்றுகின்றன. இந்த அளவில் நாடகங்கள், கதைகளைவிட அதிகமான பயனுள்ளவையா யிருக்கின்றன.

ஒரு மனிதன் தனது சொந்த வாழ்வில் நிகழக்கூடிய அநேக சம்பவங்களில், நேரான மாசற்ற தீர்ப்பைக் கூற இயலாது போகிறது. தான் உண்மையில் சம்பந்தப்படும், அல்லது பற்றுக்கொண் டிருக்கும் பொருள்களில், அவனது எண்ணம் வர்ணம் பூசப்பட்டதா யிருக்கும். களங்கமில்லாத தெளிவு, அவன் கருத்திலே இராமல் போகக்கூடும். கதைகள் அல்லது நாடகங்களில் தோன்

றும் நிகழ்ச்சிகளிலோ, மனிதனுக்குத் தொடர்பு கிடையாது. அவன் பாரபட்சம் கொள்வதற்கான காரணம் இல்லை. எனவே, நல்லதை - நற்குண நற்செயல்களை - நேசிக்கிறான்; உயர்ந்த உணர்ச்சிகளைப் பெறுகிறான். நிகழும் சம்பவங்களைப்பற்றி, அவன் நிதானமும் தெளிவுமுடைய அபிப்பிராயங்களைக் கொள்கிறான். அவன் மனது பண்படுகிறது. இந்தப் பலன், கதைகளாலும் நாடகங்களாலும் கிடைக்கிறது.

இவ்விதமாக, எத்தகைய நாடகங்கள் நமக்குத் தேவை? அசாத்தியமும் அசம்பாவிதமுமான நாடகங்களால் நமக்கு அவ்வளவு அதிகமான பயனில்லை. வாழ்விலே, உயர்ந்த நோக்கங்களையும் லட்சியங்களையும் நம் முன்னே வைக்க வேண்டும்; நித்திய வாழ்வில் ஏற்படும் பல தர்மசங்கடங்களை நமக்குப் பரிசயம் செய்துவைக்க வேண்டும்; மனிதனின் உயர்ந்த ஆசைகளைத் தூண்ட வேண்டும்; உன்னத ஆர்வங்களையும் இச்சைகளையும் உணர்ச்சிகளையும் உண்டாக்க வேண்டும்; மேலான தத்துவங்களைப்பற்றி விசாரிக்கத் தூண்டும் நிகழ்ச்சிகளை நம் கண்முன் தோற்றுவிக்க வேண்டும்—இத்தகைய நாடகங்களே நமக்கு மிகவும் தேவை.

இத்தகைய நாடகங்கள் தமிழிலே இயற்றப்படுகின்றனவா? இருக்கின்றனவா? ஏதோ சில நாடகங்கள் இருக்கின்றன. பெரும்பாலும் இவை பழைய புராணங்களாக இருக்கின்றன. மற்றவை நமக்குச் சிறிதும் சம்பந்தமில்லாத நிகழ்ச்சிகளை அடக்கிக்கொண்டு உலவுகின்றன. தெய்வம் வருகிறது; அல்லது ராஜாவும் மந்திரியும் சேனாதிபதியும் தோன்றுகிறார்கள். சாமான்ய மனிதனுடைய பிரச்சினைகள் - இன்றையத் தமிழனுடைய பிரச்சினைகள் - என்ன என்பதை அவைகளிலே நாம் காணமுடியாது. அதிசயங்களும் அற்புதங்களும் அவற்றில் காணப்படுகின்றன. அவை முற்றிலும் ஒதுக்கத்தக்கவை என்று இங்கே கூறவில்லை. கற்பனையின் இச்சை பூர்த்தியாகுமளவில், மனோராஜ்ய இன்பத்தை ஊட்டுமளவில், அவை

பயனுடையவைதான். ஆனல், பொதுமக்கள் சம்பந்த மான நிகழ்ச்சிகள் எங்கே?

சில புராணக் கதைகள் மிக அழகாகத்தான் இருக் கின்றன. ஆனல், நாடக மேடைகளை யெல்லாம் அவையே ஆக்கிரமணம் செய்துகொள்ளுவது நன்மை யல்ல. இயந் திர யுகம் இது. நவீன சந்தர்ப்பங்களில் நாம் வாழ்கிறேம். நமது இன்றைய வாழ்வின் புகைப் படங்களான நாடகங் கள் நமக்கு வேண்டும். நம் இன்றையப் பிரச்சினைகளை அவை நமக்குக் கண்ணுடிபோல் காட்ட வேண்டும். அப் பொழுதுதான் தமிழ் நாடகக் கலை, உயிருடன் இருப்ப தாகச் சொல்லலாம். தெய்வங்களின் ஐயங்களும், அறங்களும், சங்கடங்களும் நம்முடையவை அல்ல. அரசர்களும், பிரபுக்களும் ஆட்பட்டுக் கிடக்கும் சந்தர்ப் பங்கள் எளிய மக்களுடையவை அல்ல. எளிய ஜனங்க ளின் வாழ்வும் அனுபவமும்தான் அவர்களுக்குப் பய னளிக்கும். அவர்களுக்குப் பயனளிக்கும் நாடகங்கள் எங்கே? சாதாரண மக்களின் நித்திய வாழ்வு நிகழ்ச்சி களைக் கொண்ட, நித்தியப் பிரச்சினைகளை விளக்கும் நாடகங்களை நாடகாசிரியர்கள் இயற்றுதல் வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் நாடகக் கலை வளர்ச்சி பெறும்.

‘பாஷை மனப்பிராந்தி’

‘ரேடியோவிலே பேசு’ என்று எனக்கு ஒருசமயம் ஓர் அழைப்பு வந்தவுடனே, பரம சந்தோஷம் அடைந்தேன். ஆனால், அதிலே ‘இன்ன விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டும்’ என்று குறிக்கப்பட்டிருந்ததைக் கண்டதும், எனக்கு கொஞ்சம் திகில் உண்டாகிவிட்டது. ‘தாழ்மை மனப்பிராந்தி’ (Inferiority Complex) என்பது தான் அந்த விஷயம். இது நவீன மனோ தத்துவ சாஸ்திரம் சம்பந்தப்பட்ட ஒரு முக்கிய விஷயம். ‘தாழ்மை மனப்பிராந்தி’ என்ற வார்த்தைகளை நாமெல்லாம் தப்பாகவே உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று, என் ஆப்த நண்பரான ஒரு புரொபஸர் அடிக்கடி எனக்குக் கூறியிருக்கிறார். நாம் தாழ்ந்தவர் என்ற ஒரு கிலி நமக்கே தெரியாமல், நம் மனசுக்குள்ளே உண்டாகிவிடுகிறது; அதனால், நம்மைப்பற்றி அநாவசிய ஜம்பங்களையெல்லாம் நாம் அடித்துக்கொள்ளுகிறோம் - இதுதான் மனோ தத்துவ சாஸ்திரிகள் சொல்லும் ‘தாழ்மை மனப்பிராந்தியாம்.’ இது ஏதோ சயின்ஸ் விஷயம். ‘எனக்குத் தெரியாது’ என்று ரேடியோ நிலையத்தாருக்கு எழுதிவிடலாமா என்று எண்ணினேன். ஆனால், என்னையறியாமலே, என்னிடமே இந்தத் ‘தாழ்மை மனப்பிராந்தி’ வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது.

நமக்குத் தெரியாதாவது! அப்படியும் ஒரு விஷயம் உலகத்திலுண்டா? மனோ தத்துவ சாஸ்திர சம்பந்தமான சில கட்டுரைகளையும், நூல்களையும் சல்லடை போட்டுச் சலித்து, ஒரு தினுசாக விஷயத்தைப் புரிந்துகொண்டேன். பிரசங்கமும் செய்துமுடித்தேன். ஆனால், அதற்குப் பிறகு எனக்குப் பலவித ‘மனப்பிராந்தி’கள் உண்டாகிக் கொண்டே யிருக்கின்றன. வைத்தியப் புத்தகத்திலே ஒருவன் தலைவலிக்கு மருந்து தேடப் போக, திருகுவலி,

காமாலை முதலிய பல வியாதிகள் தனக்கிருப்பதாய் அவனுக்குக் கிலி ஏற்பட்டு விட்டதாகக் கதை சொல்வார்கள் அல்லவா? அந்த மாதிரியே, எனது ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு செயலும் ஏதேதோ விபரீத 'மனப்பிராந்தி' களின் காரியமாகவே தோன்றத் தொடங்கிவிட்டது. என்னோடு நின்றால் தேவலையே; பிறர் வார்த்தைகளும் செயலும் அப்படியே தோன்றுகின்றன! நம் குறைகளை, நாம் அறிந்தோ அறியாமலோ பிறருக்குத் தெரியாமல் ஒளிக்க முயற்சித்து, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் போதுதான், சகலவித மனப்பிராந்திகளும் நமக்கு ஏற்பட்டு விடுகின்றன.

'பாஷை மனப்பிராந்தி' ஒன்று இப்போது தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. கொஞ்ச நாளைக்கு முன் வரையில் இங்கிலீஷ்மீது மாத்திரம் இந்த 'மனப்பிராந்தி' பாய்ந்துகொண்டிருந்தது; பின்னால் ஹிந்திமீதும் கொஞ்சம் இது தாவியது. சிறிது காலத்துக்குமுன்னே நம்மவர் என்ன சொல்லிக் கொண்டிருந்தார்கள் தெரியுமோ? "ஸார், நீங்க நார்த்தெர்ன் இண்டியாவுக்குப் போங்கோ. அங்கே எல்லாருக்குமே இங்கிலீஷ் தெரியும். இருந்தாலும் இங்கிலீஷ் பேசவே மாட்டா. நம்மமாதிரி தெற்கத்தியான் அங்கே போய் இங்கிலீஷ் பேசினா, வடக்கத்தியானுக ரொம்பக் கேவலமா நினைப்பானுக. பதிலும் சொல்ல மாட்டானுக. ஹிந்தியிலாவது, பெங்காலியிலாவது பேசினால் தான் அவன்க மதிப்பானுக" என்பார்கள் நம் தேசபாஷாபிமானிகள். வாஸ்தவந்தான். வடக்கத்தியான் வங்காளி அல்லது ஹிந்திமொழிக்கற்புக் கொண்டாடினால், நாமும் தமிழ் மொழிக்கற்புக் கொண்டாடிக் கொண்டிருக்கலாமே. அது நிரம்ப அழகாய்த்தான் இருக்கும். பைபிளில் கண்ட 'பாபேல் கோபுர'க் கதை தான்!

நமது நித்திய வாழ்க்கை சம்பந்தப்பட்ட சாதாரண விஷயங்களில் - தமிழர் ஒருவர்க்கொருவர் கருத்துக்களை வெளியிடும் சந்தர்ப்பங்களில் - எல்லாம் அந்நிய மொழியை உபயோகிப்பது தவறுதான். தமிழிடம் தமிழன் பூரணக்

காதலும் கொண்டு, அதன் வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டியதும் அத்தியாவசியமேயாகும். ஆனால், அவன் அதற்காக அர்த்தமற்ற மொழிக்கற்புக் கொண்டாடி வெளியுலக சம்பந்தமே வேண்டாமென அறுத்துவிட்டு, கிணற்றுத் தவளையாகிவிட முயல்வானானால், அது விபரீதமேயாகும். இன்று தமிழ்மொழி யன்பர்களின் அன்பு, சில விபரீத எண்ணங்களுக்குள் புகுந்துகொண்டு, பேயாட்டம் ஆடத் தொடங்கியிருக்கிறது.

இந்நாள் உண்மையான தமிழபிமானி என்ன செய்ய வேண்டும்? தமிழ் இன்றடைந்திருக்கும் நிலையைக் கண்டு அவன் கண்ணீர் விடவேண்டும். தமிழ் நேற்றுவரையில் - சில தலைமுறைகளுக்கு முன்வரையில் - தமிழனது வாழ்வோடு வாழ்வாய் வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. இலக்கியம், வைத்தியம், வானசாஸ்திரம், கணிதம், நீதிசாஸ்திரம் முதலிய பல துறைகளிலும் அவை அன்றிருந்த நிலை வரையில் தமிழும் வளர்ச்சி பெற்றிருந்தது. இன்று நிமிஷத்துக்கு நிமிஷம் முன்னேறி விருத்தியடைந்து வரும் கலை, விஞ்ஞான ஞானமெல்லாம் ஆங்கிலம்போன்ற பல அந்நிய மொழிகளிலே இடம் பெற்று விட்டன. தமிழன் அந்த மொழிகளை இழித்துப் பயனில்லை; அவற்றின் வளர்ச்சியைக் குறைத்துப் பேசி, உலகத்தை அஸ்தமிக்கச் செய்யத் தன் கண்ணைமூடிக்கொண்ட பூனையாய் நடந்துகொள்வதிலும் காரியமில்லை. அவற்றுக்குரிய மதிப்பை அவற்றுக்குச் செலுத்தித்தான் தீரவேண்டும். அவற்றையும் பூரணமாய்ப் பயன் படுத்திக் கொண்டு, தமிழை வளர்க்க, கிரியாம்சையில் முயலவேண்டும். ஞானம் மனித குலத்தின் பொதுச் சொத்து; யாருக்கும் தனி உரிமையல்ல. இன்று தமிழன் தேனீயைப்போல், ஞானத்தை உலகின் பல திசைகளிலிருந்தும் சேகரம் செய்யவேண்டும். தமிழன்பரென்போர் அப்படிச் செய்கிறார்களா?

ஒரு தமிழன்பர் "தூய தமிழ்! தூய தமிழ்! திசைச் சொற்களைக் கொணராதீர்கள்" என்று கதறுகிறார். இன்னொருவர் "இங்கிலீஷைத் தொடவும் தொடாதே" என்று

கத்துகிறார். மற்றொருவர் "ஐயையோ! ஒழி ஹிந்தியை" என்று கூச்சலிடுகிறார். வேறொருவர் "நமது தமிழில் இல்லாதது ஒன்றுமே கிடையாது. சகல விஷயமும் திருக்குறளுக்குள்ளே யிருக்கிறது; தொல்காப்பியத்திலே இருக்கிறது" என்று தோள் தட்டுகிறார். இவர்கள் எல்லாம் தமிழுக்குச் சேவை புரிவதாகவே நினைத்துக் கொண்டிருப்பதுதான், மேலும் பெரிய விநோதம். இவர்களைப் பற்றி நாம் என்ன சொல்வது? ஆஸ்திகத்தைக் காப்பாற்றுவதாக நினைத்துக்கொண்டு, குருக்கள்மார் ஏசுவைச் சிலுவையிலே அறைந்தார்கள். அவர் வேதனை யுறும்போது, அவருக்கு அவமானமும் புரிந்தார்கள். அப்போது ஏசு "பிதாவே! இவர்களை மன்னியுங்கள். தாங்கள் செய்வது இன்னதென்று தெரியாமலே இவர்கள் இப்படிச் செய்துகொண் டிருக்கிறார்கள்" என்று மனங் குழைந்து பிரார்த்தித்தார். தமிழ்த்தாயும் இன்று இவர்களை நினைந்து இப்படித்தான் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறாள்.

ஐயா, விமர்சகரே!

நீர் புத்தக விமர்சகரோ, சினிமா விமர்சகரோ யாரா யிருந்தாலும் சரிதான்; உம்மிடம் சில வார்த்தைகள் சொல்லவேண்டும் என்று வெகு நாளாய் எனக்கு ஆசை.

நீர் மிக மிக விஷயந் தெரிந்தவராமே. பாரதி யாரைப்பற்றி விமர்சனம் எழுதினுல், பாரதியாருக்கு மேலே பெரியவாளாகி விடுகிறீராம். சாந்தாராமைப் பற்றி விமர்சனம் எழுதினுல், அவருக்குமேலே ஆகிவிடு கிறீராம். கடவுளைப்பற்றிக்கூட ஒருநாள் நீர் விமர்சனம் எழுதிவிடக்கூடும் என்று நினைத்து, அப்படி எழுதிவிட் டால், அடுத்த நாள் முதல் உமக்குக் கோவில் கட்டுவதா, உள்ள கோவிலை இடிப்பதா என்று தெரியாமல் அடுத்த வீட்டுப் பக்தர் ஒருவர் பெரிதும் தவிக்கிருர். 'சுண்டைக் காய், தேங்காயைப்பற்றி என்னதான் விமர்சனம் செய் தாலும், சுண்டைக்காய் தேங்காய் ஆகவே ஆகாது. அதேமாதிரிதான் இதுவும்' என்று பலமாய் அவரிடம் தெரிவித்தும், அவரது கவலை தீரவில்லை. நீர்தான் அதைக் கொஞ்சம் தீர்க்கவேண்டும்.

நீர் வெளு வெளு என்று வெளுத்து விடுகிறீராம். உம்முடைய வீரபராக்ரமத்தைப்பற்றி வெகு பேர் பேசு வதை நான் கேள்விப்பட் டிருக்கிறேன். நீர் வெளுப் பதைப்பற்றி எனக்கு ஆட்சேபணையே யில்லை. ஆனுல், 'கெட்டிச் சாயம்'கூட உம்மிடம் வெளுத்து விடுகிற தாமே; அதைப்பற்றி நீர் பெருமைகூட அடித்துக் கொள்கிறீராமே. அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை.

விமர்சனம் என்பது மிகுந்த பொறுப்புடன் பய பக்தியாக, அனுதாபத்தோடு செய்யவேண்டிய காரியம் என்பதை நீர் அறியவேண்டும். நியமனம் செய்யாத நீதிபதியாய் நீர் அமர்ந்துவிடுகிறீர். தர்ம நியாயத்துக்குப்

பயந்தும், சொந்தக் குறைகளை உணர்ந்தும், சிருஷ்டித்தவனின் உள்ள கிடக்கையைப் புரிந்துகொள்ளும் வேட்கையுடனும், உமது பேனவை நீர் கையில் பிடிக்க வேண்டும். 'குயவ'னுக்குப் பலநாள் வேலை, 'தடிய'னுக்கு ஒரு நாள் வேலை என்பதாக, நீர் நடந்துகொள்ளலாகாது. உன்னதக் கவிஞனை கீட்ஸைக் கொன்றது நீர்தான் என்று உலகம் இன்றுவரை உம்மை நொந்துகொண்டிருக்கிறதே, அதை நீர் அறியீரா? 'இத்தனை கவிஞனை, இத்தனை கலைஞனை, இத்தனை ஓவியனை நான் கொன்றேன்' என்பது உமது கீர்த்தியல்ல. 'இத்தனை யித்தனை பேரின் கவிதையையும் கலையையும் நான் கண்டுபிடித்து, அவற்றின் நுட்பத்தைச் சரியான முறையில் ஜனங்கள் ரஸிக்க வழி காட்டினேன்' என்பதுதான் உமக்குப் பெருமை. பெரும்பாலும், சிருஷ்டிகனின் 'பக்த'னுய்த்தான் நீர் நடந்து கொள்ளவேண்டும்.

ஒரே ஒரு முக்கிய உண்மையை நீர் அழுத்தமாய் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஏதோ ஆவி உலகத்தி லிருந்துகொண்டு நீர் விமர்சனம் செய்வதாய் நினைத்துக் கொள்ளலாகாது. இந்தப் பௌதிக உலகத்தின் குறைகளுக்கும், வரம்புகளுக்கும் நீரும் ஆட்பட்டவரே என்பதை நினைவுகூர வேண்டும். ஒரு மனிதனுக்கு உணவா யிருப்பது, மற்றொரு மனிதனுக்கு விஷமா யிருக்கிறது. மனிதனின் ருசி அப்படிப்பட்டது. கலைகளும் இலக்கியமும் ருசியைப் பொறுத்த விஷயம். உமக்குப் பிடிக்காததை யெல்லாம் கெட்டது என்று உமது சொந்த ஹோதாவில் நீர் சொல்லிக்கொண் டிருப்பதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபம் கிடையாது. ஆனல், விமர்சகன் என்ற நீதிபதி ஸ்தானத்தை வகிக்கும்போது, அந்தப் பேச்சை விட்டுவிட்டு, பொதுநோக்குடன் பார்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இன்னென்றும் இதில் கவனிக்கத்தக்கது. ஒரே மனிதனுக்கேகூட, ஒரு வேளை உணவு, மறுவேளை விஷமா யிருக்கிறது. உமக்குக் காய்ச்சலடிக்கும்போது, வெல்லம் கசப்பாயிருக்கிறது.

உமது வாய்க் கசப்பு வெல்லத்தின் கசப்பாகிவிடுகிறது. ஒரே கலைப் பொருளே, உம்முடைய மனோ விகாரங்களுக் கேற்றவாறும், சுற்று நிலைமைகளுக்கும் சந்தர்ப்பங்களுக் கும் ஏற்றவாறும் ருசிக்கிறது; அல்லது ருசியிழந்து விடு கிறது. உமக்கே யுள்ள இந்த வரம்பையும் நீர் உணர்ந்து கொள்ள வேண்டும். உம் சொந்த உணர்ச்சிகளையோ, ருசி களையோ மட்டில் உறை கல்லாகக் கொண்டு, கலைகளைச் சோதிக்கலாகாது. ஜன சமூகத்தின் பொது உணர்ச்சி ருசிகளின் பிரதிநிதியாகவும், அவற்றை உயர்த்திப் புனிதம் செய்யும் காரியத்தில் கலைஞனின் துணைவனாகவுமே நீர் நடந்துகொள்ள வேண்டும்.

கலை என்றால், ஏதோ 'தீண்டத் தகா'ப் பொருளாய் இருக்க வேண்டும் என்று நீர் மதிக்கிறீரே! உமக்கும் பழைய பண்டிதருக்கும் என்ன வித்தியாசம் என்றுதான் எனக்கு விளங்கவில்லை. அவர் தமிழை என்னவோ 'தீண்டா'ப் பொருளாக்கப் பார்க்கிறார்; நீர் கலையைத் தீண்டாப் பொருளாக்கப் பார்க்கிறீர். இரண்டு பிரகஸ் பதிகளும் ஒரே ரகந்தான். நீர் உம் எழுத்துக்களை ஊறு காய் போட்டு வைத்துக் கொள்ளலாம். பிறரும் அப்படிச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்காதேயும்.

ஒரு கலைப்பொருளை விமர்சனம் செய்கையில், கலை ஞனின் கஷ்ட நஷ்டங்களையும், கலையின் நுட்பங்களையும் அறிந்து அனுதாபம் காட்டவேண்டுவதும் மெத்த அவசிய மாகும். 'கலா சாதனங்களின் குறைகளை வெல்லுவதே கலை' என்று வர்ணிக்கப்படுவதுண்டு என்பது உமக்குத் தெரியுமே. காகிதத்தின் மீது எழுதும் சித்திரத்துக்கு, நீளம், அகலம் என்ற இரண்டே பரிமாணங்கள்தான் உண்டு. இது சாதனத்துக்குள்ள ஒரு குறை. இந்தக் குறையை வென்று, கனம் என்ற மூன்றாவது பரிமாணம் ஒன்றையும் கலைஞன் காட்டிவிடுகிறான். இம்மாதிரி, சாதனங்களின் குறைகளை வெல்லும் வெற்றியை எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாய் ஒரு கலைஞன் காண்கிறானோ, அத்தனைக் கத்தனை அவனது கலையும்

உயர்கிறது. அதன் அளவைக் கணக்கிடுவதுதான் உமது அலுவல்.

ஏதாவது சுடச்சுட எழுதினால்தானே வாசகருக்குப் பிடிக்கும் என்று நினைத்து, அவிழ்த்துவிட்ட குதிரைமாதிரி உமது மனம் ஓட்டம் எடுக்க விடலாகாது. வாசகரைக் குஷிப்படுத்துவதைவிட, கலைஞனுக்கு நீதி வழங்குவதே உமது மிக முக்கியக் கடமை என்பதை நீர் மறக்கலாகாது.

மொத்தத்தில், விமர்சனம் என்றால் தடியடி வேலை அல்ல என்பதை நீர் நன்றாய் ஞாபகத்தில் வைக்கவேண்டும். விமர்சனத்துக்கு அனுதாபம் வேண்டும், தராசு முனை போல் சீர்தூக்கி, குணங்குறைகளைக் கூறவேண்டும். குணங்களைக் கூறுவது அவசியம்; குறைகளை நயமான முறையில் குறிப்பிடவும் வேண்டும். கலைகள் வளர, நீர் உபகாரியாய் இருக்கவேண்டுமானால், இதுவே உமது கடமையாகும்.

இலக்கிய நடை

அன்றொருநாள் நான் இலக்கிய நடையைப் பற்றி ஒரு கட்டுரை எழுத எண்ணி உட்கார்ந்தேன். ஆனால், என் கால்கள் நடக்கும் நடையைக் குறித்து எழுதியதோடு விஷயத்தை ஒருவாறு முடித்து விட்டேன். இந்த விபத்து எப்படி நேர்ந்ததென்றால், அதிலேதான் இலக்கிய நடையின் சூட்சுமம் இருக்கிறது. நடை என்பது, உப்பு சப்பற்ற இலக்கணச் சரக்கு. ஏதோ கொஞ்சம் உப்புறைப்புப் போட்டு, சற்று ருசி உண்டாக்கிப் பார்க்கலாம். ஆனால், அதோடு எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. சிங்காரிகள், ஒய்யாரிகள், செக்கர்வானம், நீலப் பெருங்கடல், பூ, புஷ்பம் எல்லாவற்றையும் சேர்த்து, வர்ணனையும் விசித்திரமுமாய் ஓர் அமக்கள நாடக சிருஷ்டியையே ஆக்கிவிட, என்னை அறியாமலே ஆசு போட்டு விட்டேன் போலிருக்கிறது. அதனால்தான், எடுத்த விஷயம் போய், எதிர்பாராத குறுக்குப் பாதையில் சரிந்து விட்டேன்.

இலக்கியத்திலே நடை என்பது தராதரத்தை அனுசரித்த ஒரு சம்பவம். அந்தத் தராதரத்தை மீறி விடுமானால், நடை விரஸமாவது மாத்திர மல்ல; சொல்ல வந்த பொருளுங்கூடக் கெட்டு விடும். ஏனெனில், நடையும் பொருளும் உயிரும் உடம்பும் போன்றனவாகும். நடை என்பது சொற்களை அம்மானையாடும் செப்படு வித்தையல்ல; ஜன்னி பிடித்த உளற லல்ல; பானையிலே புளியை அடைப்பது போல் வசனத்திலே வார்த்தைகளைத் திணிக்கும் வித்தையு மல்ல. நடை என்பது, கருத்தோடு கூடப் பிறக்கும் பிறப்பாகும்; இதய உணர்ச்சியிலே ஊறும் அருவி நீரோட்டமாகும்.

'நடைதான் மனிதன்' என்றும், 'நடை என்பது கருத்தின் உடை' என்றும் ஆங்கிலத்திலே சொல்வதுண்டு.

ஒரு மனிதனுடைய உள்ளமும் மனமும் பண்பட்ட விதத்துக்கும் அளவுக்கும் ஏற்ப, அவனுடைய சொற்களிலே, சொற்களின் இசைப்பிலே, அவற்றைச் சொல்லும் தொனியிலே ஒரு மெருகு, ஒரு பாவனை தோன்றும். அதுதான் நடை. ஓர் ஆசிரியனின் குணாதிசயம் முழுதுமே அவனுடைய நடையிலே பிரதிபலித்து விடுகிறது. கருத்துக்களின் வாகனம் வசனம். அந்த வசனத்தையும், அதோடு கூட அது தாங்கும் கருத்தையுமே சோபிக்கச் செய்யும் அலங்கார ஆபரணம் நடை.

எடுத்துக்கொண்ட பொருளுக்கும், அதைச் சொல்லும் உணர்ச்சிக்கும் ஏற்றவாறு, தானாகவே நிகழும் ஒரு நிகழ்ச்சி நடை. ஜீவனுள்ள நடையில், பொருளுக்குப் பொருளும் உணர்ச்சிக்கு உணர்ச்சியும் மாறுபடும் பல வகைகளுண்டு. அந்தப் பலவித நடைகளையும் பொருத்தமாகவும் லாகவமாகவும் கையாளக் கூடியவனே சிறந்த ஆசிரியனாக விளங்குகிறான். எல்லா நடைகளையும் எல்லா ஆசிரியர்களும் எழுதிவிட முடியுமோ என்று ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஒரே வீணையிலே பலவித ராகங்களையும் மீட்டிவிட முடியுமோ என்று நாம் அதிசயிப்பதுண்டோ? ஆனால், ஒவ்வொரு வித்வானும் எந்த ராகத்தை வாசிப்பதிலும் ஒரு மோஸ்தர், தனித் தன்மை, பாணி உண்டு. அந்த மாதிரி தனித்தன்மை, ஓர் ஆசிரியனின் பல நடைகளிலும் சூத்திரச் சரடுபோல் ஊடுருவிச் சென்று கொண்டிருக்கும். இதிலேதான் ஆசிரியனுக்கும் ஆசிரியனுக்கும் காணக்கூடிய நடை வித்தியாசம் இருக்கும்.

எல்லாம் எளிய நடையிலேயே இருக்கவேண்டும் என்று சிலர் கூச்சல் போடுகிறார்கள். அலங்கார நடை இல்லாவிட்டால், இலக்கியமேது என்று இடித்துரைப்போரும் உண்டு. எளிய நடையிலே சகல பொருள்களையும் எழுதி விடலாம் என்று எண்ணுவது மூடத்தனம் என்றால், எதை யெடுத்தாலும் தடபுடல் நடையில் எழுதுவதும் அதே மாதிரி அபத்தம்தான் ஆகும். சமீபத்திலே ஒரு நண்

பர் எழுதிய ஜீவிய சரித்திர மொன்றைப் பார்த்தபோது, எனக்கு ஒருபுறம் நகைப்பு வந்தது; மறுபுறம் எரிச்சலும் வந்தது. புஸ்தகம் பூராவும் ஒரே 'கடபுடாயதே' தானு? அவருடைய சரித்திர நாயகன் பிறந்தது முதல் சாகும் வரையில் ஒரே நாடகம் தானு? "அதோ ஒரு குருவி 'சிவ்' என்று பாய்ந்து, கதிரவனின் கிரணங்களைக் கலக்கிச் செல்கிறது. வானத்திலே தாவள்யமான நீல ஆகாயம் உலக விதானம் போல் வளைந்து கவிந்திருக்கிறது. வீட்டிலே அடுப்பில் பூனை படுத் துறங்குகிறது. பட்டினி! உயிருடன் போர் தொடுக்கும் பட்டினி! ஆண் பெண் அடங்கலும் பட்டினி! அலட்சியமாய் அவன் தோளிலே தனது புஸ்தகப் பையை மாட்டிக் கொண்டு, புறப்பட்டு விட்டான். எங்கே? கலாசாலைக்கு. போய் என்ன செய்தான்? சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பி வந்தான்—" ஆஹா! என்ன அழகான நடை! இந்த மாதிரி நடையில் ஒரு புஸ்தகம் பூராவு மிருந்தால், அதை எழுதிய மகானு பாவனை மாத்திரம் அல்ல, சகிக்கக் கூடிய மகானுபாவனையும் ஏதாவது கோயிலில்தான் கொண்டுபோய்ச் சேர்த்து விடவேண்டும்.

ஓர் ஆசிரியன் மற்றோர் ஆசிரியனைச் சந்தித்தான். முதல் ஆசிரியன், "நண்பரே! எனது போன நாவல் நாற்பத்தேழாயிரம் பிரதிகள் செலவழிந்தது. இந்த நாவலோ இருபத்தேழாயிரம்தான் செலவாகி யிருக்கிறது" என்று கூறி, தன்னை யறியாமலே தனது திறமை குன்றிவிட்டதோ எனத் துக்கித்தான். இரண்டாவது ஆசிரியன் "அப்படியா! ரொம்ப சந்தோஷம். உங்களைப் பாராட்டுகிறேன்" என்று அன்போடு கூறினன். முதல் ஆசிரியன் திடுக்கிட்டு விட்டான். "என்ன இது! உமக்கு என்னிடம் வயிற்றெரிச்சலா?" என்ருன். "இல்லை, ஐயா. உமது இரண்டாவது நாவலின் விற்பனைக் குறைவு, நீர் நிரம்ப அபிவிருத்தி யடைந்து விட்டீர் என்பதைக் காட்டுகிறதே; அதற்கு நான் சந்தோஷப் படத்தானே வேண்டும்?" என்ருனம். இப்படி ஒரு தமாஷ் கதை

உண்டு. எளிய, பாட்டி நடைப் பக்தருக்கு இதைத்தான் நாம் உதாரணம் சொல்ல முடியும். இலக்கியம் என்பது ஜில்லா போர்டுத் தேர்தலல்ல.

மீண்டும் மீண்டும் ஒரு விஷயத்தைத்தான் நாம் வற்புறுத்த வேண்டும். இலக்கியத்திலே எளிய நடை உண்டு; கம்பீர நடையுண்டு; வர்ணனை நடைக்கும் இடமுண்டு; சம்பாஷணை போன்ற நடையும் கலப்ப துண்டு; இசை நடையும், ஹாஸ்ய நடையும், விறுவிறுப்பு நடையும் இன்னும் பலவிதமான நடைகளு முண்டு. ஆனல், ஆசிரியன் "நான் இன்ன நடையில் தான் எழுத வேண்டும்; எழுதப் போகிறேன்' என்ற சங்கல்பத்துடன் உட்காரத் தேவையில்லை; உட்காரவும் கூடாது. சுருதி கூட்டிய யாழைப் போல, அவன் இதயம் நெகிழ்ந்து உட்கார வேண்டும். அந்த உள்ளத்திலே ஜனிக்கும் கருத்துக்களை, அறிவின் தணிக்கையோடு, இயல்பான சொற்களிலே சொல்ல முயலவேண்டும். ஏற்ற நடை தானகவே உருவாகும் விந்தையை அந்த ஆசிரியன் காணலாம்.

சொல் வலிமை

மலையிலே பெய்யும் மழை, காட்டு வழியாய் ஓடிக் கடலில் கலக்கிறது. இதைக் கண்டுபிடித்துச் சொல்ல, அபார புத்தி வேண்டியதில்லை. ஆனால், நாட்டுக்கு உபயோகமான பாசன ஆதாரமாய்ச் செய்வதற்குத்தான் ஓர் எஞ்சினீர் வேண்டியிருக்கிறது. பெரிய காரியங்களையோ சிறிய காரியங்களையோபற்றி மலிவான சோதிடங் கூறிப் புகழ் சம்பாதிக்க முயலுவோர் பலர் இருக்கிறார்கள். ஆதாரங்கள் மாறினால், சோதிடம் தப்பிப் போவது நிச்சயம். ஆதாரங்களையும் கலக்கி, தன்னிஷ்டப்படி அவற்றைத் திருப்பி, கோரிய பலனைக் காண்பவன் பெரிய மனிதன். அவன் தோல்வியுற்றாலும் மேதாவி தான்.

ஞானிக்கு ஒரு தனிவழி. பைத்தியக்காரனுக்கும் அப்படித்தான். என் ஞானியைத் தொழுது, பைத்தியக்காரனைக் கண்டு நகைக்கிறோம்? ஞானி உலகத்தை மாற்றி விடுகிறான். பித்தனோ உலகத்தினின்று மாறுபடுவதோடு நின்று விடுகிறான். இருவருக்கும் மனோ தர்மம் உண்டு. ஒன்று தெளிவிலே ஜனிப்பது; மற்றது கோரக் குழப்பத்திலே பிறப்பது. நட்டதெல்லாம் பயிராகிவிடுமா? பிரபஞ்ச தர்சனம் வேண்டும்; பிரபஞ்சத்துக்குத் தன்னைக் காட்டிக் கொள்ளவும் வேண்டும். இரண்டையும் திறம்படச் செய்பவன் ஞானி, அறிஞன்.

வார்த்தை உங்களுக்கும் சொந்தம்; எனக்கும் சொந்தம்; காந்தி,கிருஸ்து, கண்ணனுக்கும் சொந்தந்தான். ஆனால், அவர்களின் வாயினின்றும் புறப்படும் வார்த்தைகள் மந்திரச் சொற்களாகி விடுகின்றன; பல மனிதர்களின் உள்ளங்களைக் கலக்கும் மகா சக்தியுடன் விளங்குகின்றன. நம் வார்த்தைகள் பலனளிப்பதற்கோ, நாம் அவர்க

ளுடைய நாமத்தைத் துணைக்கொள்ள வேண்டி யிருக்கிறது. இந்த வேற்றுமைக்கு யார் அல்லது எது பொறுப்பு?

சிறிய வியாபாரம். ஸ்தாபனத்திலுள்ளவர் யாவரும் கூடி யோசிக்கிறார்கள். புதிதாய் வந்து சேர்ந்த ஒரு குமாஸ்தா 'என் வார்த்தையைக் கேட்போரில்லையே' என்று ஏங்குகிறான். அவன் சொல்லும் யோசனை அருமையானதுதான். என்றாலும், ஏன் அது எடுபடவில்லை? தகுதியை நிரூபணம் செய்வது வார்த்தையல்ல. அனுபவமும் பதவியும் இச்சா மாத்திரத்தில் கிடைப்பவை அல்ல. பட்டை தீர்த்துப் பொன்னிலே பதித்த வைரம் ஜோதி வீசுகிறது. அது மண்ணோடு மண்ணாய்ப் புதைந்து கிடந்த பொழுது, அதன் அழகை அறிந்தவர் யார், அனுபவித்தவர் யார்?

சிறிய காரியத்துக்கு ஒத்ததுதான் பெரிய காரியத்துக்கும். மகாத்மா காந்தி, பட்டை தீர்ந்த வைரக்கல்; சோதனைகளில் பரீட்சை கொடுத்துத் தேறிய உத்தமன். தேச வாழ்க்கையிலே அவர் உன்னத ஸ்தானம் பெற்றுவிட்டார். 'அவர் சொல்லுவதெல்லாம் சாஸ்திரம்' என்று பலர் கொண்டாடுகிறார்கள். அவருடைய வார்த்தை, கஷ்டங்களிலே ஈடு கொடுத்து வெளிவந்த சொல். சத்திய மென்பது அதுதான்.

உறங்கிக் கிடந்த, தேங்கிக் கிடந்த, உயிரற்றுக் கிடந்த தேசத்திலே ஒரு பெரும் எழுச்சியை அந்தப் பெரிய மனிதர் உண்டு பண்ணி விட்டார். எழுச்சிக்குப் பின்னே அயர்ச்சி இயல்பு. சிலர் துள்ளிக் கிளம்புகிறார்கள். 'என் வார்த்தையைக் கேளுங்கள்' என்று கூக்குரலிடுகிறார்கள். ஆனால், கேட்போர் பலரைக் காணோம். 'இந்த காந்தியை என்ன செய்வது? ஜனங்கள் அசடுகள்' என்றெல்லாம், ரகசியமாகவோ, நகாசு வேலை செய்து பகிரங்கமாகவோ அவர்கள் உறுமுகிறார்கள். என்ன நடக்கிறது. ஒன்றும் பலிக்காது போகிறது. இது அனுபவம்.

வாழ்வுக்குப் பயன்படாத வேதாந்தம் வேதாந்தமல்ல. என்றாலும், வாழ்வு வேறே, வேதாந்தம் வேறே என்று பாகப் பிரிவினை செய்து வாழ்க்கை நடத்துவது நமக்குச் சர்வ சகஜமாகி விட்டது. சொல்லுக்கு உறுதி தருவது சத்தியம். சத்திய வசனம் புறப்படுவது பெரியோர் நாவினின்று; சத்திய தர்சனத்தில் வாழ்க்கையையே ஈடு படுத்தும் பெரியோர் வாக்கிலிருந்து. எல்லாப் பொருளும் எல்லோருக்கும் அடியிலிருந்து தென்பட வேண்டும் என்று இருக்குமானால், ஒவ்வொருவரும் தமது வாழ்க்கை பூராவையும் மரத்துக்கு மரம் தொற்றுவதிலே தான் கழித்துச் செல்லவேண்டி யிருக்கும். வாழ்வு என்பது ஒரு தொடர்ச்சியின் விளைவு. ஜனசமூக வாழ்வின் தொடர்ச்சியிலே, பற்பல தத்துவதர்சிகளின் கை முத்திரை பதிந்து கிடக்கிறது. எப்படி அவர்களால் அதைப் பதிக்க முடிந்தது? வாழ்ந்த வாழ்விலே, அவர்களுக்கு ஒரு சொரூபம், குணப் பெருமை, 'ஆன்ம சக்தி' ஏற்பட்டது. சத்தியத்தைக் காண அவர்களுக்குள்ள உரிமை நிரூபணமாயிற்று. ஜனங்கள் நம்பினார்கள். கால சக்கரம் பலங் கொடுத்து விட்டது.

உயர்ந்த தத்துவம் கருத்திலே உதிக்கிறது. அதைச் சொல் வெளிப்படுத்துகிறது. அந்தச் சொல் பரவுவதற்குப் பின்வலு என்ன என்பதை நாம் இப்பொழுது உணர்ந்து கொள்ளவேண்டும். 'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்றால், நகைத்துப் பரிகசிக்க வேண்டியதில்லை. மனிதன் செய்தது பழைய சாஸ்திரம்; புதிய சாஸ்திரங்களையும் அவன் சிருஷ்டிக்க முடியும். இதனை எதாபூர்விகள் உணரவில்லை யென்றால், அதைக் கண்டு சிரிப்பவரும்தான் உணரவில்லை. உன்னதமான உண்மைகள், மனம் போனபடி அலைந்து திரியும்பொழுது, இடறி விழுமாறு எங்கும் கொட்டிக் கிடக்கும் சந்திக் கடைப் பண்டமல்ல. 'தட்டினவனுக்குத் திறக்கும்' என்றார் கிருஸ்து. உபாசகனுக்கே உண்மை புலப்படும். எந்த எந்தத் துறையில் வாழ்க்கையை எவன் எவன் அடி

யோடு அர்ப்பணம் செய்து விடுகிறனே, அவன் அவ னுக்கு அந்த அந்தப் பொருள் சம்பந்தப்பட்ட மட்டில், நாம் தலை பணிந்தே யாகவேண்டும். நமது வணக்கம் அவன் சொல்லுக்கு என்பதைவிட, அதற்குப் பின்னுள்ள சொரூபத்துக்கு - அனுபவத் திரளுக்கு - என்பதே மிகவும் பொருந்தும்.

புஸ்தகப் பூந்தோட்டம்

"நான் கொஞ்ச நாள் எங்கள் ஊருக்குப் போய் ஓய்வெடுத்துக்கொள்ளப் போகிறேன். அந்தக் காலத்தை வீண் அடிக்காமல் ஏதாவது புஸ்தகம் படிக்க விரும்புகிறேன். நீங்கள் சொல்லுங்கள், என்ன புஸ்தகம் படிக்கலாம்?" இப்படி யோசனை கேட்டார் ஒரு நண்பர். இவர் பத்திரிகைத் தொழிலில் பயிற்சிபெற விரும்புபவர். இன்னொருவர் "எனக்கு ராஜீய விஷயங்கள் தெரியவேண்டும். அதற்கு ஏதாவது புஸ்தகமிருந்தால் சொல்லுங்களேன்" என்று கேட்டார். வேறொரு மாணவன் தனக்கு ஆங்கில ஞானம் விருத்தியடைய என்ன புஸ்தகங்கள் தேவை என்று என்னை விசாரித்தான். இவர்களுக்கெல்லாம் எண்ணம் நான் ஏதோ பிரமாதமான புஸ்தகங்கள் படித்திருக்க வேண்டும் என்று. இவர்கள் என்ன புஸ்தகங்கள் படிப்பது என்று நான் எப்படிச் சொல்ல முடியும்?

"இல்லை, ஸார். நீங்கள் சொல்லத்தான் வேண்டும்; சொல்லுங்கள்" என்றார் பத்திரிகைத் தொழில் வித்தியார்த்தி.

"எனக்கு அந்தத் தகுதியில்லை" என்று மீண்டும் சொன்னேன்.

"நீங்கள் என்னென்ன புஸ்தகங்கள் படித்திருக்கிறீர்கள்? அதையாவது சொல்லுங்கள்" என்று அவர் விடாமல் கேட்டார்.

'ஹரிஹர ஐயர் பால சிட்சை, நமசிவாய முதலியாரின் இரண்டாம் பாடப்புத்தகம். கிங் ரீடர் பர்ஸ்டு புக்' என்று ஆதியிலிருந்து அடுக்க ஆரம்பித்து விடலாமா என்று நினைத்தேன்; அவ்வளவு சலிப்பு வந்தது. ஆனால், 'நம்மிடம் ஏதோ கொஞ்சம் மதிப்பு வைத்துத்தானே கேட்கிறார். அதைக் கெடுத்துக் கொள்வானேன்?' என்று

நினைத்து, நான் படித்த புஸ்தகங்களையும், அவற்றை நான் எப்படிப் படித்தேன் என்பதையும், புஸ்தகங்களை நான் பொறுக்கும் விதம் என்ன என்பதையும் பற்றிச் சில வார்த்தைகள் சொன்னேன். அது ஒரு குட்டிப் பிரசங்கமாய் முடிந்தது. ஒன்று மாத்திரம் முதலிலேயே அவரிடம் எச்சரித்து விட்டேன். புஸ்தகங்கள் பொறுக்குவது, படிக்கும் முறை இந்த இரண்டிலும் நான் செய்வதே சரி என்று அவர் எண்ணவேண்டிய தில்லை. மதம் எப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்த விஷயமோ, அதே மாதிரிதான் புஸ்தகப் படிப்பும். சமயம் ஆத்ம வளர்ச்சிக்கு என்றால், படிப்பு அறிவு வளர்ச்சிக்கும் இதயச் செம்மைக்குமே யாகும். ஆகையால், இது அவரவரே நிர்ணயித்துக் கொள்ளவேண்டிய விஷயம் என்று அவருக்கு எச்சரித்து விட்டேன்.

என் சம்பந்தப்பட்டமட்டில், சிறு வயது முதல், யார் நிர்ப்பந்தமோ சிபார்சோ இல்லாமல், நானாக ஆர்வமுற்றே பலவிதமான புஸ்தகங்களையும் படித்திருக்கிறேன். அல்லி அரசாணி மாலை - காவடிச்சிந்து முதல், நள வெண்பா - திருவாய்மொழி வரையில் படித்திருக்கிறேன். கப்பல்கள் கட்டுவது, படையமைப்பு, துருப்புகளின் பிரயாணமுறை, நவீனப் போர் முனையமைப்புப் போன்ற விவரங்கள் அடங்கிய யுத்த சரித்திரமா? அன்றி, சுகாதாரத்தைப்பற்றிப் பிரபல டாக்டர்கள் கூறும் யோசனைகள் அடங்கிய நூலா? அல்லது இந்துமதக் கதைகளைக் கிருஸ்துவப் பார்வையில் கூறும் புத்தகமா? கவியா? நாவலா? நாடகமா? கணிதமா? சயின்ஸா? சரித்திரமா? பூகோளமா? எல்லாவற்றையுமே ஆசையோடு, ஒரு குதூகலத்துடன், சின்னஞ் சிறு வயது முதலே படித்தவன் நான். பாஷையின் லட்சண சாஸ்திரமான இலக்கணத்தைக் கூடப் பிரியத்துடனும் வியப்புடனுமே படித்தேன் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன். நமது அறிவுக்கு உணவு கிடைக்கும் போது, ஒரு குதூகலம், ஆனந்தம் உண்டாகிறது. அதை நான் நிறைய நிறைய அனுபவித்திருக்கிறேன். ‘கற்றது

கைம்மண் ணளவு ; கல்லாதது உலகளவு ' என்று ஔவை கூறினள். 'கைம்மண்'ணைப் பார்த்து நாம் துக்கப்பட வேண்டிய தில்லை ; 'உல'கைப் பார்த்துப் பிரமிக்க வேண்டியது மில்லை. கொட்டாங்கச்சியை நம் அங்கையால் அளந்துவிட முடியும் ; ஆனால், அதிலே வாழ முடியுமோ? முடிந்தாலும், அது இன்பமாமோ ? நம்முடைய அறிவும் உணர்வும் வரம்பில்லாப் பிரயாணம்செய்ய, ஓர் அகண்டம் இருப்பதுதானே பெருமை ? அந்தப் பிரயாணமே பேரின்பமாகும்.

எப்படிப்பட்ட புஸ்தகம் படிப்பது ? அதற்கு எனக்கு ஒரே ஒரு வழிகாட்டிதான் உண்டு. அது என் மனதேயாகும். ஒரு புஸ்தகத்தைக் கையிலெடுத்து, ஒன்றிரு பக்கம் படிப்பேன். அதற்குள் அது என் மனதைக் கவர வேண்டும். இல்லாவிட்டால், அதை எறிந்துவிடுவேன். ஒரு புஸ்தகம் என் மனதுக்கு இனிப்பாகவும் ரசமாகவும் இருந்தால்தான் அதை நான் படிப்பேனேயொழிய, யாராரோ பெரியோரெல்லாம் அதைப் புகழ்ந்திருக்கிறார்களே என்பதற்காக நான் ஒரு புஸ்தகத்தைப் படிப்பது கிடையாது. ஊரெல்லாம் பிரபலப்படுகிறதே என்பதற்காகவும் நான் ஒன்றைப் படிப்பது கிடையாது. ஊரின் அபிப்பிராயமும் ருசியும் ஒரு சமயம் மாதிரி, ஒரு காலத்தில் மாதிரி, மறு காலத்தில், மறு சமயத்தில் இருப்பதில்லை. பத்து வருஷத்துக்குமுன் ஊரார் விழுந்துவிழுந்து படித்துக்கொண்டிருந்தவைபோன்ற பத்திரிகைகளையோ புஸ்தகங்களையோ இன்று படிக்கிறார்களா ? இல்லை என்றால், அதன் காரணமென்ன ? பத்திரிகை, புஸ்தகம் என்பதும், நடையுடை பாவனைகளைப்போலவே ஒரு 'பாஷன்'— நாகரிக மோஸ்தர். ஜனங்களில் முக்கால்வாசிப் பேர், தாங்கள் எதைப் படித்துக்கொண்டிருக்கிறோம் என்று தெரியாமலே படித்துக்கொண் டிருக்கிறார்கள். ஆகையால், இந்தப் படிப்பு விஷயத்தில் மாத்திரம் பொதுஜனச் செல்வாக்கை நான் நம்புவதே யில்லை. விமர்சகர்களையும் பெரும்பாலும் நான் நம்புவதில்லை. ஏனெனில், அவர்களில்

பாதிப்பேருக்கு எதிராறு நீஞ்சுவதில் ஆசை ; மறு பாதிப் பேர் ஆற்ரோடு போகிறவர்கள். இந்த இரண்டுக்கும் நான் தயாரில்லை.

பொதுஜனங்கள் மாத்திரமென்ன? தனிப்பட்ட ஒவ்வொருவருக்குமே, ஒரு பருவத்தில், ஒரு சமயத்தில், ஒரு மனோ நிலையில் இனித்த ஒரு நூலே மறுபருவத்தில், மறு சமயத்தில், மறு மனோநிலையில் கசப்பா யிருக்கிறது. ஆகையால், ஒரே நூலை, நான் பல பிராயங்களில், பல சமயங்களில், பல மனோ நிலைமைகளில் படிக்க முயன்றிருக்கிறேன். எந்தப் புத்தகமாயினும் நிரம்பக் கஷ்டப்பட்டுப் படிக்கும் வழக்கமே எனக்குக் கிடையாது; படித்ததை உருப்போடும் வழக்கமும் ஒருபோதும் எனக்கில்லை. ஆகையால், நான் படித்த புஸ்தகங்களில் உள்ள விஷயங்கள்—கதைகளா யிருந்தால் கூட—எனக்குப் படித்தபடி ஞாபகம் இருப்பதில்லை.

புஸ்தகங்களை நான் படிப்பதே ஒரு தினுசு. படிக்கும் போது, புஸ்தக விஷயம் அப்படியே என் மனதில் போய் விழுவதில்லை ; புஸ்தக வாக்கியத்துக்குப் பின்னே மறைந்து நிற்கும் கருத்துக்களும் அவற்றின் நிழல் ஒளிகளும் கூடச் சேர்ந்து, என் மனதைத் தாக்குவதால் ஏற்படும் கிளர்ச்சி தான், புஸ்தகப் படிப்பில் என் மனதில் விழும் பிரதிமை யாகும். புதிய விஷயங்கள், புதிய கருத்துக்களைக் காணும் போதே, என் மனம் முஸ்தீப்பாகி அவற்றுடன் கண நேரத்தில் மல்லுக் கட்டி ஒரு முடிவுக்கு வந்து விடுகிறது. அந்த முடிவுதான் என் மனதில் பதியுமே ஒழிய, புஸ்தகத்தில் கண்ட கருத்துக்களின் 'போட்டோ', என் மனதில் இடம் பெறுவதே யில்லை. ஆங்கிலப் புஸ்தகம் ஒன்றைக் கையிலெடுத்தேனானால், அப்படியே ஆங்கில வாக்கியங்கள் மனதைப் பற்றுவதேயில்லை. 'போட்டோ'க் கருவியில் படம் தலைகீழாய் விழுகிறமாதிரி, ஆங்கில வாக்கியங்களின் தமிழ்க் கருத்துக்கள்தான் 'கிர்' என்று என் மனதை எட்டிப் பிடிக்கின்றன. இந்த முறையிலேயே நான் புஸ்தகங்களைப் படிப்பதால், என் மனதுக்குப்

பிடித்தமானது எனக்குப் பழையதாய்ப் போனதே கிடையாது. நாலு வருஷத்துக்கு முந்திப் படித்த அதே புத்தகத்தை இன்று படித்தேனானால், அது எனக்கு இன்று புதிதாகவே தோன்றுகிறது; என் மனதிலே புதிய சிந்தனைகளையே கிளப்பிவிடுகிறது. என் புஸ்தகங்கள், என்னுடைய பூந்தோட்டம். என் மனத்திலே சோர்வோ, கவலையோ, சலிப்போ, களிப்போ, துயரமோ இந்த உணர்ச்சிகளில் எதுவேனும் தலைதூக்கி நின்று என்னைத் திண்றச் செய்யும்போதெல்லாம், அந்தப் பூந்தோட்டத்துக்குள் நான் புகுந்துவிடுவேன். அந்தந்த மனோ நிலைமைக்கேற்ற புஸ்தகத்தைப் பொறுக்கிக்கொண்டு படிக்கத் தொடங்கிவிடுவேன். அதனால் எனக்குக் கிட்டும் ஆறுதலும் இன்பமும் வர்ணித்துச் சொல்லமுடியாதவையாகும். மன நோய்க்கு மருந்து, மனித குலத்தின்பொது மனத்திலிருந்து பிறந்த சிந்தனை மலர்ச் செடிகள் நிரம்பிய அந்தப் பூந்தோட்டத்தின் மந்த மாருதத்தையன்றி வேறொன்று முண்டோ?

அந்த மனிதர் ஏன் கலப்பு மணம் செய்துகொண்டார்? இப்படி ஒரு பிரச்சினை ஒரு நாள் காலையில் எனக்கு உதித்தது. ஆபீஸுக்குப் போனதும் ஒரு கட்டுரை எழுத வேண்டிய நாள் அது. ஆகையால், இந்தக் கலப்பு மண விவகாரத்தையே வியாசம் பண்ணிவிடலாம் என்பது அடுத்த யோசனை. ஆனால், கலப்பு மணத்தைக் கலப்பு மணத்திலிருந்து ஆரம்பிக்க வழி புலனாகவில்லை. ஆகையால், பிரம்மசாரியிலிருந்து தொடங்குவதென்று தீர்மானித்தேன். வானத்துப் பட்சி ஜாலங்கள்போல, என் மனவெளியிலே, 'சிவ்' என்று பல எண்ணத்திரள்கள் பறந்தன. ஆனால், ஆபீஸுக்கு வந்ததும் ஓர் எண்ணமாவது மிகுந்திருக்க வேண்டுமே! ஒன்றுகூடக் கிடையாது. மிச்சப்பட்டது 'பிரம்மசாரி'தான். அந்தப் 'பிரம்மசாரி' சும்மா இருக்கவில்லை. பிரம்மசாரிச் சேஷ்டைகள் செய்துகொண்டேயிருக்கிறான். அதாவது, வேறு எந்த எண்ணத்தையும் மனதுக்குள் வரவிடாதபடி விரட்டிக் கொண்டிருக்கிறான். இந்த் அவஸ்தை பல சமயம் நமக்குச் சர்வசாதாரணமாக நேரிடுகிறது.

கர்மத்துக்குப் பலனுண்டு. கருத்துக்குப் பூர்த்தி தேவை. பிசாசைச் சிருஷ்டித்தால், அதற்கு ஏவல் தர வேண்டும்; இல்லையானால், சிருஷ்டித்தவனையே அது வதைக்கத் தொடங்கிவிடும். எண்ணம் அநேக சமயங்களில் ஒரு பிசாசாய்த்தான் இருக்கிறது. அதற்கு ஒரு பூர்த்தியை நாம் தேடாவிட்டால், அது நம்மை அனவரதமும் வாட்டிக்கொண்டேயிருக்கிறது. ஆகையால்தான், நாம் நல்ல எண்ணங்களையே சிந்திக்கும் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். நல்ல பொருள்களிடையே நடந்து, நல்ல சந்தர்ப்பங்களிலே கலந்து, நல்ல சகவாசம் படைத்து வாழ்பவனுக்கு, நல்ல எண்ணங்களே உதிக்கும் பழக்கம் பலப்படுகிறது. அப்படிப்பட்டவனுக்கு

அவனையு மறியாமல் கூடத் தீய எண்ணங்கள் பிறக்க மாட்டா; பிறந்தாலும், அது மிகமிக அபூர்வமே யாகும்.

"ஒரு கப் காப்பி சாப்பிட்டால் தேவலை" என்ற எண்ணம் உதிக்கிறது. "சே! இப்போ என்ன காப்பி?" என்று, அதை அடக்கிப் புறப்படுகிறீர்கள். அன்று பூரா வும் ஒரு வேலையும் ஓடுவதில்லை. எதை எடுத்தாலும், "ஒரு கப் காப்பி" சாப்பிடாத ஞாபகம் திரும்பத் திரும்ப வந்து கொண்டே யிருக்கிறது. சில சமயம் அந்த ஒரு "கப் காப்பி"யை யாரிடமாவது உளறக்கூட உளறிவிடு கிறீர்கள். சனியன்! அந்த ஒரு கப் காப்பியை அப்போதே குடித்துத் தொலைத்திருந்தால், இந்தச் சோழன் எண்ணம் அப்போதே செத்திருக்குமல்லவா? எண்ணத்தைக் கொல்ல, அதை அடக்குவதைவிட, திருப்தியோ, பூர்த்தியோ செய் வதே சிறந்தவழி என்றுதான் தோன்றுகிறது.

சில வேளைகளில் இந்த எண்ணங்களின் அவதியைச் சகிக்க முடிவதே யில்லை. ஓர் எண்ணத்தைப் பூர்த்திசெய் யப்போக, ஒன்பது எண்ணங்கள், ரயில் வண்டித் தொடர் போல, ஒன்றன்பின் ஒன்ருக வந்து நம்மைத் தாக்குவதும் உண்டு. ஒரு 'கப்' காப்பி சாப்பிடப்போனல், இட்டலி யின் மீதும் நாட்டம் செல்கிறது. இட்டலியும் காப்பியும் முடிந்தால், வெற்றிலை பாக்கு. அப்புறம் தாம்பூலமாத்திரை! இப்படி மனக்குரங்கை எதேச்சையாய் அலையவிடுவதா? சரி, அதுவும் தொல்லைதான். எண்ணங்களை அடக்கினுலும் தொல்லை, அடக்காவிட்டாலும் தொல்லை என்ருல், போகும் வழிதான் என்ன? அதற்காகத்தான் நல்ல எண்ணங் களிலே, நல்ல பொருள்களிலே சிந்தையைச் செலுத்தும் மனப்பழக்கம் வேண்டும்.

எண்ணங்களின் இன்னொரு வேடிக்கை என்ன வென் ருல், ஒரே ஓர் எண்ணத்தினின்றும் பல எண்ணங்கள் கப்பும் கிளையுமாய் வெடித்துப் பூப்பதுதான். யூக்லிட்டின் க்ஷேத்திர கணிதம் போல, மிகச் சில எண்ணங்களை வைத் துக்கொண்டு, தர்க்கப் பிரயோகத்தின் மூலம், பல புதிய உண்மைகளைக் கண்டு பிடிக்கும் விநோதத்தைத்தான்

இப்படிக் குறிப்பிடுகிறேன். ஒன்றரை வார்த்தையை வைத்துக்கொண்டு, ஒரு கட்டுரையை ஆரம்பிக்கிருர் ஓர் ஆசிரியர். அது ஒரு புத்தகமாய் வளர்ந்து விடுகிறது. குடகிலே உற்பத்தியாகும் காவிரி அருவிபோல, அந்த ஒன்றரை வார்த்தை குறிப்பிடும் எண்ணம், எதிர்ப்பட்ட மரஞ்செடி பாறைகளை யெல்லாம் திரட்டி யடித்துக் கொண்டு வரும் பெருவெள்ளம் ஆகி விடுகிறது. இது தான் யூக்லிட்டின் க்ஷேத்திர கணிதவேலை. ஒரே ஓர் எண்ணத்தை, கருத்தை, நாலா திசைகளிலும், பொருள்களிலும் தாக்கும்போது, பல புதிய எண்ணப் பொறிகள், மத்தாப்புச் சுடர்போல உதிர்கின்றன.

ஒருவனது மனதிலே உதிக்கும் ஓர் எண்ணம் பாஷையின்மூலம் வெளிப்படுவதையும், லட்சக்கணக்கான பிறருடைய உள்ளங்களை அது தாக்கிக் கலக்குவதையும் நினைக்கும்போதெல்லாம், ரேடியோ, விமானம் முதலிய அற்புதங்களை யெல்லாம் விடப் பெரிய வியப்பாக இது எனக்குத் தோன்றுவதுண்டு. பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னே பாடிய ரிஷிகளின் ரிக்குகளும், வால்மீகியின் காவியமும், ஹோமரின் இலியட்டும், கண்ணனின் கீதையும், வள்ளுவர் குறளும், பிந்தி வந்த பெரும் புலவர் சிந்தனைகளும் தொடங்கி, இன்று ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள பெரியோருடைய கருத்துக்கள் வரை, நித்திய சௌந்தர்யத்துடன் நம்மைச் சூழ்ந்து பந்தலிடும்போது, நாம் என்ன ஆனந்தம், என்ன பரவசம் அடைகிறோம்! எண்ணங்களை ஜனிக்கச் செய்வதும், அவற்றை அனுபவிப்பதும், அதன் மூலம் மனோலோகத்தில் சஞ்சரிப்பதுமான அற்புத பாக்கியம் மனிதனுடைய ஏகபோக உரிமை. இன்னலை இன்பமாகவும், குடிசையை மாளிகையாகவும், ஆத்திரத்தை அன்பாகவும், அனலைக் குளிர்ச்சியாகவும் மாற்றிவிடக்கூடிய ரசவாத சக்தி எண்ணங்களுக்குத்தான் உண்டு. இந்த அதிசய பாக்கியத்தைப் பெற்றிருக்கும் மனிதனுக்குத் துன்பமும் தோல்வியும் ஏது?

கலையும் புலமையும்

ஜன சமூக வாழ்வு எவ்வாறு நடக்கிறது என்பதைக் கூர்ந்து நோக்கினல், அதில் பெரும் பகுதி உணர்ச்சிகளின் சக்தியும் சிறுபகுதி அறிவுத் தெளிவின் ஒளியும் கலந்திருப்பது புலப்படும். மனிதன் தனது ஒவ்வொரு சிறு இயக்கத்துக்கும் காரணகாரிய ஆராய்ச்சியைப் பரிபூரணமாகச் செய்ய முயன்ருனல், அவனுக்கு வாழ்வு கிடையாது. பிரபஞ்ச இயக்கத்தின் மூல காரணம், வெறும் அறிவுத்தெளிவுக்காரனின் கைக்கு அகப்படாது. வாழ்வு எதற்கு என்று கேட்டால், அதற்குக் காரணகாரிய ஆராய்ச்சிகள் செய்துகொண்டிருக்க முடியுமா? 'நான் அதைப்பற்றி ஆராயவேண்டிய தேவையில்லை; நான் வாழப் பிறந்து விட்டேன்; இனி வாழ்ந்து தாகை வேண்டும்' என்றே பதில் சொல்லுவோம்.

உணர்ச்சிகள்தான் உயிர்; அவைகளுக்கு வழிகாட்டுவது அறிவு. உணர்ச்சிகள் இல்லாவிட்டால் வாழ்வேயில்லை; அறிவு இல்லையானல், வாழ்வின் அனுபவம் இல்லை. உணர்ச்சிகளுக்கு அனுபவம் உண்டு என்ருலும், அது அறியப்படுவது அறிவினல்தான். அனுபவத்தை அறியும் அறிவு இல்லாதபொழுது, அனுபவம் சூன்யமாகிறது. உயிருக்கு ஒளி அறிவு; வாழ்ந்தாக வேண்டிய வாழ்வுக்குச் சுவை பயப்பவை கலைகள். மனிதனுடைய நம்பிக்கைகள், ஆர்வங்கள், கற்பனைகள், இச்சைகள் ஆகிய இழைகளால் பின்னப்பட்டவை கலைகள். உணர்ச்சிகளின், உயிரின், ஊக்கம் கலைகளாகப் பரிணமிக்கிறது.

விஞ்ஞானப் புலமை, வாழ்வுக்கு ஒளி நல்குவது. என்று தினம் மனிதன் தனது பகுத்தறிவை உபயோகிக்கத் தொடங்கினனே, அன்று தினமே விஞ்ஞானப் புலமை தோன்றிவிட்டது. மனிதனின் ஆசைகளுக்கும், நம்பிக்

கைகளுக்கும், இச்சைகளுக்கும் அகன்ற களனாக இந்தப் பிரபஞ்சத்தை, அறிவு காட்டியது. அறிவும் உணர்ச்சிகளும் பரஸ்பரம் தோழமை கொண்டன. இரண்டின் இயக்கங்களும் கூடித்தான் மனிதனுக்கு ஒரு நாகரிகம் நல்கின. இரண்டில் எதை அழித்துவிட்டாலும், மனிதன் வீழ்ந்துபோனான். மனித வாழ்வுக்குக் கலைகளும் வேண்டும்; விஞ்ஞானப் புலமையும் வேண்டும். உயிர் இல்லா விட்டால், உடலுக்கு இயக்கமில்லை. உடல் இல்லையானால், உயிரின் இயக்கத்துக்கு அறியப்படும் தன்மையில்லை; எனவே, உண்மையில்லை.

விஞ்ஞானப் புலமை, அறிவால் காணப் பெற்ற உண்மைகளை நிறைத்து வைத்த பொக்கிஷம்; கலைகள், மனித வாழ்வுக்கான சுவைகளை நிரப்பி வைத்த களஞ்சியம். 'வாழ்வை வாழ்' என்று பணித்து, ஊக்கமூட்டுபவை கலைகள். 'வாழ்வுக்கு இது வழி' என்று சுட்டிக் காட்டுவது விஞ்ஞானப்புலமை. உள்ளத்தை விரிவுபடுத்துவது கலை; அறிவை விசாலப்படுத்துவது விஞ்ஞானப் புலமை.

கலைகளும் விஞ்ஞானப் புலமையும் உயிரும் உடம்பும் போல, பரஸ்பரம் பல விஷயங்களில் ஒன்றியும் நிற்கின்றன. விஞ்ஞானப் புலமையை ஒரு படி ஏற்றுவிக்க, கலைகள் உதவுகின்றன. கலைகளுக்குப் புதிய வழிகளைக் கோலியளித்து, புதிய களன்களைச் செப்பனிட்டுத் தருகிறது விஞ்ஞானப் புலமை. பிரபஞ்ச வாழ்வின் மர்மத்தை, கற்பனைக் கண்கொண்டு விளக்க முயல்கின்றன கலைகள்; அதனை அறிவுக்கண் கொண்டு வெளிப்படுத்த முயல்கிறது விஞ்ஞானப் புலமை. ஆசையைத் தோற்றுவிப்பது கலை; அதனைப் பூர்த்தி செய்வது விஞ்ஞானப் புலமை. அன்பைத் தூண்டுவது கலை; அதனைக் கொண்டு செலுத்துவது புலமை. இன்பத்தை விழைவது கலை; அதற்குக் களனை ஆக்கித் தருவது புலமை.

"எனது இறுதியான பாட்டிலே, இன்பத்தின்—அமித பரவசமாக மண்ணிலே பசும் புல்லின்மேல் பாயும்

இன்பத்தின்—அகண்ட உலகிலே பிறப்பும் சாவுமான இரட்டைச் சகோதரரை ஆனந்த தாண்டவம் செய்யச் செய்துள்ள இன்பத்தின் — உயிர்களெல்லாம் நகைக்கக் குலுக்கி யெழுப்பும் புயலால் பெருகும் இன்பத்தின்— வருத்தமென்ற செந்தாமரை மலர் மீது கண்ணீரோடு அமைதியுடன் அமர்ந்திருக்கும் இன்பத்தின்—தனக்குள் ளதை யெல்லாம் மண்மீது தூற்றி ஒரு சொல்லும் சொல்லவறியாது அமையும் இன்பத்தின்—இசைகளெல் லாம் கலப்பதாக" என்று அஞ்சலி செய்கிறார் கவி ரவீந் திரர். இந்த மந்திர சக்தி கலைகளுக்கே உரிய தாகும்.

புல்லின்மேல் இன்பத்தைப் பாயச் செய்வதும், பிறப் பின் குதூகலத்திலும் மரணத்தின் பயங்கரத்திலும் பரவச உணர்ச்சியை உண்டாக்குவதும், புயல்போல் வரும் கஷ்டங்களினு லுண்டாகும் மெய்விதிர்ப்பிலே தன்னை மறந்த ஒரு வியப்பை அடையும்படி செய்வதும், வருத்தக் கண்ணீரால் உள்ளமறியாத உயர் உணர்ச்சி யொன்றின் இன்பத்தை ஊட்டுவதும், தியாகத்திலே ஒரு சாந்தியை நல்குவதும் கலைகள்தான். கலைகள் இதயத்தைக் கவர் கின்றன; ஓர் அகண்ட உணர்ச்சியை உண்டாக்குகின் றன; பரந்த ஆனந்தத்தைத் தருகின்றன; தன்னை மறந்துவிடச் செய்கின்றன.

அழகைக் கண்டு ஆனந்திக்கச் செய்பவை கலைகள்; அனுதாபத்தை உண்டாக்குபவை கலைகள். கலைகளுக்குக் கட்டு இல்லை; வரம்பு இல்லை. கலைஞனின் கற்பனை யுள்ளம், அறிவு அறியாத இடங்களிலெல்லாம் உலவு கிறது. சூட்சுமமான பொருள்களையெல்லாம் காண முயல்கிறது. மனிதன் ஆகாயத்தில் சஞ்சரிக்கக் கற்கு முன்பே, அவனை வானவுலகமெல்லாம் உள்ளத்தால் சுற்றி வரச் செய்தது கலை. ஆனால், கலை கண்ட கனவைப் பூர்த்தி செய்துவருவது விஞ்ஞானப் புலமைதான்.

கலைகளின் வழியும் விஞ்ஞானப் புலமையின் வழியும் வெவ்வேறானவை. 'என் நாடி நரம்புகளிலே இரவும் பகலும் ஓடிக் கொண்டிருப்பது எந்த ஜீவ சக்தியோ

அதுவே உலகெலாம் ஓடி, இன்னிசைக்கிசைய நர்த்தனம் புரிந்து கொண்டிருக்கிறது' என்ற கவிதையுணர்வினின்றும் எழுபவை கலைகள். காணும் பிரபஞ்சத்தினின்றும் மனிதனுக்குப் புலனாகும் பொருள்களையும் உண்மைகளையும் கொண்டு எழுப்பப்படும் கட்டிடமே விஞ்ஞானப் புலமை. விஞ்ஞானப் புலமை, கட்டக் கட்ட உயர்ந்து செல்லும்; கலையின் கட்டிடமோ, எல்லையின்றிப் பரந்து கிடக்கும் இயற்கையின் கட்டிடம். அந்தக் கட்டிடத்தின் ஓர் அம்சத்தைக் கண் முன்னே திடீரெனத் தோற்றி மறைக்கும் அற்புத சக்தி வாய்ந்தது கலை. விஞ்ஞானப் புலமை வீட்டுக்குள்ளே ஏற்றிவைக்கும் தீபம்; கலையோ பல கோடி மைல்களுக்கு அப்பாலிருந்து பறந்து வரும் கதிரவனின் சில கதிர்கள்.

கலைகள், ஒழுக்கத்தை வளர்க்கின்றன; ஆனால், அதற்குக் கட்டுப்படுவதில்லை. விஞ்ஞானப் புலமை ஒழுக்கத்தைப் பற்றிக் கவலை கொள்ளுவதில்லை; ஆனால், அதனால் தனது போக்கை மாற்றிக்கொண்டு விடுகிறது. இரண்டும் மனிதரது தனித் தன்மையைப் பிரகாசிக்கச் செய்கின்றன. மனித நாகரிகத்தை வளர்க்கும் இரட்டைச் சகோதரர்கள் கலைகளும் விஞ்ஞானப் புலமையும். இரண்டும் ஓங்க, மனித நாகரிகம் உயர்கிறது; மனிதன் தெய்வதமானதோர் உயர் நிலையை நோக்கி மெல்ல மெல்லச் செல்லுகிறான். எனவே, மனிதர்களுக்குக் கலைச் சுவை வேண்டும்; அறிவு விளக்கத்துக்கான விஞ்ஞான நூல்களின் பரிச்சயமும் வேண்டும். கலைச்சுவை இல்லாதவனுக்கு வாழ்வின் இன்பம் கிடையாது; விஞ்ஞான உண்மைகளைக் கல்லாதவனுக்கு அறிவுப் பிரகாசம் ஏற்படாது. தனி ஒரு மனிதனின் வாழ்வு எல்லைக்குட்பட்டதுதான். ஆனால், மனித வருக்கப் பொது வாழ்வின் சிறப்பை யெல்லாம், பெருமையை யெல்லாம், அனுபவத்தை யெல்லாம், ஞானத்தை யெல்லாம் அவன் அடையச் செய்பவை கலையும் விஞ்ஞானப் புலமையுமேயாகும்.

வாழ்வும் மொழியும்

'மொழி வளர்ச்சி' 'மொழி வளர்ச்சி' என்ற பேச்சு, சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் கிளம்பி யிருக்கிறது. மொழி வளர்ச்சி, எப்படிப்பட்டது? எதற்கு? மொழி வளர்ச்சி, யார் கையில் இருக்கிறது? புராதன இலக்கிய இலக்கணங்களிலே மட்டில் புகுந்துழன்று, தற்கால உலகத்தினின்றும் தங்களைக் கத்தரித்துக்கொண்டு, வளர்ச்சியையும் வாழ்வையும் உணராத பண்டிதர்களின் கையிலே தான் மொழி வளர்ச்சி இருக்கிறதா? மனிதனது சுயானுபவத்தைப் பொது உடைமையாக்க முயலாது, பிறரைக் கிள்ளைபோல் நகல் செய்யும் கிராமபோன் பெட்டிகளாக மனிதர்களை ஆக்குவதற்கா மொழி வளர்ச்சி? பழைய சொற்களை, பழைய பதத் தொடர்களை, பழங் கருத்துக்களடங்கிய வசனங்களை, புதுப்புது அடுக்குகளாக்கித் தரும் செப்படுவித்தைதான் மொழி வளர்ச்சியோ? மொழியை வளர்ச்சியுறச் செய்தல், மொழியின் உயிர்த் திறனைப் பெருக்குவது எவ்வாறு? இந்தக் கேள்விகளைப் பற்றிச் சிறிதும் சிந்தியாமலே நாம் மொழி வளர்ச்சியைப் பற்றிப் பேசி விடுகிறோம். சுயசிந்தனை யில்லாத, பொருளற்ற நூல்களும் பல தோன்றி விடுகின்றன. அவற்றை நோக்கும் போது, அச்சும் பணமும் அறிவு வளர்ச்சிக்கும் கலைவளர்ச்சிக்கும் முட்டுக்கட்டை யாகி, அவற்றிற்குச் சாதனமான மொழியையும் சீரழித்து வருகின்றனவோ என்று கூடத் தோன்றுகிறது.

மொழி என்பது என்ன? மொழி எப்படித் தோன்றியது என்ற புராதன வரலாற்றை நாம் இங்கே ஆராய வேண்டிய தில்லை. இன்று தினம் மொழி மனிதனுக்கு எத்தகைய சாதனமாய் இருந்து வருகிறது, அதன் பயன் என்ன என்பவற்றை நிர்ணயித்துக் கொள்வது நமக்குப்

போதும். சுருங்கக் கூறினல், மனிதனது சிந்தனையை வெளியிடுவதற்கான தொரு பிரதம கருவியே மொழி என்று சொல்லலாம். மொழியின் பயன், சிந்தனையின் வெளியீடு, கருத்துக்களின் பரிமாற்றம் ஆகும். வாழ்க்கை அனுபவத்தினின்றும், கற்பனு சக்தியினுலும், அறிவு நுணுக்க ஆராய்ச்சிகளின் விளைவாகவும் மனிதரின் மனத்தகத்தே உறும் சிந்தனைகளையும் கற்பனைகளையும் அனுபவ உண்மைகளையும் நிறைத்து வைக்கப்பெறும் அற்புதப் பாண்டமே—களஞ்சியமே—இலக்கியம் எனப்படும்; அந்தக் களஞ்சியம் அமைவது மொழி என்னும் சாதனத்தால்தான்.

ஒரு தேசத்தின் இலக்கியம் என்பது இக்காலத்தில் மிக அகண்ட பொருளில் வழங்குகிறது. ஒரு நாட்டின் கலைகள் பலவற்றையும் பௌதிக ஆராய்ச்சிகள் பலவற்றையும் குறித்து வெளியா யிருப்பனவும், கற்பனையும் கவிதையும் நிறைந்தனவுமான உயர்தர நூல்கள் யாவற்றின் தொகுதியுமே இலக்கியம் என்றுதான் இக்கால அறிஞர் பலர் கருதுகிருர்கள். குறிப்பிட்ட சில காவியங்களே இலக்கியம் என்று அவர்கள் கருதுவதில்லை. இந்த விரிந்த பொருளிலேயே, நமது இலக்கியச் செல்வத்தை நாம் மதிப்பிட்டுப் பார்க்க வேண்டும். தமிழ் மொழி வளர்ச்சியின் பிரதிபிம்பத்தை அதன் இலக்கியப் பெருக்கிலேதான் நாம் காணுதல் வேண்டும்.

ஆனல், தமிழ் மொழி வளர்ச்சிப் பேச்சுப் பேசுவோர் பலரோ, விநோதமான முறைகளைக் கையாளுகின்றனர்; விசித்திரமான யோசனைகளைக் கூறுகின்றனர். மொழியை ஏதோ தனித்தியங்கும் ஓர் அந்தர வஸ்துவாக அவர்கள் கருதுகின்றனர். மனிதனது சமுதாய வாழ்வின் முதற் காரணம், மனிதகுலத் திரள் வாழ்வைச் சாத்தியமாக்கிய அற்புத சாதனம் பாஷையே என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. தச்சன் மரத்தை யிழைப்பது போலவும், கொல்லன் இரும்பைக் காய்ச்சி அடிப்பது போலவும், மனிதன் தனது பழம் புலமைத் திறத்தால் மொழியைத் தட்டி நீட்டி விடலாம் என்று அவர்கள் மயங்கிக்கொண்

டிருக்கிறார்கள். மொழிக்கு ஒரு ஜீவசக்தி இருக்கிறது. அதற்கு ஊட்டம் கிடைத்தா லன்றி, மொழியை வளர்க்க முடியாது என்பதை அவர்கள் ஏனோ உணர வில்லை !

தமிழ் மொழி வளர்ச்சிபற்றி இந்நாள் பேசுவோரில் பலர் என்ன செய்கிறார்கள் ? என்ன சொல்லுகிறார்கள் ? என்ன நினைக்கிறார்கள் ? பழம் நூல்களை-கவிகளை-மட்டில் படித்து, அவற்றில் உள்ள நயங்களைச் சித்திரவதை செய்து, கடின நடையில் எழுதுவோர் சிலர். பாக்களை மறக்காதிருக்கவும், ஒலி நயத்தால் பொருள் நயத்தைத் தொனிக்கவும், ஓசை யின்பத்துக்காகவும் தோன்றிய மோனையையும் எதுகையையும் ஒருவித நோக்கமும் எக் காரணமுமின்றிப் பெருவாரியாக உபயோகித்து வசன நடைக் கட்டுரைகள் வரைகின்றனர் சிலர். சுத்தமான தனித் தமிழ் வேண்டுமென்று கோஷிக்கிறவரும் உண்டு. 'தமிழ் பரிபூரண வளர்ச்சி பெற்று விட்டது ; இனி அது வளரவேண்டிய தேவை யில்லை ; நாம் அதை அப்படியே வழங்க வேண்டியதுதான் பாக்கி'—இவ்வாறு கருதுவோரும் இருக்கிறார்கள். மொழி வளர்ச்சி இவற்றா லெல்லாம் உண்டாகிவிடுமா ?

மொழியின் ஜீவநாடி—உயிர்த் தன்மை—மனிதனது வாழ்வில்தான் இருக்கிறது. மொழி வளர்ச்சி என்பது நெடுங்கணக்கிலும் எழுத்துக்களின் பலவிதச் சேர்க்கையாலுண்டாகும் சொற்குவியலிலு மில்லை ; மனிதனின் புதுப் புது அனுபவங்களி னின்றும் அவனுக்குத் தோன்றும் புதுப் புதுக் கருத்துக்களையும் விளங்கும் புதுப் புதுப் பொருள்களையும் வெளியிட, மொழி யென்னுங் கருவி சாமர்த்தியத்துடன் பயன்படுத்தப் பெற்று, இலக்கியம் பெருகுவதுதான் மொழி வளர்ச்சியாகும். மொழியின் வளர்ச்சியை அதன் பயனில்தான் காணவேண்டும். உழவு இல்லாவிட்டால், ஏருக்கு வேலை யுண்டா ? கருத்துக்களின் பக்குவமும் நிறைவும் பரிமாறலும் இல்லாவிட்டால், மொழிக்கு அலுவலேது ?

மனிதனது வாழ்வு பொங்கிப் பலுகிச் செயல் நிறைந்து நிற்குமானுல், மொழியின் பெருக்கமும் வளர்ச்சியும் தாமே ஏற்படும். சுருங்கக் கூறின், மொழி வளர்ச்சியின் நுட்பமே இதுதான். 'மரம் பழுத்தால் வெளவாலை வா வென்று இரந்தழைப்பார் யாருமங்குண்டோ?' செயல் நிறைந்த வாழ்விலே, அனுபவமும் சிந்தனேயும் நிறைந்து ததும்பும்; அங்கே மொழி, தானே பலுகி வளரும். ஞானம் சூன்யத்தின் குழந்தை யன்று; கர்மத்தின் பலனே யாகும். 'இலக்கியம் கண்டதற் கிலக்கண மியம்பலின்' என்பார்கள். உயிர்த்தன்மை குதூகலித்து உத்வேகத்துடன் வெளித் தோன்றி நிற்கும் வாழ்வெனும் இலக்கியத்துக்கு, இலக் கணமே யாகும் மொழி வளர்ச்சியின் பயனை இலக்கியம்.

வாழ்வு பெருகிச் செயல் நிறைந்து எழுச்சி கொண் டிருக்கும் பொழுதுதான், கலைகளும் பௌதிகசாஸ்திரங் களும் புதிதுபுதிதாய்த் தோன்றி வளரும். வாழ்வு மங்கிக் கிடந்தால், அதை ஜீவநாடியாக உடைய மொழிக்கு எங் கிருந்து உயிர்த் தன்மை வரும்? எனவே, மொழியின் வளர்ச்சிக்கு வாழ்வின் எழுச்சி இன்றியமையாத தாகும். ஔவையைக் குறித்து ஒரு கதை சொல்லுவதுண்டு. அரச சபையிலே ஒரு கொண்டாட்டம் நடந்தது. புலவர் பலரும் அங்கே ஆஜராகி யிருந்தனர். அவர் யாவரும் அரசனே வாழ்த்தி ஒவ்வொரு கவி பாடினுர்கள். ஔவை யின் முறை வந்தது. அவள் நீண்ட கவியொன்றும் பாட வில்லை. "வரப்புயர" என்று இரண்டே வார்த்தைகளைக் கூறி உட்கார்ந்தாள். பொருள் எவருக்கும் விளங்கவில்லை. ஔவையே தன் கருத்தை விளக்க வேண்டியதாயிற்று. "வரப்புயர நீருயரும்; நீருயர நெல்லுயரும்; நெல்லுயரக் கோலுயரும்; கோலுயரக் கோனுயரும்" என்ருள் ஔவை. இதேபோலத்தான், மொழியுயர நாம் வாழ்த்துக் கூற வேண்டுமாயின், வாழ்வுயரவே பிரார்த்திக்க வேண்டும்.

தமிழனுக்கு இலக்கியப் பெருக்கு - மொழி வளர்ச்சி, வேண்டுமென்ருல், அவனுக்குச் செம்மை கொண்ட

ஜீவசக்தி நிறைந்த, சுதந்தர வாழ்வு வேண்டும். அதனை அவன் வாழ்ந்தாகவும் வேண்டும். வாழ்வின் பல துறைகளிலும் ஈடுபட்டுப் பல கலைகளையும் வளர்த்துக் கொண்டு, செயலும் இயக்கமும் நிறைந்த வாழ்வை நடத்திக்கொண்டிருக்கும் மனிதருக் கிடையேதான் இலக்கிய கர்த்தர்கள் தோன்றுவார்கள். புராதன அரசர்களின் சபைகளிலே 'பாணர்கள்' என்று சொல்லப்படும் பாடகர்கள் உண்டு. இன்னும் ஆங்கில மன்னர் சபையில் ராஜாங்கப் பாடகர் ஒருவ ரில்லையா? இந்தப் பாணகர்களின் அலுவல் யாது? தங்கள் அரசரின் கீர்த்திச் செயல்களை, பெருமைகளை இசைத்துப் பாடுவதே அவர்களின் அலுவல். தமிழர்கள் இசைக்குரிய, கீர்த்திப் பிரதாபங்கள் கொண்ட, உயிர்த் தன்மை பொங்கித் ததும்பும், செயலும் இயக்கமும் ஓங்கிய வாழ்வை நடத்தினல், அவர்களது வாழ்வின் பெருமையை இசைத்துப் பாடும் 'பாணர்கள்' - நவயுக நூலாசிரியர்கள் - தாமே தோன்றி விடுவார்கள்; உயிர்த் தன்மை நிறைந்த மொழி வளர்ச்சி உண்டாகும்; புதுப் புது நூல்கள் உதயமாகும்.

வான்மதி கண்ட வாரிதியைப்போல் திரை கொழித்து ஒலி செய்யும் ஆங்கில இலக்கியத்தை நோக்குங்கள். அது எவ்வாறு உயிர்த் தன்மை பெற்றிருக்கிறது; எவ்வாறு வளர்கிறது? ஆங்கிலேயர் செயல் நிறைந்த, ஊக்கம் மிகுந்த வாழ்வை நடத்துகிறுர்கள். ஆங்கில இலக்கியத்தின் ஜீவநாடி - ஆங்கிலேயரின் வாழ்வு - தேங்கிக் கிடக்கவில்லை. ஆங்கிலம் வளர்ந்துகொண் டிருக்கிறது என்பதில் ஆச்சரியமுண்டோ? ருஷ்யாவில் நேற்றுக் கிளம்பிய பொது உடைமைப் புரட்சியைத்தான் நோக்குங்கள். மனிதர்கள் எழுச்சி கொண்டார்கள். ஆவேசமாகக் கிளம்பினர்கள். சிந்தனையைக் கிளறின அந்தக் காட்சிகள். பொது உடைமைக்கென்றெரு தனி இலக்கியம் தோன்றி, உலகத்தையே சூழ முயல்கிறது. நாடகம், நாவல், மற்றும் பல பொருள் நூல்களெல்லாம், பொது உடைமைக்

கொள்கையுடனும் நோக்கோடும் புதிதாய்த் தோன்றி விட்டன.

நமது நாட்டையே நோக்குவோம். வைத்தியம், வான நூல், அறநூல், காவியம், தத்துவம், வேதாந்தம் முதலிய னவும் மற்றும் பல கலைகளும் முற்காலத்து நிலவி யிருந்தன. அந்தக் கலைகளும் காவியங்களும் இப்பொழுது வளர்ந்து கொண்டிராத காரண மென்ன? அதன் மர்ம மென்ன? அவை தோன்றிய காலம், செயல் நிறைந்த வாழ்வு நடத் தப்பட்ட காலம். அனுபவத்தால் பல உண்மைகளைக் கண்டார்கள்; தேவையால் பல பொருள்களை ஆக்கினார் கள்; ஆவலும் ஊக்கமும் பல விளைவுகளைத் தந்தன; இயக் கம் மிகுந்த வாழ்விலே, முட்டி மோதி உயர்ந்தெழ விரும் பிய ஆர்வத்திலே பல கற்பனைகள் உதித்தன; அகண்ட இயற்கையின் அந்தரங்கத்தைப் பீறி வாழ்விலிசைத்து அதனைத் தெய்விகமாக்கத் தோன்றிய முயற்சியிலே பல தத்துவங்கள் விளங்கின, சித்திரங்கள் புலப்பட்டன— இலக்கியக் கடல், கலைச் செல்வ வாரிதி, 'வெள்ளலைக் கைகளைக் கொட்டி முழக்கி' ஆர்ப்பரித்தது.

மொழிக்கு வாழ்வே ஜீவநாடி யென்றால், வாழ்வுக்கு மொழியால் பயனில்லையா? பயனில்லை யென்றால், மொழி யைப்பற்றி நாம் இவ்வளவு தொல்லைப்படத் தேவையே யில்லையே. வாழ்வுக்கு மொழியாலும், மொழியின் சோலை யான இலக்கியத்தாலும் நிறைந்த பயனுண்டு. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மனித குலம் கண்ட அனுபவங் களையும், அவற்றின் விளைவுகளையும், பார்த்த உண்மைகளை யும், தேர்ந்த தத்துவங்களையும் அடக்கிக்கொண்டு முன் னிற்கும் இலக்கியத்தால் மனிதனது வாழ்வுக்குக் கிடைக் கக் கூடிய பயன்களைத் தொகுத்துக் கூறவும் வேண்டுமா? பழைய அனுபவங்களையும் விளைவுகளையும் துணைக்கொண்டு, புதிய நிலைமைகளிலும் சந்தர்ப்பங்களிலும் தனது பாதைக் குச் சிறந்த எல்லையை - வேலியை - மனிதன் கட்டிக் கொள்ளலாம். அன்றியும் மனித சமூகத்தின் திரள் வாழ் வைச் சாத்தியமாக்கிய மூல சாதனமே மொழிதான்.

ஆதலால், மொழியின் வளர்ச்சியிலே மனிதன் சிரத்தை கொள்ளுவது இயல்பு. மொழிக்கு, வாழ்வு ஜீவநாடியாகும்; வாழ்வுக்கோ, மொழி மிகச் சிறந்ததோர் இன்றியமையாச் சாதனமாகும். தமிழிலக்கியத்தின் ஜீவநாடி எப்போது துடிதுடிப்பு எய்துமோ அப்போது தமிழ் மொழி, யாரையும் கேளாமலே வளர்ச்சி எய்தும். அது எப்போது?

ரஸத்தில் வெல்லம் ஜாஸ்தி என்றேன். ரஸத்திலாவது, வெல்லமாவது, என்று ஆச்சரியப்பட்டார் நண்பர். ஓட்டல்காரர் ஆமாம் என்று ஒப்புக்கொண்ட பிறகுதான், நண்பரின் சந்தேகம் தீர்ந்தது. ஆனாலும், "நீர் சாப்பாட்டு ராமன்" என்று கேலி செய்தார் நண்பர். "இல்லை. நீர் தான் சாப்பாட்டு ராமன். போட்டதை ருசி தெரியாமல் சாப்பிடும் கபந்த னல்ல நான்; சாப்பாட்டு ரஸிகன்" என்று திருப்பிவிட்டேன்!

* *

இலக்கியம் என்பது இலக்கண சூத்திரங்களின் பின்னல் என்கிறார் பழைய பண்டிதர். "இல்லை; அது ஓர் ஆகாசக் கோட்டை" என்கிறார் புதிய பண்டிதர். இடையிலே அகப்பட்டுக்கொண்டு நாம் திண்டாடுகிறோம்.

* *

கலையிலே பிரசாரம் இருக்கலாமா, கூடாதா? இதைப் பற்றி ஒரு பெரிய விவகாரம்! இருந்தாலு மிருக்கலாம்; இல்லாவிட்டாலும் போகலாம்: இருந்தாலும் இல்லா விட்டாலும், கலை கலையாகவே இருப்பது மாத்திரம் அவசியம் என்கிறேன். புரியவில்லையே என்று கதறுகிறார் நண்பர். "ஆண்டவனே! அவருக்குப் புரியச் செய்யேன்" என்று பிரார்த்திப்பதைத் தவிர, எனக்கு வேறு வழி யில்லை.

* *

அவருக்கு மேனாட்டு இலக்கியந்தான் 'மாடல்'. ஹார்டி சிறந்த இலக்கிய கர்த்தர்; உன்னதக் கலைஞர்; அவருடைய டெஸ், ஜூடு ஆகிய இரு சௌந்தர்ய சிருஷ்டிகளும் எப்படி உதித்தன? விவாகச் சட்டங்களின் - சமூகத்தில் நிலவும் மூட ஸம்பிரதாயங்களின் - கொடுமை அவரது உள்ளத்தைக் கலக்கியதன் பலன் அல்

லவா அவை? டால்ஸ்டாயின் அன்னு கரேனினு, கார்க்கியின் அன்னை ஆகியவற்றில்தான் ஒளிந்த பிரசாரம் இல்லையா? ஒளிந்த பிரசாரம் உன்னதக் கலையின் அழகு. பிரசார மில்லாத கலைப்பொருள்களும் எண்ணிறந்தன் உண்டு. கலையை நிர்ணயிக்க, பிரசாரம் இருக்கிறதா இல்லையா என்ற சோதனைதான் தவறு.

* *

"உங்கள் கட்டுரை அற்புதம்" என்கிருர் ஒரு நண்பர். அதே கட்டுரையை, "என்ன ஸார், நீங்ககூட, இப்படி உப்பு சப்பில்லாமல் எழுதிப்புட்டகள்" என்கிருர் இன்னெருவர். "உங்கள் கதை ஜோர். உங்கள் கட்டுரைகள் எனக்கு அவ்வளவு ரசிப்பதில்லை" என்கிருர் மற்ருெருவர். அதையே திருப்பிப்போட்டு, கட்டுரையைப் புகழ்ந்து, கதையைத் தோஷம் கூறுகிருர் வேருெருவர். நான் எல்லாரையும் திருப்திசெய்ய முயல்வேனுயின், 'கிழவனும் அவன் மகனும் கழுதையும்' கதைதான்.

* *

"துடிக்கும் துடிப்பு, நான் பார்க்கும் வஸ்துவிலே உள்ளதோ அல்லது என் கண்ணிலேதான் உள்ளதோ" என்று சந்தேகப்படுகிருர் சயின்ஸ் அறிஞர். நம் கலைப் பிரியர் சிலரோ, "என் கண்ணிலே உள்ள குற்றமும் காட்சியையே சேர்ந்தது" என்று வித்தாரம் பேசுகிருர்கள். 'தேவர்கள் அடிவைக்கவும் அஞ்சு மிடத்திலே மூடர்கள் துணிச்சலாய்ப் பாய்கிருர்கள்' என்ற ஆங்கிலப் பழமொழிக்குச் சாட்சியம் போலும்!

* *

"ஒரு சித்திரத்தின் முக்கியக் கருத்து-அம்சம்-பிரகாசமாய், பிரதானமாய் விளங்கும்படியாக, அதற்கு அனுகுணமான அளவுக்கே இதர அம்சங்களைத் தீட்ட வேண்டும்" என்று, ஒரு நாள் ஒரு நண்பர் கூறினுர். "இல்லவே யில்லை" என்று வாதித்தார் வேருெரு நண்பர். இன்னெரு நாள் இவர் கட்சியை அவரும் அவர் கட்சியை

இவரும் பேசினார்கள். "படத்தில் உள்ள ஒவ்வோர் அம்சமும் அது அதன் அலுவலைப் புரியும்படி ஸ்பஷ்டமாக வரையப்பட வேண்டும்" என்று முதல் நண்பர் ஆரம்பித்தார், "அன்று அப்படிப் பேசினீர்களே!" என்று எதிர்வாதம் செய்தார் இரண்டாவது நண்பர். "கேட்டகை எப்படிக் கூட்டத்தில் இறங்கலாம்?" என்று கேட்கும் அதே வாயே, "கேட்ட கை கூட்டத்திலா இறங்குவது?" என்று அடுத்த விநாடி சீறுவதை, சீட்டாட்டத்திலே நாம் எத்தனையோ முறை கண்டதில்லையா?

*   *

'மரத்தை மறைத்தது மாமத யானை; மரத்தில் மறைந்தது மாமத யானை' என்று பாடினார் திருமூலர். 'மரத்தை மறைத்த மாமத யானை'யைக் காண்பவனே கலைப் பிரியன். அவனுக்கு யானை உருவம்தான் முக்கியம். என்ன மரம், என்ன உளியைக் கொண்டு எப்படியெப்படிச் செதுக்கி யிருக்கிறான் என்பதைப் பற்றிய கவலை யெல்லாம் அவனுக்குக் கிடையாது.

*   *

ஒரு சினிமாவிலே கண்ணை உறுத்தும் கோர இடம் ஒன்று வந்தது. பார்க்கச் சகிக்கவில்லை. ஆனால், சினிமாக் கலை நுட்பங்களறிந்த நண்பர் ஒருவர் பக்கத்திலே யிருந்தார். அவர் அதைக் கண்டதும் "ஆஹா என்ன டெக்னீக்!" என்று ஆனந்தபரிதராகிவிட்டார். கையை அறுத்த கத்தியின் கூரை வர்ணித்தது போலத்தானிருந்தது இது! அதற்கு மறுப்பு முண்டோ?

*   *

'இலக்கியம் கண்டதற் கிலக்கண மியம்பலின்' என்றார் நன்னூலார். ஆனால், பண்டிதர்களோ 'இலக்கணம் கொண்டதே யிலக்கிய மென்ப' என்று பிடிவாதம் செய்கிறார்கள். இலக்கணம் ஒரு வழி காட்டி - ரயில்வே கால அட்டவணைப் புத்தகம் இல்லையா, அதைப் போல. ரயிலில் போவதற்குப் பதிலாக, அதன் கால அட்டவணைப் புத்த

கத்தில் ஒரு பிரகஸ்பதி ஏறி உட்கார்ந்து கொண்டானானால், எப்படி யிருக்கும்?

*　　　　　*

‘நல்ல கலையை ஸ்ரீமான் பொதுஜனம் விரும்பவில்லையே’ என்று பழி கூறுகிறார்கள் சிலர். இது அநியாயப் பழி. ஸ்ரீமான் பொதுஜனம் ‘வீர வணக்கம்’ செய்யும் பக்தர். இன்றும் பல தேசப் பொது ஜனங்களும் சொல்வதென்ன?

ஜெர்மன் பொதுஜனம்:—ஹிட்லரே தெய்வம்; நாஜீயமே மதம்.

இத்தாலிப் பொதுஜனம்:— முஸோலினியே கடவுள்; பாஸிஸமே சத்தியம்.

ரஷ்யப் பொதுஜனம்:—ஸ்டாலினே அவதாரம்; பொது உடைமையே சர்வ சஞ்சீவி.

பிரிட்டிஷ் பொதுஜனம்:—எத்தனையோ தெய்வம்; ஜனநாயக முத்திரையே சத்தியம்.

ஒன்றுக்கொன்று ஏதாவது சம்பந்தமுண்டா? இலக்கியம், கலைகளிலும், ஸ்ரீமான் பொதுஜனம் இதே மாதிரி ‘வீர வணக்கம்’ தான் செய்கிறார். வெற்றி கண்ட இடத்துக்கு ஸ்ரீமான் பொது ஜனத்தின் வாழ்த் துண்டு; பக்க பலமுமுண்டு.

3972

சக்தி மலர் 3472

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களைத் தெளி வான எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும்

'இலக்கணம் பெரிதா, இலக்கியம் பெரிதா? தர்மம் பெரிதா, வாழ்வு பெரிதா? சாஸ்திரம் பெரிதா, சங்கீதம் பெரிதா? இதிலே ஏற்பட்டிருக்கும் மயக்கமே பெரும் தடுமாற்றத்தை நம்மிடம் உண்டாக்கி யிருக் கிறது. ஒவ்வொரு கலை, சாஸ்திரங்களிலுமே இந்தக் குளறுபடி நிலவி யிருக்கிறது.' இந்தக் குளறுபடி தீரவேண்டுமென்று வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

சக்தி காரியாலயம்

வடக்கு வெளி வீதி, மதுரை